# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 11 வெள்ளிக்கிழமை (28.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 336




சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 14



21 குற்றம் சுமத்த காங்கிரஸ் முயற்சி



23 கடாபியின்மகன் சரணடைய விருப்பம்



25 இலங்கையை பதம் பார்க்கும் பாகிஸ்தான்

# கூட்டமைப்புக்குப் போட்டியாக சமரசிங்கவும் அமெரிக்காவில்

## ஐ.நா. செயலர் பான் கீ-மூனைச் சந்தித்துப் பேச்சு

நியூயோர்க், ஒக்ரோபர் 28

அமெரிக்க அரசின் உத்தியோக பூர்வ அழைப்பை ஏற்றுத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்கா சென்றுள்ள நிலையில் ஏட்டிக்குப் போட்டியாக இலங்கை அரச தரப்புப் பிரதிநிதிகளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்றக் குழு அமெரிக்க தலைவர்



களுடனான சந்திப்பை நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் ஆரம்பித்தது. தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான துணைச்செயலர் றொபேர்ட் ஒ பிளேக்கை இந்தக் குழு நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

அதே தினத்தில் ஜனாதிபதியினால் அமெரிக்காவுக்கு அவரச அவசரமாக அனுப்பி வைக்கப்பட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஐ.நா. பொதுச்செயலர் பான்கீ-மூனை

பக் 27

# அமைச்சரவையில் பெரும் மாற்றம்

கொழும்பு, ஒக்ரோபர் 28

வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் கையோடு அமைச்சரவையை அதிரடியாக மாற்றியமைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

அரச தலைமையின் இந்த அதிரடி நடவடிக்கையால் முக்கிய சில அமைச்சுகளின் பொறுப்புகளில் மாற்றம் ஏற்படும் என அறியமுடிகின்றது.

அமைச்சர்களின் செயற்பாடுகள், சில முக்கிய அமைச்சுகளின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் ஏற்படும் தொடர் நஷ்டம் உட்பட ஏனைய சில முக்கிய காரணங்களைக் கருத்திற்கொண்டே இந்த மாற்றம் நிகழ்த்தப்படவுள்ளது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ள ஜனாதிபதியின் செயலர் அந்த விடயங்கள் உள்ளடங்கிய முக்கிய அறிக்கையொன்றை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார் என நேற்று மாலை அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச தலைமைப்பீடத்தின் இந்த நடவடிக்கையால் அமைச்சர்கள் சிலர் அதிருப்தியடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய சில அமைச்சுகளின் கீழ் இயங்கும் நிறு

பக் 27

## பளையில் விபத்து 6 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பயணிகள் பஸ் ஒன்று, பளைப் பகுதியில் வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாகப் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் நால்வர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்

பக் 27

## மனித உரிமைப் பேரவையின் வெளிப்படைத் தன்மை குறித்து இலங்கை கேள்வி

கொழும்பு, ஒக்.28

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் வெளிப்படைத்தன்மை குறித்து இலங்கை அரசு கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் மூன்றாம் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கை அமைச்சர் மஹிந்த சமரசிங்க இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

மனித உரிமைப் பேரவையின் கட்டமைப்பு மற்றும் அமைப்புசார் நடவடிக்கைகள் முழு அளவில் பக்கச்சார்பற்ற தன்மை

பக் 27

# வடக்கு அபிவிருத்திக்கு ஜப்பான் 15 லட்சம் டொலர்கள் நிதி உதவி

கொழும்பு, ஒக்.28

வட மாகாண அபிவிருத்தித் திட்டங்களுக்காக 15 லட்சம் அமெரிக்க டொலர்களை ஜப்பான் அரசு ஒதுக்கியுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தில் ஜப்பான் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் உதவித்திட்டங்களுக்காக இந்த நிதியை ஜப்பான் ஒதுக்கியுள்ளது.

ஐ.ஓ.எம். என்ற நிறுவனத்தின் ஊடாக வடக்கில் மேலும்பல அபிவிருத்தி நலன் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொபுஹிடோ ஹோபோ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

வடக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் போன்று மீள் இணைப்புத் திட்டங்கள் மற்றும் மக்கள் நலத்திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும். அத்துடன், மனிதாபிமான உதவிகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப் படவுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்சமயம் பல அபிவி

பக் 27

# லிபிய இடைக்கால அரசு மீது சர்வதேச போர்க்குற்ற வழக்கு

## கடாபி குடும்பத்தினர் அறிவிப்பு

லண்டன், ஒக்.28

கடாபி மற்றும் அவரது மகன் கொல்லப்பட்டது போர் விதிமுறைகளுக்கு எதிரானது. எனவே, இது தொடர்பாக லிபிய அரசு மீது சர்வதேச நீதிமன்றில் போர்க்குற்ற வழக்குத் தொடரவுள்ளோம்.

- இவ்வாறு கடாபியின் குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

லிபியாவில் புரட்சிப் படையினர் தற்போது நாடு முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர். லிபிய அதிபர் கடாபி மற்றும் அவரது மகன் ஆகியோர் அவரது சொந்த ஊரான சிர்த் நகரில் புரட்சிப்படையால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கடாபி குடும்பத்தினர் பலர் தற்போது நாட்டை விட்டு தப்பிச் சென்று வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

போரில் கடாபி கொல்லப்பட்டது தொடர்பாகச் சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடரப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

கடாபி குடும்பத்தினர் சார்பில்

பக் 28

# இலங்கை அரசு எப்படித் தீர்வைத் தரும் தமிழர்கள்தான் கேட்டுப்பெற வேண்டும்


## யாழ்ப்பாணத்தில் இந்திய எம்.பி. அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக்.28

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வினை தமிழ் மக்கள் தாங்களேதான் கேட்டுப்பெற்றுக்கொள்ளவேண்டும். இலங்கை அரசு தரும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

-இவ்வாறு இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் கேள்வி எழுப்பினார். யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்து

பக் 27



# உள்நாட்டிலும் தீர்வு தரமாட்டோம்; வெளிநாட்டிலும் பேசவிடமாட்டோம்

## இதுதான் அரசின் நிலைப்பாடு என்கிறார் மனோ

கொழும்பு, ஒக்.28

உள்நாட்டிலே தீர்வுகாணப்படுவதற்கு இருக்கக்கூடிய அனைத்து வழிகளையும் இந்த அரசு மூடிவைத்திருக்கின்றது. உள்நாட்டில் ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுப்பதையும், வெளிநாடு சென்று சர்வதேசத்திடம் முறையிடுவதையும் தவிர வேறு வழிகள் தமிழ் மக்களுக்குக் கிடையாது. இதைத்தான் இன்று கூட்டமைப்பு செய்ய முயற்சிக்கின்றது. எனவே, கூட்டமைப்பு அமெரிக்கா செல்வதில் குறை காண்பவர்கள் ஒன்று அப்பட்டமான இனவாதிகளாக இருக்க வேண்டும் அல்லது மூளை கோளாறு கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

- இவ்வாறு ஜன

பக் 27

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழைபெய்யும் சாத்தியம்.

# கடல்தொழில் பிரச்சினையைப் பேசி இரு நாட்டு மீனவரே தீர்க்க வேண்டும்

## இந்திய காங்கிரஸ் எம்.பி. யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

இந்திய மீனவர் மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையிலான எல்லை மீறல் பிரச்சினைக்கு இரு நாட்டு மீனவ சங்கங்களுமே பேசித் தீர்வினைக் காண வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் நேற்று வலியுறுத்தினார், இந்திய ஆளும் கட்சியான காங்கிரஸின் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன்.

உலகளாவிய நடவடிக்கைக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் 33ஆவது வருடாந்த மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது. இதில் பங்கெடுப்பதற்காக 120 நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்புக்கு வருகை தந்துள்ளனர். அவர்களில் 6 நாடுகளின் பிரதிநிதிகள் வடக்குக்கு நேற்றைய தினம் வந்திருந்தனர்.

இதனடிப்படையில் யாழ். மாவட்ட செயலகத்துக்கு நேற்று வருகை தந்த இந்தக் குழுவினர் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

''யாழ். மாவட்டத்தில் கழிவு நீர் அகற்றலுக்கான முறையான திட்டம் எதுவும் இல்லை. இதனால் நிலத்தடி நீரானது பெருமளவு மாசடைகின்றது. அந்த நீரையே மக்கள் தமது குடிநீர் தேவைகளுக்காகவும் பயன்படுத்துகின்றனர். எனவே கழிவு நீர் அகற்றலுக்கான உரிய பொறிமுறை அமைக்கப்படுவது அவசியம்'' என்று கைத்தொழில் சமூகத்தின் சார்பில் கலந்து கொண்ட க.பூரணசந்திரன் வலியுறுத்தினார்.

''பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளை அமைப்பதற்குரிய கட்டுமானங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லை. மின்சார மற்றும் போக்குவரத்து வசதிகள் உரிய முறையில் இல்லை. யுத்தத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் 1300 தொழிற்சாலைகள் வரையில் இயங்கின. தற்போது சிறியளவிலான மிகக் குறைந்த தொழிற்சாலைகளே இயங்குகின்றன. புலம்பெயர் தமிழர்கள் இங்குவந்து முதலிட பார்வையிட்டுச் சென்றுள்ளனர். பெரும்பாலும் அடுத்த வருடத்திலிருந்து அவர்கள் இங்கு வந்து தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.'' என்றும் அவர் கூறினார்.

குடாநாட்டின் தற்போதைய அரசியல் நிலை குறித்து தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சி.வி.கே.சிவஞானம் விளக்கினார்.

''மக்கள் பயத்துடனே இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் கூட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தாக்கப்பட்டுள்ளார். மக்களுக்கு சந்தேகமாக இருக்கின்றது இதனை ,யார் செய்தார்கள் என்று. இந்திய அரசினால் வீடமைப்புத் திட்டம் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை. இந்திய அரசின் இந்த வீட்டுத்திட்டமானது பல கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு கைமாற்றம் செய்யப்பட்டே மேற்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக பெருமளவு நிதி இழக்கப்பட்டுள்ளது'' என்றார் அவர்.

இதற்குப் பதிலளித்த சுதர்சன நாச்சியப்பன்,'' கட்டட ஒப்பந்தகாரர்கள் லாபம் ஈட்டுவதையே நோக்கமாகக் கொண்டவர்கள். எனவே மக்கள் பிரதிநிதிகளினூடாக உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக வேலைத் திட்டத்தை முன்னெடுக்க நீங்கள் தயாராக இருந்தால் அதுபற்றி இந்திய அரசிடம் தான் எடுத்துரைப்பேன்'' - என்றார் அவர்.

மாவட்டச் செயலகக் கலந்துரையாடலைத் தொடர்ந்து நாடாளுமன்றக் குழுவினர் வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவின் சுதந்திரபுரம் பகுதியில் யு.என்.டி.பியினால் அமைக்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். வலி.வடக்கில் மிதிவெடி அகற்றப்படும் இடங்களையும் காடு மண்டிக் கிடக்கும் மக்கள் குடியிருப்புக்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர். (உ-15)

# பரீட்சை மண்டபம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 28

அரச உத்தியோகத்தர்களுக்கு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள சிங்களப் பாடபரீட்சை மண்டபங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. என யாழ். வலயக் கல்விப் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டப இலக்கம் 2 இல் நடைபெறவிருந்த பரீட்சை யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட மண்டப இலக்கம் 1 இற்கும், யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டப இலக்கம் 3 இல் நடைபெற இருந்த பரீட்சை யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மண்டப இலக்கம் 2 இற்கும் மற்றப்பட்டுள்ளது:

அத்துடன் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டப இலக்கம் 3 இல் நடைபெறவிருந்த பரீட்சை சென். மேரிஸ் வித்தியாலயத்திலும் யாழ். இந்துக் கல்லூரி மண்டப இலக்கம் 3இல் நடைபெறவிருந்த பரீட்சை சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்திலும் நடைபெறும் என்றும் மேற்படி பரீட்சை நிலையங்களை கருத்தில் கொண்டு உத்தியோகத்தர்களை பரீட்சைக்கு தோற்று மாறும் வலயக் கல்விப் பணிப் பாளர் அறிவித்துள்ளார். (த-4)

# பொலிஸாரால் மீட்கப்பட்ட தங்க நகை

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ். பொலிஸாரால் மீட்கப்பட்ட இரண்டு பவுண் பெறுமதியான காப்புகள் யாழ். நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி இதனைப் பெற்றுக் கொள்ள நீதிமன்றப் பதிவாளர் ச.வன்னியசிங்கனுடன் தொடர்பு கொள்ளுமாறு பதிவாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (த-4)




யாழ்.பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய கலாசார விழா நேற்று திருமறைக் கலாமன்ற 'கலைத்தூது கலையகத்தில்' இடம்பெற்றது. நிகழ்வில் தேசிய கலை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு யாழ். மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பரிசில் வழங்குகிறார். (311)

# மனித உரிமை ஆணைக்குழுவின் சிவில் ஒருங்கிணைப்புக் கூட்டம்

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் சிவில் சமூகங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிறீன் கிறாஸ் விடுதியில் இடம்பெறவுள்ளதாக இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சமகால மனித உரிமைகள் பிரச்சனை தொடர்பாகவும், தற்போதைய சூழ்நிலை தொடர்பாகவும் சிவில் சமூக அங்கத்தவர்களிடையே கலந்துரையாடலாகவே இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது. யாழ். மாவட்டத்தில் எம்மால் முன்னெடுக்கப்படும் மூன்றாவது கூட்டத் தொடர் இது.

இந்தக் கூட்டத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலந்துகொள்ளவுள்ளார். மேலும் சர்வமதத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். எனவே இதில்பங்குபற்ற விரும்பும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கிறீன் கிறாஸ் விடுதிக்கு வருகை தரமுடியும் - என்றார். (த-15)

# நிகழ்வுகள்

**பயிற்சிப் பட்டறை**

வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் பாரம்பரிய சித்த ஆயுள்வேத வைத்தியங்களை மேற்கொள்ளும் வைத்தியர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் குழந்தை மருத்துவத்தில் ஜோதிடம் மணி மந்திரம் போன்றவற்றின் பங்கு எனும் தலைப்பில் செயலமர்வு நடைபெறும். (10-313)

**தடுப்பூசி வழங்கல்**

யாழ். மாநகர சபைக்குட்பட்ட சகல உணவு கையாளும் நிலையங்களில் வேலை செய்பவர்களுக்கான தொற்றுநோய் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பொம்மை வெளி மகப்பேற்று நிலையத்திலும், வண்ணார்பண்ணை ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இடம்பெறவுள்ளது. (10-313)

**இலக்கிய விருது வழங்கும் நிகழ்வு**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அரச இலக்கிய விருது வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை குருநாகல் மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது. இந்த விழாவில் யாழ். மாவட்ட பிர்திநிதித்துவப்படுத்தும் வகையில் 25 சகல துறை சார்ந்த பிரபல இலக்கியவாதிகள் பங்குபற்ற உள்ளனர். (10-60)

**திருப்புகழ் பாராயணம்**

வாழும்கலை அமைப்பின் ஏற்பாட்டில் கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு 1008 அடியார்கள் இணைந்து வழங்கும் திருப்புகழ் பாராயணம் மற்றும் முருக பக்திப்பாடல்கள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் பிற்பகல் 3.45 மணிவரை நல்லூர் ஆலயமுன்றிலில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் முதன்முதலாக இடம்பெறும் இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களும், இளைஞர்கள் மற்றும் பக்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (10-311)

**பொதுக்கூட்டம்**

வலி.தென்மேற்குப் பிரதேச ஆயுள்வேத பாதுகாப்புச்சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10-313)

**ஞானச்சுடர் வெளியீடு**

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஞானசுடர் ஆன்மிக சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10-313)

**பதிப்கட்டத் திறப்பு**

துணுக்காய் கல்வி வலய கட்டடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொள்வார். (10)

**நினைவுப் பேருரை**

யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் கணபதி இராஜதுரையின் நினைவுப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10)

**பரிசளிப்பு விழா**

உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பதில் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (10-15)

**சைவநெறி, தமிழ்மொழித் தேர்வுகள்**

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை நடத்தும் அகில இலங்கை, சைவநெறி மற்றும் தமிழ்மொழித் தேர்வுகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளதாக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (10)

**தெய்வீக இசையரங்கு**

கந்தசஷ்டி உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம் நடத்தும் தெய்வீக இசையரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய நாடுகளை வழிநடத்தும் பொறுப்பு இப்போது அரசியல் மற்றும் பொருளாதாரத் தலைவர்களிடம்

## ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 28


சரியான நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் ஆசியாவில் பொருளாதார வளர்ச்சி ஏற்படமாட்டாதென்பதால்தான் சௌபாக்கியத்தை நோக்கி ஆசிய நாடுகளை வழிநடத்தும் பொறுப்பு அரசியல் மற்றும் பொருளாதாரத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

ஆஸ்திரேலியாவில் பொது நலவாய அமைப்பின் வர்த்தக மன்றத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:-

உலக சவால்களின் மத்தியில் தவிர்க்கமுடியாத நெருக்கடிகளுக்கு முகம்கொடுப்பதற்காக எமது பொருளாதாரத்தைப் போதியளவு அபிவிருத்தி செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒன்று அல்லது இரண்டு குறிக்கோள்களை இலக்காகக் கொண்டு நாம் நியமித்துக் கொள்கின்ற தனியார் கொள்கைகள் அல்லது அந்தந்தச் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான வகையில் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் என்பவற்றின்மூலம் நாம் பொதுவாக



எதிர்பார்க்கின்ற பெறுபேறுகளைப் பெரும்பாலும் பெறமுடியாமல் போகலாம்.

அத்தகைய விளைவுகள் குறுகிய கால சேவைகளாக இருக்கின்ற அதேநேரத்தில், சில நேரங்களில் புதிய கஷ்டங்களையும் தோற்றுவிக்கின்றன. இலகுவான முறையாகத் தென்பட்டாலும், பொருளாதார வளர்ச்சியை நீண்ட காலத்துக்குப் பேணுவதற்கு நாடுகள் என்ற வகையில் நாம் எமது அடிப்படைத் தேவைகள் மீது விசேட கவனம் செலுத்தவேண்டும்.

சந்தையும் பொருளாதாரமும் தொடர்ச்சியாக நிலையற்ற தன்மைக்கும் அமைதியற்ற நிலைமைக்கும் உள்ளாகியிருக்கும் சிக்கலான நிலை நாளுக்கு நாள் வளர்ச்சியடைகின்ற உலகத்தில் ஓரளவுக்குத் தமது நிலைப்பாட்டைப் பாதுகாத்துக்கொண்டுள்ள ஒரே உலக பிராந்தியம் ஆசிய பசுபிக் பிராந்தியமாகும்.

உண்மையிலேயே உலக வளர்ச்சியையும் நிலையான தன்மையையும் பாதுகாத்துக் கொள்வதற்கு முக்கியமான கடமைகள் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய பொருளாதாரத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது என்பது உலகம் ஏற்றுக் கொண்ட விடயமாகும்.

தற்போது நாங்கள் காண்கின்ற பொருளாதார சுட்டிகளின் மூலம் ஆசியாவில் பொருளாதார வளர்ச்சி தொடர்பாக சான்றுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஆசிய நாடுகள் என்ற வகையில் நாம் சரியான நடவடிக்கை எடுத்தாலன்றி இந்தப் பொருளாதார வளர்ச்சி தொடர்ச்சியாக நிகழாது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இதனால்தான் சௌபாக்கியத்தை நோக்கி ஆசிய நாடுகளை வழிநடத்தும் பொறுப்பு இன்று அரசியல் மற்றும் பொருளாதாரத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதென்றும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார். (த-சி)

# அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து உரியோரிடம் மீண்டும் வலியுறுத்தப்படும்

## இந்துமாமன்றம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 28

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதி, நீதியமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோரிடம் மீண்டும் உரிய வேண்டுகோள் விடுக்கப்படும் என்று அகில இலங்கை இந்துமாமன்றம் உறுதியளித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து சர்வமதத் தலைவர்கள் ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் அரசியல் கைதிகள் அகில இலங்கை இந்துமாமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்துமாமன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் மற்றும் சமூகநலத் தலைவர் சின்னத்துரை தனபாலா என்று பெயர்களைக் குறிப்பிட்டு உருக்கமான முறையில் கடிதமொன்றை அனுப்பிவைத்த அரசியல் கைதிகள் அந்தக் கடிதத்தில், பல வருடங்களாக மகஸின் சிறைச்சாலை ஜி மற்றும் எச் பிரிவுகளில் தடுத்துவைக் கப்பட்டிருக்கும் எங்களின் விடுதலை தொடர்பாக நீங்கள் உரிய நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுள்ளது எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் அகில இலங்கை இந்துமாமன்றம் பொதுச் செயலாளரின் கையொப்பத்துடன் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

புதிய மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுத்த வேண்டுகோள் தொடர்பாக நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

இதுசம்பந்தமாக ஜனாதிபதி, நீதியமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோரிடம் மீண்டும் உரிய வேண்டுகோள் விடுக்க இருக்கின்றோம்.

சர்வமதத் தலைவர்களின் ஆதரவு திரட்டுவதில் எமக்கு நம்பிக்கையில்லை. எனவே, அரசுடன் தொடர்புகொள்வது என்பதே சாலச் சிறந்தது என்பது எங்களின் கருத்து.

- இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நீண்டகாலமாக எதுவித வழக்கு விசாரணைகளுமின்றி சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர். ஆனால், பயன் ஏதும்கிட்டவில்லை என தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (த-சி)

# யாழ். பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு இன்றுடன் முடிவு

## திங்கள் முதல் வகுப்புக்கள் வழமைபோல்

யாழ்ப்பாணம், ஒக். 28

சிவில் சமூகப் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க தமது வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தைக் கைவிடுவதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மாணவர்களை விரிவுரைகளுக்குத் திரும்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதைக் கண்டித்து கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

மாணவர்களது போராட்டம் குறித்து சிவில் சமூகப் பிரநிதிகளுடனான கலந்துரையாடலின்போது சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அதில் புறக்கணிப்புப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்வது என இணக்கம் தெரிவிக்கப் பட்டதை தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமையுடன் போராட்டம் கைவிடப்படுவதாகவும் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (10)

# இரண்டு லட்சம் ஆசிரியர்களுக்கு 3 வருடம் பதவி உயர்வு இல்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 28

கடந்த மூன்று வருடங்களாக சுமார் இரண்டு இலட்சம் வரையிலான ஆசிரியர்களுக்குப் பதவியுயர்வு வழங்கப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

பதவி உயர்வு வழங்கப்படுவது தொடர்பிலான சுற்றுநிருபத்தைக் கல்வியமைச்சு விரைவில் வெளியிடவேண்டும் என்றும் அந்தச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

''இரண்டு இலட்சம் வரையான ஆசிரியர்களுக்கு கடந்த மூன்று வருடங்களாகப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை''

எனத் தலைப்பிட்டு பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்டாலினின் கையொப்பத்துடன் இலங்கை ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. தற்போது மூன்று வருடங்கள் கடந்துள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில் கல்வி அமைச்சருடன் பல தடவைகள் பேச்சு நடத்தியுள்ளோம்.

பேச்சு நடத்தப்படும்போதெல்லாம் அரச பொதுச்சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்தபின்னர் பதவியுயர்வு வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது.

அரசபொதுச்சேவை ஆணைக்குழு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது என எம்மால் அறியமுடிகிறது. ஆனால், ஆசிரியர் பதவியுயர்வு வழங்கப்படுவது தொடர்பான சுற்றுநிருபத்தை வெளியிடுவதற்கான எதுவித நடவடிக்கைகளையும் கல்வியமைச்சு முன்னெடுக்கவில்லை. எனவே, இன்னும் காலங்கடத்தாது உடனடியாக சுற்றுநிருபத்தை வெளியிடுமாறு கல்வியமைச்சின் செயலரிடம் இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது. - இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (த-சி)

# இலங்கையில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் சர்வதேச நாடுகள் அதனை புறக்கணிக்க வாய்ப்பு

## ஆஸி. வெளிவிவகார அமைச்சர் கருத்து

இலங்கையில் 2013ஆம் ஆண்டுநடைபெறவுள்ளகொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டை சில நாடுகள் புறக்கணிக்கலாம் என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கெவின் ரூட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் கொமன்வெல்த் மாநாட்டை புறக்கணிப்பது, ஒவ்வொரு அரசினதும் தனிப்பட்ட விவகாரம்.

இலங்கையில் உள்ள எமது நண்பர்கள் கொமன்வெல்த் தொடர்பாக ஒரு பரந்துபட்ட பார்வை உள்ளது என்பதை நினைவில் வைத்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இலங்கை அரசு சமர்ப்பிக்கவுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அடுத்து ஏனைய நாடுகளும் கொமன்வெல்த் கூட்டத்தைப் புறக்கணிக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் உள்ள எமது நண்பர்களுக்கு நாங்கள் தெளிவாகவும் இலகுவாகவும் கூறுகிறோம். ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள கேள்விகளுக்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பதில் கொடுக்கப்பட வேண்டும் என்று.

அத்துடன் ஐ.நா மனித உரிமைகள் பேரவை இந்த விவகாரம் குறித்து மீண்டும் ஆழமாக விசாரிக்க வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து ஐ.நா. விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே ஆஸ்திரேலியாவின் நிலைப்பாடு. என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-10)

# கொமன்வெல்த் மாநாட்டில் சிறப்பு அறிக்கைக்கு இடமில்லை

## ஆஸி. பிரதமருக்கு மஹிந்த பதில்

கொமன்வெல்த் மாநாட்டில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசு சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என ஆஸ்திரேலிய பிரதமர் கோரியதை இலங்கை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ மறுத்துள்ளார்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக் கூறுவது தொடர்பாக கொமன்வெல்த் மாநாட்டில் சிறப்பு அறிக்கை ஒன்றை இலங்கை அரசு வெளியிட வேண்டும் என்று. நேற்றுமுன்தினம் இடம் பெற்ற சந்திப்பின்போது ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிலாட் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியதாக ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க கூறியுள்ளார்.

ஆனால் கொமன்வெல்த் தலைவர்களின் முன்பாக பொறுப்புக் கூறுதல் குறித்து சிறப்பு அறிக்கை எதையும் வெளியிட முடியாது என்று ஜனாதிபதி கூறிவிட்டதாகவும் லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பொறுப்புக்கூறும் விவகாரங்கள் தொடர்பாக பேச விரும்பும் கொமன்வெல்த் நாடுகளுடன் தாராளமாக இருதரப்புப் பேச்சுக்களை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் இலங்கை ஜனாதிபதி கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆவது பிறந்தநாள் வாழ்த்து



28.10.2011
செல்வன்
**பாலசிங்கம் அஜிர்தன்**

தனது 10ஆவது பிறந்த தினத்தை
இன்று (28.10.2011) வெள்ளிக்கிழமை
கொண்டாடும் வேளை 2011 தரம் 05 புலமைப்பரிசில்
பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில்
அதிகூடிய புள்ளிகளைப் பெற்றமைக்காகவும்
இவரைப் பாராட்டி எல்லா நலமும் பெற
வீரபத்திரப் பெருமான் அருள்
வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தம்பி அபிஷன்.

## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
## ஐயரத்தினம் நினைவு தினமும் கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும்-2011

**இடம்:** பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
**காலம்:** 29.10.2011 (சனிக்கிழமை) காலை 8.30 மணி
**தலைவர்:** அதிபர்

**பிரதம விருந்தினர்கள்**
திரு. சரவணபவன் சிறிகணநாதன் [மகாஜனன்] அவர்கள்
(பட்டையக் கணக்காளர், நிதி நிறுவன ஆலோசகர், ஓய்வு பெற்ற சிரேஷ்ட பங்காளர் KPMG]
திருமதி செல்வநாயகி சிறிகணநாதன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர் - பொருளியல்துறை கொழும்புப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்**
திரு. சற்குணானந்தன் கைலாசநாதன் அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)

**கௌரவ விருந்தினர்**
திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர், யா/மகாஜனக் கல்லூரி)

**நினைவுப் பேருரை**
திருமதி பகீரதி ஜீவேஸ்வரா ராசலான் [மகாஜனன்] அவர்கள்
(பதில் தலைவர், சமூகவியல் துறை, கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

**ஆசியுரை**
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

**நன்றியுரை**
திரு. நடராசா துளசிதாசன் அவர்கள்
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**பாடசாலைச் சமூகம்**

## தவறிவிட்டது

4/3, முதலாம் ஒழுங்கை, சுத்தானந்தா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த துஷ்யந்தினி அரிகேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (597372043V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0212229995 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உதவும். சன்மானம் வழங்கப்படும்.

## வீடு வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி கிழக்கு, 92, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள 1200 சதுர அடியிலும், கூடிய இட வசதியும், 3 அறைகள், இரண்டு குளியல் / கழிவறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் அல்லது குடும்பப் பாவனைக்கு உகந்த சகல வசதி கொண்ட, சமீபத்தில் திருத்தியமைக்கப்பட்ட வீடு.

**தொடர்பு: 0772374439**

## போட்டிப் பரீட்சை வகுப்புகள்

**SLAS புதிய பிரிவு**

* ஒவ்வொரு ஞாயிறும் பி.ப.1.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை பொது உளச்சார்பு, பொதுஅறிவு, முகாமைத்துவ உளச்சார்பு, கட்டுரையும் சுருக்கமும் ஆகிய விடயங்கள் துறைசார் நிபுணர்களினால் 50 மணித்தியாலங்கள் 2,500/=
* **அஞ்சல் அலுவலர்** போட்டிப் பரீட்சை வகுப்பு ஒவ்வொரு ஞாயிறும் பி.ப.1.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை 30 மணித்தியாலங்கள் 1,500/=

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு,
யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே.

## தவறிவிட்டது

[illegible] லேன், உடுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த, யாழ். இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ப.நிரஜன் என்பவரது புத்தகப்பை 25.10.2011 அன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பழை சென்ற மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

**T.P.: 0779352839**

*Bachelor of Information Technology(BIT)*
*External Degree*
*OF*
*University Of Moratuwa*

யாழ் மண்ணில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால்
அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் ESOFT
புதிய பிரிவுகளுக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



**முக்கிய திகதிகள்**
விண்ணப்ப இறுதி நாள் : 30-11-2011
பதிவுகளுக்கான இறுதி நாள் : 15-12-2011
தொடக்கம் : ஜனவரி 2012

**HNDIT- ATI**
SLIATE-HNDIT Completed students can now join this degreewith exemption of 16 modules (10 in level 1,6 in level 2)

**2011 A/Level** எழுதிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**Esoft Computer Studies**
**17/1, Brown Road**
**Jaffna.**
TP: 021-2224142 Hotline: 077-3099308

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
இரஞ்சிதமலர் அருணாசலம்

எம் பள்ளிக்கும்
தம் பெற்றவர்க்கும்
உம் உற்றவர்க்கும்
உவகையோடு பெருமை சேர்த்தீர் !
எங்களுக்கும் பெருமை ஏற்று
உமைப் போற்றி
ஏணியாய் இருந்த
உங்களை வாழ்த்தி
பிரதீபா பிரபா
விருதுக்கு
உரிய நீவிர் நீடூழி வாழ்க.



திருமதி
விக்னேஸ்வரி குலஞானசுந்தரம்

**ஆசிரியர் நலன்புரி சங்கம்,**
**கிளி/உருத்திரபுரம் ம.வி.**

## பணியாளர் தேவை

1] கணினி வடிவமைப்பாளர்
(Photo Shop)
2] உதவியாளர்
[அல்பம் கட்டுபவர்]

**மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்,**
**ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**



மாணவர்களே உங்களுக்கான
அரிய இறுதி சந்தர்ப்பம்.

# UK Top-Up Degree

from Buckinghamshire New University

**B.Sc. (Hons) in Computing**

Entry Options
- BCS Diploma
- Edexcel HND
- NCC-IAD
- NIBM Higher Dip
- HNDIT-ATI

Investment : Rs. 460,000
(Payable in Installments)

FLY IN FACULTY LECTURERS FROM UK ARRIVE ON THE 11th NOVEMBER

**Register** before 31st October 2011

Duration 8 months

Conducted @

For More Information Contact
**Esoft Computer Studies**
**17/1, Brown Road Jaffna.**
TP: 021-2224142

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
நிஷான் சனி-16 XXXX
இலக்க கார்
விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0772487595**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கிளிநொச்சி கல்வி வலய பாடசாலைகளில் இருந்து சிறந்த அதிபர்களாகவும், சிறந்த ஆசிரியர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டு கடந்த 06.10.2011 அன்று அலரி மாளிகையில் "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருது பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சிறந்த அதிபர்கள்:**

1. திரு. தி. வரதன் - கிளி/முருகானந்த ம.வி.
2. திரு. ச. பூலோகராஜா - கிளி/தருமபுரம், ம.வி.
3. திரு. வி. ஜீவரட்ணம் - கிளி/பளை, றோ.க.த.க.பா.
4. திருமதி ரி. கனகசபை - கிளி/ஞானிமடம், அ.த.க.பா.
5. திருமதி வி. குலஞானசுந்தரம் - கிளி/உருத்திரபுரம், ம.வி.
6. திரு. ம. ஜெகதீஸ்வரன் - கிளி/இராமநாதபுரம் கிழக்கு, அ.த.க.பா.
7. திரு. மு. கண்ணகுமார் - கிளி/மாசார் அ.த.க.பா.
8. திருமதி வி. ஞானசிறி - கிளி/பளை, மத்திய கல்லூரி
9. திருமதி வி. சந்திரன் - கிளி/பிரமந்தனாறு, ம.வி.
10. திருமதி வ. சந்திரசேகரம் - கிளி/பளை மத்திய கல்லூரி
11. திருமதி செ. இராஜரட்ணம் - கிளி/தருமபுரம், ம.வி.
12. திருமதி சி. கணேசநாதன் - கிளி/கோவில் வயல், சி.சி.த.க.பா.
13. திரு. ம. மரியராசா - கிளி/வேரவில், இந்து ம.வி.

(printed numbering: 1–4, then 3–11 in the second column)

**சிறந்த ஆசிரியர்கள்:**

1. திருமதி இ. அருணாசலம் - கிளி/உருத்திரபுரம், ம.வி.
2. செல்வி அ. மிக்கேல் - கிளி/பளை, றோ.க.த.க.பா.

வாழ்த்துவோர்:
**வலயக் கல்விப் பணிப்பாளரும், உத்தியோகத்தர்களும்,**
**வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொதுநலவாய உச்சி மாநாட்டில் இலங்கை எதிர்நோக்கும் நெருக்கடி

மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு, 2013 ஆம் ஆண்டுக்கான உச்சி மாநாட்டை இடம்மாற்றுதல் என்று கடந்த சில நாள்களாக பல்வேறு சர்ச்சைகள் கிளப்பப்பட்ட நிலையில் பொதுநலவாய நாடுகளின் 22 ஆவது உச்சி மாநாடு இன்று ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் ஆரம்பமாகிறது.

54 நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த மூன்று நாள் மாநாடு, இலங்கைக்கு ஓர் அக்கினிப் பரீட்சையாக இருக்கும் என்றே ஆரம்பத்தில் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், இந்தியா உட்பட தனது நேச நாடுகளின் உதவியுடன் இலங்கை இவற்றிலிருந்து மீண்டுவிடும் என்றே நம்பப்படுகிறது. ஜெனிவாவில் சமீபத்தில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை பேரவை மாநாட்டிலும் இலங்கைக்கு எதிரான பிரேரணை எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால், கடைசி நேரத்தில் போதிய ஆதரவு இன்றி அது கைவிடப்பட்டது.

இன்று ஆரம்பமாகி ஞாயிறன்று இறுதி அறிக்கையுடன் முடிவடையும் பொதுநலவாய உச்சி மாநாட்டில் உலக விவகாரங்கள், பொதுநலவாய விவகாரங்கள், சர்வதேச சமாதானம், பாதுகாப்பு, ஜனநாயகம், நல்லாட்சி, அபிவிருத்தி, கல்வி, சுற்றுப்புற சூழல், சுகாதாரம், மனித உரிமைகள் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட உள்ளன.

2009 ஆம் ஆண்டு கடைசியாக ரினிடாட் டுபாக்கோவில் நடைபெற்ற மாநாட்டில், பல்வேறு நாடுகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களைச் சேர்ந்த பதினொரு உறுப்பினர்கள் குழு அமைக்கப்பட்டது. அந்தக்குழு தற்பொழுது தயாரித்துள்ள 106 பரிந்துரைகளில் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு அமைப்பது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரையே பேர்த் மாநாட்டுக்கு முன்னரே சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது. பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியுள்ள நாடுகளுக்கு மாத்திரம் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

இன்று ஆரம்பமாகும் மாநாட்டில் இலங்கை இரு பிரச்சினைகளை எதிர்நோக்கி இருக்கிறது. ஒன்று, 2013 ஆம் ஆண்டு மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு. இரண்டாவது, மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவை அமைக்கும் முயற்சி.

2009 ஆம் ஆண்டு ரினிடாட் டுபாக்கோவில் நடை பெற்ற மாநாட்டில் 2011 ஆம் ஆண்டு மாநாட்டை ஆஸ்திரேலியாவிலும், 2013 ஆம் ஆண்டு மாநாட்டை இலங்கையிலும் 2015 ஆம் ஆண்டு மாநாட்டை மொறீசியஸிலும் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது.

இலங்கை மீதான போர்க்குற்றங்களைக் காரணம் காட்டி 2013 ஆம் ஆண்டு மாநாட்டை கொழும்பில் நடத்துவதற்கு கனடா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. மனித உரிமைகளைப் பேணுவதில் இலங்கையில் முன்னேற்றம் காணப்படாவிட்டால் கொழும்பு மாநாட்டில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என்று கனடா பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் தற்பொழுது அறிவித்துள்ளார்.

வழமை போன்று இந்த விடயத்திலும் இந்தியாவின் முழுமையான ஆதரவு இலங்கைக்கு கிடைத்துள்ளது. ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒரு விடயத்தை மீண்டும் கிளப்பத் தேவையில்லை என்று இந்தியா கூறுகிறது. ஆகவே 2013 பொதுநலவாய உச்சி மாநாடு திட்டமிட்டபடி கொழும்பில்தான் நடைபெறப் போகிறது.

பேர்த் மாநாட்டில் இலங்கை எதிர்நோக்கும் அடுத்த பிரச்சினை, மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு.

1971 ஆம் ஆண்டு பொதுநலவாய அமைப்பு உருவாக்கப்பட்ட சமயம் அதற்கு வழங்கப்பட்ட ஆணையில் இவ்வாறான கண்காணிப்புக் குழுவுக்கு இடம் இல்லை என்பது இந்தியாவின் வாதம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இருக்கும் போது - அந்த பேரவைக்கு ஆணை தாராளமாக இருக்கும்போது - இன்னொரு மனித உரிமைகள் குழு தேவைதானா என்று இந்தியா கேட்கிறது.

இலங்கை மீது போர்க் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் பொதுநலவாய அமைப்பின் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவின் முதல் இலக்கு இலங்கையாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியாவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு இலங்கை எதிர்ப்புத் தெரிவிப்பது இதனால்தான்.

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை சர்வதேச அரங்கில் வலுத்து வரும் இன்றைய நிலையில், மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு ஒன்றை பொதுநலவாய நாடுகள் அமைக்குமானால் அது இலங்கைக்கு மற்றொரு நெருக்கடிதான். ஏற்கனவே சனல் - 4 விடியோ, ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை எனப் பல்வேறு நெருக்கடிகளை இலங்கை அரசு எதிர்நோக்கி உள்ளது. கடைசியாக ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாட்டிலும் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் எதுவும் கொண்டுவரப்படாவிட்டாலும், இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகும்வரை இலங்கைக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது பொதுநலவாய உச்சிமாநாடு என்ற பெயரில் இலங்கை மீதான போர்க் குற்றச் சாட்டுக்கள் இலங்கையைத் துரத்துகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை போன்று பொது நலவாய அமைப்பு நாடுகளும் இலங்கை அரசினால் நிய மிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முடிவை எதிர்பார்த்துள்ளன. இலங்கை மீதான போர்க் குற்றச் சாட்டுகளுக்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பதிலாக அமையும் என்பதே இந்த நாடுகளின் நம்பிக்கை.

ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் மெல்கம் ப்ரெஷர், இலங்கை குறித்து முறையான விசாரணை சர்வதேச குற்றவியல் நீதிமன்றால் நடத்தப்படவேண்டும் என்று கோருகின்றபோதும் தற்போதைய பிரதமர் ஜூலியா கில்லார்ட், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வரும்வரை காத்திருக்கும் நிலைப்பாட்டை எடுத்துள்ளார். சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா சென்ற இலங்கை அகதிகளை மனதில் கொண்டு இலங்கை அரசு மீதான குற்றச் சாட்டுக்களில் மிருதுவான போக்கைக் கைக்கொள்ள எத்தனிக்கிறார் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

**ஆனால் இத்தகைய நிலைமை நீடிக்கமாட்டாது. இவற்றை எல்லாம் நோக்கும்போது போர்க்குற்றச்சாட்டுக்கள் இலங்கையை சர்வதேச நெருக்கடிக்குள் தள்ளி வருகின்றன. சர்வதேச நெருக்கடியாக இது உருவெடுப்பதற்கு சனல் -4 விடியோ காட்சிகளும், ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையுமே முக்கிய காரணிகள். இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கமுடியாத பலவீனமான நிலையில் இருக்கிறது. இவை இரண்டையும் கையாள்வதிலேயே இலங்கையின் மீட்சி தங்கி உள்ளது, என்பது இப்போதைய யதார்த்தம். அதனைக் கருத்தில் கொள்ளாது இலங்கை அரசு இந்தப் பொறியிலிருந்து தான் தப்பித்துக்கொள்வதற்குத் தன்னாலியன்ற எல்லா வழிகளிலும் முயன்று வருகின்றது. இது விடயத்தில் [illegible] தெரிவிக்கும் ஆலோசனைகளைக் கருத்தில் எடுக்க அது மனங்கொள்ளாதிருப்பது அழுத்தமும் இறுக்கமும் மேன்மேலும் இறுக்கம் அடையவே வழி வகுக்கும் என்பதை அதனால் உணர்ந்து கொள்ள முடியாதிருப்பது ஏனோ...?**

# பருத்தித்துறை - வவுனியா பஸ்சேவை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 28

பருத்தித்துறைக்கும் வவுனியாவுக்கும் இடையில் இடைநிறுத்தப்பட்டிருந்த பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலையினர் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து வவுனியாவுக்கு பயணங்களை மேற்கொள்ளும் பயணிகளின் நலன் கருதி இந்தச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆளணிப் பற்றாக்குறை, ரயர் பிரச்சினை காரணமாக கடந்த சில மாதங்களாக இந்த பஸ்சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அது நேற்றுமுன்தினம் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் முற்பகல் 11 மணிக்கு இங்கிருந்து புறப்படும் பஸ் மாலை 5.30 மணிக்கு அங்கிருந்து மீண்டும் பருத்தித்துறை புறப்படும். இதன் ஒரே வழி பயணக் கட்டணமாக 149 ரூபா அறவிடப்பட்டு வருகின்றது. என்று பருத்தித்துறை டிப்போவினர் தெரிவித்தனர்.

ஏற்கனவே பருத்தித்துறை கொழும்பு பஸ்சேவையும் ஆரம்பிக்கப்பட்டு இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ம-319)

# உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் மூன்று தினங்களுக்கு வவுனியாவில்

யாழ்ப்பாணம், ஒக்.28

இந்த ஆண்டுக்கான உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மூன்று தினங்கள் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

கண்காட்சியில் உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் காட்சிப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச எல்லைக்குள் பொதுமக்களின் பங்களிப்புடன் மின் விளக்குகள் அமைப்பது குப்பைகளைச் சேகரித்து அவற்றைப் பசளையாக்கி பொதி செய்யும் முறை பற்றிய செயல் விளக்கம் கடந்த 2008 முதல் 2011 வரை பிரதேச சபை எவ்வாறு தனது வருமான அதிகரிப்பைப் பெற்றது என்பவை குறித்த விடயங்கள் காட்சிப்படுத்தவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தெரிவித்தது. வித்தியாசமான முறையில் இந்தக் காட்சிகள் அமைவதாகவும் கூறப்பட்டது. (ம-7)

# வடக்கில் சிறுவர் வைத்தியசாலை அமைவது காலத்தின் தேவை

## வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.28

வடக்கு மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கப்படுவது போன்று வடக்கு மாகாணத்துக்கு சிறுவர் வைத்தியசாலையும் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

சிறுவர் வைத்தியசாலை வடக்கில் அமைப்பது தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரையே சென்றடைந்துள்ளது.

ஏனெனில் நேரடியாக சுகாதார அமைச்சின் கீழ் இது வருவதால் இந்த அபிவிருத்தி தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கையை யாழ். போதனா வைத்தியசாலை மேற்கொள்ளும்.

இவ்வாறு வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ்.ஆர். ஜூட் தெரிவித்தார்.

2009 இல் முன்மொழியப்பட்ட வடக்கு சிறுவர் வைத்தியசாலை இதுவரையில் இடம்பெற்ற முன்னேற்றம் - அபிவிருத்தி தொடர்பாக டாக்டர் திருமதி எஸ். ஆர். ஜூட்டிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

வடக்கு மாகாண சிறுவர் வைத்தியசாலை கண்டிப்பாக இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்படவேண்டியது அவசியம்.

வடக்குப் பகுதிக்கான புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கப்படுவது போன்று வடக்கு பகுதிக்கான சிறுவர் வைத்திய சாலை அமைய வேண்டியது காலத்தின் தேவை.

நவீன சிறுவர் வைத்தியசாலை அமைப்பது தொடர்பாக நான் மீண்டும், மீண்டும் சுகாதார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வருவேன்.

அதனைவிட இந்த வைத்தியசாலை அமைப்பது தொடர்பான கூடுதல் கவனத்தை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகமே முழுமையாகக்கொண்டு செயற்படவேண்டும்.

இதற்கான எண்ணக்கரு பத்திரம் தயாரித்து, ஏற்கனவே உள்ள ஆவணங்களையும் தொடுத்து அமைச்சுக்கு பாரப்படுத்தும் வேளையில் இந்தத் திட்டம் விரைவில் முன்னெடுக்கப்படும்.

இந்த வைத்தியசாலையை அமைப்பது தொடர்பாகப் புத்திஜீவிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என பலரும் இதற்காக முன்வந்து உழைக்கவேண்டும் என்றார். (ம-302)

## அறம்

ஞானக்கதிர்

மனிதராகத் தோன்றிய அனைவருமே மனித இயல்புகளோடு வாழ்ந்திடுவதில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனும் மனிதனுக்குரிய உயர்ந்த தன்மைகளோடு வாழ்ந்திட வேண்டும் என்பதுதான் படைத்த இறைவனின் பெருநோக்கமாகும். இதனை உணர்வதற்காகவே தெளிந்த அறிவுடைய சான்றோர் பெருமக்கள் அவ்வப்போது அறநெறிகளைப் போதித்து மக்களை மேன்மைப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

**உண்மையில் அறம் என்பது மாசற்ற மனத்தில் உதிப்பதாகும். மனித குலம் அனைத்துக்கும் இந்தக் கருத்து பொதுவான ஒன்றாகும். எண்ணற்ற மதங்களும், மார்க்கங்களும் முடிவில் இதைத்தான் சிறப்பாக உணர்த்தி நிற்கின்றன. இதனையே உலகப்பொதுமறை தந்த தெய்வப் புலவர் வள்ளுவர்.**

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

எனக் கூறியுள்ளார்.

கல்வி கற்பதும், சமயநெறிகளில் தோய்வதும், [illegible] கடைப்பிடிப்பதும் போன்ற யாவும் அழுக்கினைப் போக்கு[illegible]முயற்சியாகும். இந்த உயரிய நோக்கத்தை நெஞ்சினில் நிறுத்தி நடைமுறைப்படுத்தி வந்தால் நிச்சயமாக அறத்தின் பயனை அடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
28 ஒக்ரோபர் 2011 வெள்ளிக்கிழமை

# இளைஞர் சேவை அலுவலர் வெற்றிடம் நிரப்ப நடவடிக்கைகள் எதுவும் இல்லை

வலி வடக்கு, ஒக்.28

யாழ்.மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றபோதிலும் உரிய அலுவலர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கபப்படவில்லை என்று இளைஞர் அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் கடந்த முப்பது வருடங்களுக்கு முன்னர் இளைஞர் சேவைகள் மன்றங்களின் எண்ணிக்கை அதிகம் காணப்பட்டதுடன் முன்னேற்றகரமான செயல்பாடுகளும் இடம் பெற்றன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளைத் தெடர்ந்து யாழ்.மாவட்டத்தில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகள் முடக்கப்பட்டதுடன் இளைஞர் அமைப்புனக்களும் உரிய முறையில் செயல்பட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடவடிக்கை எடுக்காத நிலமையும் காணப்பட்டது.

தற்போது இளைஞர் நாடாளுமன்றம் உருவாக்கப் பட்டு அதன் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையிலும் கூட இளைஞர் சேவை அலுவலர்கள் நியமம் செய்யப்படாத நிலமை காணப்படுகின்றது.

இளைஞர் சேவைகள் மன்றங்களில் சேவையாற்றிய பலர் தகுதிகள் இருந்தும் கூட உரிய நியமனத்தை அவர்களுக்கு வழங்காது இருப்பது பலரிடமும் குழப்பத்தையும் விசனத்தை யும் ஏற்படுத்தியுள்ளது. (ம-86)

# தெல்லிப்பழை வைத்தியசாலை ஜனவரி இயங்க ஆரம்பிக்கும்

### யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்

குருநகர், ஒக்.28

தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலை எதிர்வரும் 2012 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இயங்க ஆரம்பிக்கும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சேதமடைந்த நிலையில் காணப்பட்ட இந்த வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகள், சத்திர சிகிச்சை அறை, எக்ஸ்றே அறை, மருந்தகம், வெளிநோயாளர் பகுதி, கிளினிக் அறை, இயந்திர அறை பற்சிகிச்சைப் பிரிவு ஆகியவை தற்போரு பூரணமாகத் திருத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஏணைய வேலைகளும் வெகு விரைவில் நிறைவு செய்யப் படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-21)

# தார் ஊற்றப்படாத வீதியில் பயணிப்பதில் பெரும் சிரமம்

அளவெட்டி, ஒக்.28

சுன்னாகம், கந்தரோடை, மாசியப்பிட்டி பிரதான வீதியில் கந்தரோடை உத்திரிகை வெளியில் வீதியின் மதகு திருத்தவேலைகள் முடிவுற்றுப் பல மாதங்களாகியும் வீதியின் மேல் பகுதியில் ஒழுங்கான முறையில் கல், மணல் கொண்டு நிரப்பித் தார் ஊற்றப்படவில்லை.

இதனால் மதகு, அதனை அண்டிய பகுதிகள் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. தற்போது மழை காலமாகையால் நீர் தேங்கி நிற்கிறது.

இவ்வீதியால் பயணிக்கும் வாகனங்கள் பாதசாரிகள் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மிகுந்த சிரமத்தை இதனால் எதிர் நோக்க வேண்டியுள்ளது.

எனவே, இதனை உடனடியாகச் சீர் செய்து சீரான பயணத்துக்கு சம்பந்தப் பட்டவர்கள் ஏன் தயக்கம் காட்டுகிறார்கள் என்று வீதியால் பயணிக்கும் பாதசாரிகள், வாகன உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ம-36)



*சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய சர்வதேச முதியோர் தின விழாவில் முதியோர்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் அப்பிள் பழம் சாப்பிடும் போட்டியில் ஈடுபடுகின் றனர். (ம-100)*

# தண்டவாளம் வைத்திருந்த ஐவருக்கும் பிணை கிடைத்தது

தென்மராட்சி, ஒக்.28

இலங்கை புகையிரத திணைக் களத்துக்குச் சொந்தமான தண்டவாளம் வைத்திருந்த மிருசுவில் கெற்பேலி வாசிகர் ஐந்து பேரையும் சாவகச்சேரி நீதிமனத்றில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

கடந்த வாரம் கெற்பேலிப் பகுதில் தண்டவாளம் வைத்திருந்ததாக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கம் செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்படிருந்த ஐந்து பேரையும் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

இந்த வழங்கு விசாரணைக்கு எடுக்கபட்ட போது சட்டத்தரணி சத்தியேந்திரன் மாதவராஜா எதிரிகள் சார்பில் ஆஜரானார். (ம-207)

# தீபாவளி நெரிசலைப் பயன்படுத்தி ‘கைவரிசை’ காட்டிய கும்பல்

யாழ்ப்பாணம், ஒக்.28

முற்றவெளி நடைபாதை கடைகளில் தீபாவளி வியாபாரங்களின் போது திருட்டுச் சம்பவங்கள் பெருமளவில் இடம்பெற்றுள்ளன.

தீபாவளிப் பண்டிகைக்கென முற்றவெளியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட நடைபாதை வியாபாரிகளின் உடுபுடைவைகளைச் சிலர் எடுத்துப் பார்த்துவிட்டு அதனைத் தந்திரமாகக் களவாடி செல்லும் சம்பவங்கள் தாராளமாக நடைபெற்றுள்ளன.

தீபாவளியை முன்னிட்டு அலைமோதிய மக்கள் நெருக்கடியைப் பயன்படுத்தி இதற்கென திருட்டுக் கோஷ்டிகள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளன.

இவ்வாறு வியாபார நிலையம் ஒன்றில் உடுபுடைவைகளைப் பார்த்துவிட்டு அதைத் தந்திரமாகத் திருட முயற்சித்த கும்பல் ஒன்று கையும் களவுமாக மாட்டிக் கொண்டது.

இவர்கள் அங்கு நின்றவர்களால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இப்படியான சனநெருக்கடியின் போது நடைபாதைக் கடைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவது வழமையாகிவிட்டது என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-26)

# சூழல் பாதுகாப்புத் தொடர்பில் பொலிஸார் சட்ட நடவடிக்கை

சண்டிலிப்பாய், ஒக்.28

பருவமழை ஆரம்பமானதைத் தொடர்ந்து சுற்றுச் சூழல் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தி வரும் மானிப்பாய் பொலிஸார், சுகாதாரத்துக்கும் போக்குவரத்துக்கும் பங்கமேற்படும் வகையில் குப்பை கூழங்களை வீதியில் போடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து வருவதுடன் இதுகுறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அறிவுரையையும் வழங்கி வருகின்றனர்.

மழைகாலம் ஆரம்பமாகியுள்ளதால் மக்கள் மத்தியில் தொற்று நோய்கள் ஏற்படாதவாறு சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கெனத் தனிப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கிராமங்கள் தோறும் ரோந்து செல்லும் பொலிஸார் வீதிகளில் குப்பைகளைப் போட்டு சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுத்து வருவதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சம்பந்தமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றனர். (ம-115)

# உறவினர்களின் உதவியின்றி முதியோர் வெளியே நடமாடக்கூடாது

### மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவுரை

நவாலி, ஒக்.28

முதியோர் வெளியில் செல்லும்போது உறவினர்களின் உதவியுடன் தான் செல்ல வேண்டும். யாழ்ப்பாணத்து வீதிகளில் போக்குவரத்து நெரிசலாக உள்ளது.

இந்தச் சூழ்நிலையில் இவர்கள் தனியாச் செல்லும் போது பல விபத்துக்களும் ஏற்படக் கூடும்.

இவ்வாறு மானிப்பாய்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மல்கம்பேதி சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய சர்வதேச முதியோர் தினவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அ.யோ.எழிலரசி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:

முதியோர் எமது சொத்து. அவர்களிடம் பல அனுபவங்கள் உண்டு. அவற்றைப் பெற்று நடந்துகொள்ளவேண்டும். பல பெற்றோர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளிலுள்ளனர்.

இவர்கள் தாய், தந்தையரை நன்கு கவனிப்பதில்லை. இப்படியான முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

முதியவர்கள் தனியாக வீடுகளில் இருத்தல் கூடாது. அவ்வாறு தனியாக இருக்க நேரிட்டால் [illegible] இருக்க வேண்டும்.

நாம் நடமாடும் சேவைகள் மூலம் இவ்வாறான பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வருகின்றோம். மக்களின் அமைதிக்காக சிவில் நிர்வாகக் குழுக்களை அமைத்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வருகின்றோம்.-என்றார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் முதியோர், மாற்றாற்றல் உடையோர் தின விழா கடந்த சனிக்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி அ.யோ.எழிலரசி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் இந்தப் பிரிவிலுள்ள அனைத்து முதியோர் சங்கங்களும் கலந்து கொண்டன. சங்க அங்கத்தவர்களுக்கிடையே நடைபெற்ற இந்த நிகழ்வில் அப்பிள் சாப்பிடுதல், வேகநடை, ஊசி நூல் கோர்த்தல், கிடுகு பின்னுதல், சங்கீதக் கதிரை போன்ற பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதியான பொருள்கள் பரிசாக வழங்கப்பட்டன.

அத்துடன் ஒவ்வொரு சங்கத்திலும் இரண்டு முதி யோர்கள் தெரிவு செய்யப்பட்டு சங்கத் தலை வர்களால் மாலை சூட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட முதியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. முதியோரின் நிகழ்வுகளும் இதில் இடம்பெற்றன. (ம-100)

# பூனைக்கு விளையாட்டு; சுண்டெலிக்குச் சீவன்

யாழ்ப்பாணம், ஒக்.28

பட்டாசுகளை பீங்கான் போத்தலில் வைத்துச் கொழுத்தி எறிந்து விளையாடிய போது உடைந்த பீங்கான் துண்டுகளால் வெட்டப்பட்டு நெற்றியிலும் கையிலும் காயமடைந்த நிலையில் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தீபாவளித் தினமான நேற்று முன்தினம் பட்டாசுகளைப் தீ பீங்கான் போத் தலிகளினுள் போட்டு போத்தலை வானுயர எறிந்து வானில் பெரும் சத்தத்துடன் போத்தல் பட்டாசு வெடித்துச் சிதறி தீபாவளி யைக் கொண்டாடிக் கொண்டிருந் தனர் ஒருகுவினார். அந்த சமயம் அவ்வழியே சென்ற இளைஞன் வெடித்த போத்தல் பீங்கான்கள் பறந்ததால் நெற்றியிலும் கையிலும்காயமடைந்து சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் மானிப்பாய் வீதியில் ஓட்டுமடத்தில் இடம் பெற்றது. சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இ.நிலக்ஷன் (வயது 16) என்ற இளைஞனே காயமடைந்தவராவார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவுச் சந்திப் பகுதியில் மேம்பாலம் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.28

பண்ணை - குறிகாட்டுவான் வீதியில் மண்டைதீவுச் சந்திக்கு அருகில் மற்றொரு மேம்பாலம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்தச் சந்திக்கு அருகில் உள்ள கடற்பிரதேசம் மிகவும் ஆழம் கூடிக் காணப்படுவதால் மேம்பாலம் அமைப்பதற்கான வசதி அதிகளவில் காணப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தகவல் தெரிவித்தது.

புதிதாக நிர்மாணிக்கப்பட இருக்கும் இந்த மேம்பாலம் மிகவும் உயரமாக அமைக்கப்படவுள்ளது.

கடற்றொழிலாளர் படகுகள் பாலத்தின் ஊடாக சிரமம் இன்றிச் செல்வதற்கு ஏற்றவாறு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்தப் பாலத்தை அமைப்பதற்கான முன்னேற்பாடாகக் கடல் ஆழமறிந்து, பாலத்துக்கான மதிப்பீ டு மேற்கொள்ளும்பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பண்ணைப் பாலத்தை விட மிகவும் நவீன முறையில் இந்த மேம்பாலம் அமையவுள்ளது.

இந்தப் பாலத்தை அமைப்பதன் மூலம் தீவுப்பகுதி கடற்றொழிலாளர்கள் பெரும் நன்மையடைவர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. (ம-26)

# பயணிகளைப் பயமுறுத்தும் காங்கேசன்துறை வீதி

வலி.வடக்கு, ஒக்.28

இணுவிலில் இருந்து சுன்னாகம் வரையான காங்கேசன்துறை வீதி ஆபத்து நிறைந்த வீதியாக மாறிவிட்டது.

இந்த வீதியால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

காங்கேசன்துறை வீதியைக் காப்பெற் வீதியாக மாற்றும் நடவடிக்கையால் வீதியின் இரு மருங்கிலும் வெட்டப்பட்டுக் களிமண் போடப்பட்டுள்ளது.

மழை பெய்வதால் இந்த வீதியின் இரு பகுதிகளிலும் போடப்படும் களிமண் வீதி முழுவதும் பரவி சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

வீதியில் காணப்படும் சேறால் இந்த வீதியில் பயணிக்கும் வாகனங்கள் சறுக்கிச் செல் லும் நிலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

குறிப்பாக மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள் பயணிகள் இத்தகைய ஆபத்துகளை எதிர்நோக்கியே பயணம் செய்ய வேண்டி உள்ளது.

ஏனைய இடங்களில் வீதியின் ஒரு பகுதி என்ற அடிப்படையிலேயே வீதி அகலிப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. இந்த வீதியில் இருபகுதிகளும் இவ்வாறு உடைக்கப்பட்டு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-86)

# மழையிலும் நிறுத்தப்படாத வீதிப் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

பருத்தித்துறை வீதியின் அகலிப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது மழை காலம் ஆரம்பித்தாலும் கூட புனரமைப்பு மற்றும் அகலிப்புப் பணிகள் எவ்வித தடங்கல்களும் இன்றி இடம்பெற்று வருவதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

வீதி அகலிப்புக்கு வெட்டப்பட்ட வீதியோர தாழ்ந்த இடங்கள் தற்போது அவசர அவசரமாகக் கிரவல் மண்போட்டு நிரவப்படுகின்றன. இந்தத் தாழ்ந்த் இடங்களில் வெள்ளம் நிற்காதவாறு சீர் செய்யும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை கோப்பாய் சந்தியின் பிரதான பாலத்தின் புனரமைப்புப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (ம-26)



பண்ணைப் பொருளாதார இரண்டாம் கட்ட நடவடிக்கையாக காய்கறி விதைகள் நடும் நிகழ்வு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நாதன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோர் விதைகளை நடுகின்றனர். உதவிப் பிரதேச செயலர் ஆ.சோதிநாதன் அருகில் உள்ளார். (ம-7)

# மானிப்பாய் மத்திய சந்தையில் குடிதண்ணீர் வசதிக்கு ஏற்பாடு

சண்டிலிப்பாய், ஒக்.28

மானிப்பாய் மத்திய சந்தையில் வியாபாரிகளதும் அங்கு வரும் மக்களினதும் நன்மை கருதி குடிதண்ணீர் வசதியைச் செய்து கொடுக்க முன்வந்துள்ள வலி. தென்மேற்குப் பிரதேச சபை அதற்கான ஒழுங்குகளைக் மேற்கொண்டுள்ளது.

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் தினமும் பல நூற்றுக்கனக்கான மக்களின் தேவையைப் பூர்த்தி செய்து வரும் மானிப்பாய் மத்திய சந்தையில் மரக்கறி வியாபாரிகள், கடலுணவு வியாபாரிகள் மற்றும் இறைச்சிக் கடை, வர்த்தக நிலையங்கள் என்பன இயங்கி வருகின்றன.

சந்தையின் மத்தியில் ஒரு கிணறு இருந்த போதிலும் சுத்தமில்லாததால் தண்ணீருக்காக இதனைப் பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அங்குள்ள வியாபாரிகள் குடிதண்ணீருக்கு வெளி இடங்களையும் தனியார் வீடுகளையும் நாடி வந்தனர். இந்த நிலை குறித்து ஏற்கனவே் பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

வியாபாரிகளதும், மக்களதும் நன்மை கருதி சந்தையில் தண்ணீர்த் தொட்டியை வைத்து குடிதண்ணீர் வழங்க முன்வந்துள்ள பிரதேச சபை அதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளது. (ம-115)

# யாழ்.பல்கலை மாணவர் தாக்கப்பட்டமைக்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மாநகர சபை ஏகமனதாக ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்.பல்கலைக்கழக மாணவர் தாக்கப்பட்டமைக்கும் அதன் விளைவாக மாணவர்கள் தொடர் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

இந்த நிலைமையை அரசு உடன் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும்.

யாழ்.மாநகர சபையில் நேற்று இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் விந்தன் இது தொடர்பாகச் சமர்ப்பித்த பிரேரணை ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்கப்பட்டு ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் விந்தன் கனகரத்தினம் பிரேரணையைச் சமர்ப்பித்து மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 16.10.2011 பட்டப் பகலில் இராணுவக் காவலரணுக்கு அருகில் பழம் வீதியில் வைத்து யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபால சிங்கம் தாக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, பூநகரி வீதியில் யாழ்.பல்கலைக் கழக கலைப் பீட மாணவன் இ.கவிராஜன் 23.10.2011 தாக்கப்பட்டுள்ளார்

இதனால் பல்கலைக்கழகம் பதினொரு தினங்களாக கற்றல் செயற்பாடின்றி முடங்கியுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களின் அவல நிலையை அரசு உடனடியாக கவனத்தில் எடுத்து நீதி கிடைக்க உதவி புரிய வேண்டும்.

தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பும் இருப்பும் கேள்விக்குறியாக உள்ளது.

அவர்களின் பேச்சு, எழுத்து, கல்வி, உயிர்வாழும் உரிமை, தொழில் புரியும் உரிமை, நடமாடும் சுதந்திரம் எல்லாமே பறிக்கப்படுகின்றன. அடக்கப்படுகின்றன.

பாதுகாப்புத் தரப்பினர் மீதும் அரசு மீதும் மக்கள் சந்தேகம் கொண்டு இவர்களால் எம்மைப் பாதுகாக்க முடியாது என்ற நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரசு இனியாவது இத்தகைய வன்முறைகளைத் தடுத்து நிறுத்திச் சம்பந்தப்பட்டோரைக் கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும்.

இதன்மூலம் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று இந்தச் சபை கேட்டுக் கொள்கின்றது.

இந்த விடயம் தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பினர் மத்தியிலும் அரசிடமும் முறையிட்டால் குற்றவாளிகளைக் கைது செய்கிறோம் என்கிறார்கள். ஆனால் பின்னர் அந்த வாக்குறுதிகள் காற்றில் பறந்து விடுகின்றன. யாரையும் கைது செய்ய மாட்டார்கள். கண்டிக்க மாட்டார்கள், தண்டிக்க மாட்டார்கள். இதுதான் இன்றை வரலாறு- என்றார்.

தீர்மானத்தை ஆதரித்து உறுப்பினர்கள் அ.பரஞ்சோதி, ம.மங்களநேசன், எஸ்.விஜயகாந் ஆகியோரும் உரையாற்றினர். (ம-7)

# முஸ்லிம் உறுப்பினர் வெளிநடப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி மேயர் பதவி தொடர்பாக தீர்க்கமான முடிவுகள் இல்லாத நிலையில் முஸ்லிம் உறுப்பினர்கள் மொகமட்றமீஸ், மீராகஹிர் முஸ்தபா, பதுர்தீன் அஸ்கர்ரூமி, ஏ.அஸ்வர் ஆகியோயர் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளாது வெளிநடப்புச் செய்தனர்.

ஏற்கனவே பிரதி மேயர் பதவியை முஸ்லிம் உறுப்பினர் ஒருவருக்கு வழங்க இணக்கம் காணப்பட்டது. இது தொடர்பாக முதல்வருடன் பல தடவைகள் பேச்சு நடத்தியும் இதுவரை எந்தவித முடிவும் கிடைக்கவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த நிலையில் முஸ்லிம் உறுப்பினர்கள் சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கப் போவதில்லை எனவும் உறுப்பினர் எம்.எம்.எஸ். முஸ்தபா தெரிவித்தார். (ம-7)

# விஜயகாந்தின் பிரேரணையும் ஏற்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.28

தற்போது இடம்பெற்று வரும் அசம்பாவிதங்களால் பொதுமக்கள் மாணவர்கள் அவர்களின் கல்விச் செயற்பாடுகள் என்பன பெரிதும் பாதிப்படைகின்றன. தமிழ் மக்களின் இருப்பு கேள்விக் குறியாக உள்ளது. இனந்தெரியாதவர்களின் தாக்குதல்களுக்கு மக்கள் அடிக்கடி ஆளாகின்றனர்,

இது தொடரும் பட்சத்தில் மாநகரசபை உறுப்பினர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு மக்களின் எதிர்ப்பை சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜயகாந்த் கொண்டுவந்த பிரேரணையும் நேற்றைய மாநகர சபைக் கூட்டத்தில் ஏக மனதாக ஏற்கப்பட்டது. (ம-7)

# யாழ். மாநகர சபையின் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுக்கும் என நேற்று நடைபெற்ற யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

"தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைப்பதற்கான அனுமதியை இதுவரை எவரும் பெற்றுக் கொள்ளவில்லை பொதுமக்களும் இந்தக் கோபுரங்கள் அமைவது பற்றி தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது"- என்று முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் தொழில்சார் விசேட திறன் முடி சூடும் விழா விரைவில்

யாழ்ப்பாணம், ஒக். 28

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அமைச்சின் ஏற்பாட்டில் இலங்கையில் இளம் தொழில்சார் விசேட திறனுக்கான முடிசூடும் விழா நடைபெறவுள்ளது.

மிகச் சிறந்த இளம் முயற்சியாண்மையாளர், மிகச் சிறந்த இளம் தன்னார்வலர், மிகச் சிறந்த இளம் அறிவிப்பாளர், மிகச் சிறந்த கண்டுபிடிப்பாளர், மிகச் சிறந்த தொழில் முறையாளர், மிகச்சிறந்த இளம் ஒப்பனையாளர், மிகச் சிறந்த இளம் பத்திரிகையாளர், மிகச் சிறந்த இளம் உள்ளூர் விவசாய தயாரிப்பாளர், மிகச் சிறந்த இளம் புகைப்பிடிப்பாளர், மிகச் சிறந்த இளம் பாடல் இயற்றுனர், மிகச் சிறந்த இளம் எழுத்தாளர், மிகச்சிறந்த இளம் நாட்டுப் புறக் கலைஞர், மிகச் சிறந்த சூழலியலாளர், மிகச்சிறந்த இளம் சமையல் வல்லுனர், மிகச்சிறந்த இளம் தலைவர், மிகச்சிறந்த இளம் விளம்பர நிர்மாணி, மிகச்சிறந்த இளம் தொழில் நுட்பவியலாளர், மிகச்சிறந்த இளம் மாணவர், மிகச் சிறந்த இளம் ஆசிரியர், மிகச் சிறந்த இளம் கட்டட வடிவமைப்பாளர் போன்ற வற்றுக்கான 22 விருதுகள் வழங்கப்படவுள்ளன. இவற்றில் ஏதாவது தொழில் திறமை உள்ளவர்கள் மேற்படி விருதுக்கு விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி 15 வயதுக்கும் 29 வயதுக்கும்இடைப்பட்டவராக இருக்க வேண்டும். சமுதாயத்துக்காக ஆக்கபூர்வ அர்ப்பணிப்பை பெற்றுக்கொடுத்திருக்கவேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரிகள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் தொடர்பிலான சான்றிதழ்கள், ஒளிப் பதிவுகள், புகைப்படங்கள் மற்றும் அறிக்கைகளுடன் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், உதவிப் பணிப்பாளர், கண்டிவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-311)



''உரங்களில் போலி செய்ய வேண்டாம்'' என்ற தொனிப் பொருளில் விவசாயத் திணைக்களத்தினர் வீதி நாடகம் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். சங்கானை மரக்கறிச் சந்தையில் இடம்பெற்ற வீதி நாடகத்தில் திணைக்கள ஊழியர்கள் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுகின்றனர். (வ-29)

## மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர்சங்க பொதுக் கூட்டத்தை நடத்த நடவடிக்கை

சண்டிலிப்பாய், ஒக்.28

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தைக் கால தாமதமின்றிக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள யாழ். அரச அதிபர், இது குறித்து வலி.தென்மேற்கு பிரதேச செயலருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க உறுப்பினரும் ஓய்வு பெற்ற நீதிவானுடைமாகிய இ.வசந்தசேனன் தலைமையில் சென்ற நான்கு பேர் கொண்ட குழுவினர் யாழ். அரச அதிபரைச் செயலகத்தில் சந்தித்து மேற்படி சங்கத்தில் இடம்பெற்று வரும் நிர்வாகக் குறைகள் பற்றியும் இரண்டரை வருடங்களுக்கு மேலாகப் பொதுக்கூட்டம் வைக்காமல் காலம் கடத்தி வருவது பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார். அத்துடன் பொதுக் கூட்டத்தை விரைவாக நடத்தி புதிய நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும்கேட்டுக்கொண்டனர்.

தூதுக் குழுவினரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து சங்கத்தின் பொதுக் கூட்டத்தை விரைவாக நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் வலி. தென்மேற்கு பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார். (வ-115)

# பிரதேச சபை உறுப்பினர்களுக்கான சட்ட அறிவூட்டல் கருத்தரங்கு இன்று

சண்டிலிப்பாய், ஒக்.28

பிரதேச சபை உறுப்பினர்களுக்கான சட்ட அறிவூட்டல் கருத்தரங்கு இன்று வெள்ளிக் கிழமை நல்லூர் பிரதேச மண்டபத்தில் முற்பகல் 8 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணி வரை நடைபெறவுள்ளது.

பிரதேச சபை உறுப்பினர்களின் அதிகாரங்கள், உரிய சட்டங்கள், பிரச்சினைகள் தொடர்பாக இந்தக் கருத்தரங்கில் விரிவாக ஆராயப்படவுள்ளன. சட்ட உதவி ஆணையாளர் குழுவினால் முதல்முதலாக யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச சபை உறுப்பினர்கள் பங்குபற்றுகின்றார்கள்.

இந்தக் கருத்தரங்கு சம்பந்தமாக பிரதேச சபை உறுப்பினர்களுக்கு சட்ட அறிவூட்டல் ஆணைக் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுமார் இரண்டு தசாப்த காலங்களுக்குப் பின் வடமாகாண உள்ளூராட்சி மன்றங்கள் மீளவும் இயங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் உள்ளூராட்சி சட்டங்கள் மற்றும் மனிதாபிமான சட்டங்கள் தொடர்பாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்குமான பொதுவான விளக்கம் கொடுப்பது அவசியம் எனக் தென கருதப்பட்டமை யால் சட்ட உதவி ஆணைக் குழு இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் மேற்படி சட்டங்கள் தொடர்பான கருத்தரங்கொன்றை நடத்தியது.

இந்த வகையில் மேற்படி கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி சட்டங்கள் தொடர்பாக சகல உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனும் விரிவாக கலந்துரையாடப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். இதற்கமைய மேற்படி கருத்தரங்கினை மேலும் விரிவுபடுத்த வடமாகாணத்தில் தொடர் கருத்தரங்குகளை நடத்த சட்ட உதவி ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணத் தில் 5 பிரதேச சபைகள் தெரிவு செய்யப்பட்டு இக் கருத்தரங்கினை நடத்துவதற்கான ஆயத்தங் களை சட்ட உதவி ஆணைக் குழு முன்னெடுத்துள்ளது- இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ( வ-115)


## மெக்கானிக் தேவை

*வவுனியா மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் அமைந்துள்ள எமது நிறுவனத்துக்கு மோட்டார் சைக்கிள் மெக்கானிக் தேவை.*

★ வயதெல்லை 18 25.
★ கொழும்பில் சிறப்புப் பயிற்சி வழங்கப்படும்.
★ திறமைக் கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
★ முச்சக்கரவண்டி (ஓட்டோ) திருத்தம் அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

T.P:0757790051
0772737622


## மின்னல் தாக்கி மாணவன் பலி

கண்டி ரம்புக்வெல்ல பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் 16 வயதான மாணவன் ஒருவன் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மின்னல்தாக்கியதால் கடும் காயமடைந்த இந்த மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மனித உரிமைகள்தினத்தை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 28

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ''மத நல்லிணக்கம் மற்றும் கடமைகளை நிறை வேற்றுவதன் மூலம் மனித உரிமைகள் பேணப்படும் சமுதாயம்'' என்னும் தொனிப் பொருளில் திறந்த போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

திறந்த போட்டி எனினும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் தமது ஆக்கங்களை நிறுவனத் தலைவர்கள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும்.

ஆணைக் குழு நடத்தும் இந்த பதாகைப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவர்கள் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக தமது ஆக்கங்களை இலங்கை மனித உரிமை ஆணைக் குழு, பிராந்திய அலுவலகம், இல.01, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அல்லது நேரில் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)


## ENGINEERS WANTED

1. Material Engineer/Pavement Engineer/Quantity Surveyor. English Speaking(Minimum 5 years Experience in Highway Project)
2. Planning Manager English Speaking (Minimum 3 years in Highway Planning)
3. Vehicles for Rent- 3 Tippers of 3 Cubes available for rent. Rental negotiable

*Salary negotiable. Applicants from Jaffna preferred.*

**Contact No: 0778454272**

Address : Achchelu Office, Puttur Road.
Contact Person : Michael Ouyang.
E-mai l: 377042035@qq.com


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



*அமரர்*

*சிதம்பரப்பிள்ளை தபேந்திரநாதன்*

(அன்ரியப்பா)

தோற்றம் 23★03★1954

மறைவு 29★09★2011

எமது தந்தை நோயுற்று இருந்த காலத்தில் வைத்திய உதவியைச் செய்த Dr. வேலும்மயிலும் அவர்களுக்கும் Dr. சச்சிதானந்தம் அவர்களுக்கும் உயிர் பிரிந்த வேளையில் உடன்வந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து வேண்டிய உதவிகளைச் செய்தவர்களுக்கும் உள்ளூரிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும், தபால் மூலமும், தெலைபேசி மூலமும் Facebook மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் இன்று வரையிலும் எமக்குப் பல்வேறு வகைகளிலும் ஆறுதலும் ஒத்தாசையும் வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளை தெரிவிப்பதோடு நாளை (29.10.2011) சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப்பெறாதோர் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உண்டுவத்தை,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

குடும்பத்தினர்




ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் ஆசியுடன்
கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு
1008 அடியார்கள் இணைந்து வழங்கும்
**திருப்புகழ் பாராயணம்**
மற்றும்
**முருக பக்தி பாடல்கள்**
**இன்று நல்லூர் ஆலய முன்றலில் 3 மணிக்கு**
அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!
குறிப்பு : ஞாயிறு பி.ப. 4 மணிக்கு வாழும் கலை புதிய பயிற்சிக்கான அறிமுக உரை மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியளம் கேட்டீர்களா?

### தீபாவளி வந்தது... போனது...!

கடந்த தீபாவளி போலவே இந்தத் தீபாவளியும் கடந்து விட்டது. நீண்ட யுத்த அரக்கனிலிருந்து விடுபட்ட போதும் மக்களின் வாழ்வில் எந்த முன்னேற்றமுமில்லை. நீண்ட இடம்பெயர் வாழ்வு சில இடங்களில் முற்றுப் பெற்றாலும் அகதிவாழ்வு முடிய வில்லை. தகரக் கொட்டிலுக்குள் வாழ்வதும், நிவாரணத்துக்குக் கியூவில் நிற்பதும், நிரந்தரத் தொழிலின்றி அலைவதும், தொழிற் கெடுபிடிகளும் என இவ்வளவு கால வாழ்விலிருந்து எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அரசியற் தலைவர்கள் பேசுகிறார்கள். ஆனால் காணாமல்போனவர் கதி தெரியாது. பிடிபட்டுச் சிறைக் குள் உழல்பவர்களின் விடுதலைக் கதையில்லை. புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் வேலையின்றி, வருமானமின்றி அல்லாடு வதுடன் இனியும் ஏதாவது நடக்குமா? என்ற அச்சத்துடன் பொழுதைக் கழிக்கின்றனர். கிறீஸ் பூதம் போய் இனந்தெரியாத தாக்குதலாளிகள் இன்னுமின்னும் முளைத்து மக்களை அச்சத்தின் பிடியில் வைத்திருக்கிறார்கள்.

ஆக, தீபாவளி எந்த மாற்றமும் இல்லாமல் கடந்து செல்கிறது. இதனால் எப்போதும் போலவே சமய, சமூகத் தலைவர்கள் அடுத்த வருடமும் அமைதியும் நிம்மதியும் நிறைந்த ஆண்டாக அமையப் பிரார்த்திக்கலாம்!

இந்தத் தீபாவளியில் எமது பால்யப் பருவத் தீபாவளி நினைவுகள் கிளர்ந்து கழிவிரக்கம் கொள்ள வைக்கின்றன. தீபாவளி என்றால் புத்தாடை மட்டுமல்ல தின்பண்டங்களுந்தான்! இரண்டு நாள்களுக்கு முன்பாகவே பலகாரம் சுடும் வேலைகள் ஆரம்பித்துவிடும். முறுக்கு, பயற்றம் பணியாரம், தோட்டச்சு, சிப்பி, கொக்கீஸ், அரியதரம், சீடை என்று விதம் விதமான பலகாரங்கள். எல்லாமே சத்து நிறைந்தவை. அயலவர்களுக்கும், சுற்றத்துக்கும் கொடுப்பது முக்கியமானது. யார் அதிக பலகாரம் செய்தது, சுவையாகச் செய்தது? என்ற ஆரோக்கியமான பெருமை பாராட்டல்களும் அப்போது இருந்தன.

காலையில் எழுந்து குளித்தோ,தோய்ந்தோ விட்டு, புதுச் சட்டை போட்டுக்கொண்டு கோவிலுக்குப் போவது முதற் பணி. அதன்பின் அக்கம் பக்கத்து வீடுகளுக்குப் போவோம். அங்கு சிற்றுண்டி அருந்தி முடிய அந்த வீட்டுப் பிள்ளைகளும் சேர்ந்து கொள்வார்கள். இவ்வாறு ஒவ்வொரு வீட்டுப் பிள்ளைகளும் சேர்ந்து அயலட்டையிலுள்ள உறவினர், நண்பர்களின் வீடு களுக்குச் செல்வோம். அனேகமாக எல்லா வீட்டிலும் பலகாரங்கள்தான். சில வீடுகளில் பிஸ்கட்டும் கிடைக்கும்.

உத்தியோகம் பார்ப்பவர்களின் வீடுகளில் பத்திரிகைகளுடன் தமிழக சஞ்சிகைகளான ஆனந்த விகடன், கல்கி, கலைமகள் முதலியவற்றின் தீபாவளி மலர்கள் பெரிய புத்தகமாக வர்ணப் படங்களுடன் கிடைக்கும். நாங்கள் அவற்றை ஆர்வத்துடன் வாசிப்போம். ஊர் உலாத்து நிறைவு பெற்றால் அடுத்தது விளையாட்டுத்தான். கிட்டியடித்தல், கிளித்தட்டு மறித்தல்தான் பிரதான விளையாட்டுக்கள். நாலு பெட்டிக் கெந்தல், எட்டுப் பெட்டிக் கெந்தல், ஒளித்துப் பிடித்தல் என்பனவும் இடம் பெறும். மழைபெய்தால் கொக்கான் வெட்டல், இலுப்பங் கொட்டை சிந்தல், தாயம் உருட்டல் என உள்ளக விளையாட்டுக்கள் உள்ளன. வெடி கொளுத்தியும் விளையாடுவோம்.

மதியம் இறைச்சிச் சாப்பாடு. வீட்டில் யாராவது விருந்தினர் வந்திருப்பார். களைப்பாகப் பொழுது கழியும். மாலையில் தூரத்திலுள்ள உறவினர் வீடுகளுக்குப் போவோம். வெடி கொளுத்தி, விருந்துண்டு, விளையாடி மகிழ்ந்த தீபாவளியை இனி எப்போதும் காணமுடியாது. ஏனெனில் நமது வாழ்க்கைக் கோலம் மாறிவிட்டது.

எங்களுக்காகவே, தங்களைத் தியாகம் செய்து எத்தனையோ தொலைக்காட்சி நிலையங்கள் திரைக்கு வந்து சில மாதங் களேயான படங்களை விடியற் காலையிலிருந்தே போட்டி போட்டுக் கொண்டு ஒளிபரப்புகின்றன! எங்களது ரசனை யறிந்து நடிக, நடிகையரின் தீபாவளி நிகழ்வுகளையும், பேட்டி களையும் தருகின்றன. பட்டிமன்றம், பாட்டுக்குப் பாட்டு என ஏகப்பட்ட நிகழ்ச்சிகள். இதை விடுத்து அயலட்டை வீடு களுக்குப் போய் உணவருந்தி என்ன இலாபம்?

அங்கு போனாலும் என்ன பலகாரமா கிடைக்கப் போகிறது? எங்கள் வீடுகளில் உள்ளது போல் றெடிமேட் கேக், மிக்சர், பிஸ்கட் எனக் கடைச்சாமான்கள்தானே கிடைக்கப் போகிறது. அது மட்டுமல்ல நாங்கள் போனாலும் அங்குள்ளவர்கள் தொலைக் காட்சியை விடுத்து எம்முடன் அளவளாவ மாட்டார்களே! அது பரவாயில்லை. வேண்டாவெறுப்பாகவல்லோ சிலர் கருதுகின் றனர். போறதும் காணும் படுகிற உபத்திரவமும் காணும் என்ற நிலைபோல பல இடங்களிலும்.

ஒரேயொரு விடயம் மட்டுந்தான் அன்றைய தீபாவளியுடன் இன்றைய தீபாவளியை நினைவூட்டுகின்றது. அதுதான் வெடி! உடுப்பு எடுக்காத வீடுகளிலும் வெடிக்குக் குறைவில்லை. அத்துடன் அன்று போல் இன்றும் தீபாவளியில் சிறுவர்கள் வெடிக்குக் காசைக் கரியாக்குவது போல மதுபானத்துக்கு பெரிய வர்கள் கரியாக்குவதும் தொடர்கிறது. தீபாவளிக்கு முதல்நாள் உடுப்புக் கடைகளில் நின்ற சனக் கூட்டத்தை விட மதுபான சாலையில் நின்ற கூட்டம் அதிகமென அபிப்பிராயப்பட்டார் நண்பரொருவர்.

விழிச்சான் குஞ்சு.

# இலங்கை விடயத்தை ஆராய முன்னர் நிபுணர்குழு கடாபி கொலையை விசாரணை செய்ய வேண்டும்

## சர்வதேச சமூகம் பாரபட்சம் என்று சாடுகிறார் பிரதமர்

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்ய முன்னர் லிபிய ஜனாதிபதி கேணல் கடாபியின் கொலை தொடர்பாக விசாரணை செய்ய நிபுணர் குழு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றவைபவம்ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்:-

கேணல் கடாபி எவ்வாறு கொல்லப்பட்டார் என்பது தொடர்பாக இதுவரை வெளியிடப்படாத நிலையில், ஏன் அது பற்றிய தகவல் வெளியிட இழுத்தடிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை சர்வதேசத்திடம்நான்கேட்கவிரும்புகின்றேன்.

மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச சமூகங்கள், எம் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை வெற்றிகொள்ள நாட்டு மக்கள் அனைவரும் வேறுபாடு பாராது ஒன்றிணையவேண்டும்.

30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தத்திற்கு முற்றுப் புள்ளி வைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இப்பூமியில் வாழும் எந்தவொரு பிரிவினருக்கும் எதிராக எச்சந்தர்ப்பத்திலும் நடவடிக்கை எடுக்கவில்லை.

குறிப்பாக, இந்த நாட்டை ஆட்சிசெய்த தலைவர்களும் அப்படிப்பட்ட தீர்மானங்களை எடுத்துச் சொல்லவில்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம், மலே, பறங்கியர் ஆகிய அனைத்து இனத்தவர்களும் இந்நாட்டில் புரிந்துணர்வுடன் வாழ்கின்றமை முழு உலகுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் இந்த இன ஒற்றுமையைச் சீர்குலைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதே சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனர் என்றார் அவர். (வ-சி)

## உண்ணாவிரதத்தை கைவிட்டனர் கைதிகள்

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் காலை பயணம் செய்த மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.அப்துல்லா கூரையின் மேல் ஏறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட கைதிகளுடன்உரையாடி அவர்களின் கோரிக்கைகளையும் பிரச்சினைகளையும் கேட்டறிந்ததைத் தொடர்ந்து கைதிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

இதன்போது சிறைச்சாலையின் அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர். மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுகயீனம் காரணமாக உயிரிழந்த விளக்கமறியல் கைதியின் மரணம் தொடர்பான விசாரணை நடத்தப்படல்வேண்டும், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி சிறைச்சாலைக்கு வருகை தந்து தமது பிரச்சினைகளை கேட்டறிந்து தீர்த்து வைக்கவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்த முப்பதுக்கு மேற்பட்ட சிறைச்சாலையிலுள்ள கைதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்

அரச ஊழியர்களின் சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும் என்று அரசிடம் மருத்துவர்களின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசதுறை மற்றும் தனியார் துறை தொழில் வாண்மையாளர்களிடையே பெரியளவிலான சம்பள வித்தியாசம் காணப்படுவதனால் அரசதுறையிலுள்ள திறன் வாய்ந்த தொழில் வாண்மையாளர்கள் தொகை அருகி வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

இதனால் சகல அரச ஊழியர்களின் சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும் என்று அரசிடம் மருத்துவர்களின் சங்கம் கோரியுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சம்பள அமைப்பின்படி அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை என்று அரச மருத்துவ ஊழியர்களின் சங்கத்தின் செயலாளர் சங்கல்ப மாரசிங்க கூறினார்.

பயிற்றப்பட்ட ஊழியர்களினதும் தொழில் வாண்மையாளர்களினதும் சம்பளங்கள் மிகவும் குறைவாகவுவுள்ளன. அரச ஊழியர் ஒருவரின் ஊழியரின் ஆகக்குறைந்த சம்பளம் 12,500 ரூபா. ஆகக்கூடிய சம்பளம் 50,000 ரூபா. அதாவது சம்பள அமுக்க வீதம் 1-4 ஆக உள்ளது. இது 1-12 ஆக இருக்க வேண்டும். ஆனால் தனியார் துறையில் இது 10 மடங்காகும்.

குறைந்த சம்பளங்களின் காரணமாகத் திறன் மிக்க தொழில் வாண்மையாளர்கள் அரச துறையில் பற்றாக்குறையாக உள்ளனர். பட்டயக் கணக்காளர்கள், பொறியியலாளர்கள் அரச துறையில் மிக அருமையாகவே உள்ளனர். ஆனால், அரச துறையில் வைத்தியர்கள் பெருமளவில் உள்ளனர் என்றார் அவர்.

எதிர்வரும் வாரங்களிலும் இந்தப் பேச்சு தொடரும் என்று அவர் கூறினார். (வ-சி)

# மதத் தலைவர்களூடாக ஜனாதிபதியிடம் பேசி எம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும்

## இந்து மா மன்றத்திடம் தமிழ் அரசியல் கைதிகள் உருக்கம்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து சர்வமதத் தலைவர்களூடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டுசென்று உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழ் அரசியல் கைதிகள் அகில இலங்கை இந்துமாமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தீபாவளியை முன்னிட்டு புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டிருக்கும் நிலையில், தமிழ் அரசியல் கைதிகளின் இந்தக் கோரிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்து மாமன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் மற்றும் சமுகநலத் தலைவர் [illegible] என்று பெயர்களைக் குறிப்பிட்டு கடிதமொன்றை அனுப்பியுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

போரால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மனிதாபிமான நடவடிக்கைகளையும் பல உதவிகளையும் செய்து வருகின்றீர்கள். அதுமட்டுமன்றி, சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கும் விசேட தினங்களில் உடுதுணிகள் மற்றும் பல உதவிகளைத் தொடர்ந்தும் செய்து வருகின்றீர்கள். அது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆனால் ஐந்து தொடக்கம் பத்து வருடங்கள், 18 வருடங்களாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளாகிய எங்களுக்கு விடுதலை என்பது கேள்விக்குறியாகவே உள்ளமை மிகவும் வேதனையைத் தருகிறது.

எங்கள் அனைவரையும் விடுதலை செய்யும்படி போராட்டங்களை நடத்தியும், உண்ணாவிரதங்கள் இருந்தும், எங்களது விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியும் எந்தப் பயனும் இதுவரை கிட்டவில்லை.

எனவே, அனைத்து சர்வ மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து எங்களது விடுதலை சம்பந்தமாக ஜனாதிபதியிடம் எடுத்துரைத்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
28 ஒக்ரோபர் 2011 வெள்ளிக்கிழமை



முல்லைத்தீவு கல்வி வலயத்தால் நடாத்தப்பட்ட முழு நிலாக் கலை நிகழ்வின்போது கொண்டுவரப்பட்ட மாட்டுவண்டியில் நாட்டுப்புற அம்சங்கள். (433)

# கோம்பாவில் புதிய குடியேற்றம்; மக்கள் நேரில் சென்று பார்த்தனர்

முல்லைத்தீவு, ஒக்.28

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மந்துவில், சிவநகர், ஆனந்தபுரம் ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தாங்கள் மீளக்குடியமரவுள்ள கோம்பாவில் பகுதியைக் கடந்த திங்கட்கிழமை பார்வையிட்டனர் என முல்லைத்தீவு மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

செட்டிக்குளம் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தின் வல யம் -1, வலயம் 2 ஆகியவற்றில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களைச் சேர்ந்த தலைவர்களே தாங்கள் மீளக்குடியமரவுள்ள கோம்பாவில் பகுதியை பார்வையிட்டுள்ளனர்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரக ஏற்பாட்டில் இவர்கள் இரு பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான கூட்டம் ஒன்று கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவிலுள்ள விக்னேஸ்வராப் பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது கோம்பாவிலில் மீளக்குடியமரவுள்ள மக்களுக்கு வழங்கப்படவுள்ள அடிப்படை வசதிகள் குறித்துத் தெரிவிக்கப்பட்டன.

தங்களைச் சொந்த இடங் களில் மீளக்குடியமர்த்துமாறு இந்த மக்கள் கோரியதாகவும் இதன்போது குறித்த பகுதியில் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகள் முடிவடைந்ததும் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ)

முரசுமோட்டை, ஊரியான் பகுதியில்

# கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு கமக்கார அமைப்புகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.28

கிளிநொச்சி, முரசுமோட்டை, ஊரியான் ஆகிய பகுதிகளில் பயிரழிவுகளை ஏற்படுத்தி வரும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு பல்வேறு தரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதி வயல்நிலங்களில் கூடுதலாக இந்தாண்டு காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இந்தப் பயிர்ச் செய்கையைக் கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருகின்றன.

இதனைத் தடுக்க ஊரியான் மற்றும் முரசுமோட்டைப் பிரதேசங்களின் கமக்கார அமைப்புக்கள் கால்நடைப் பண்ணையாளர்களைத் தங்களது கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கேட்டுள்ளனர்.

மேலும் பயிரழிவுகளை ஏற்படுத்தும் கட்டாக்காலி கால்நடைகள் கால்நடைகட்டுப்பாட்டு குழுவால் பிடிக்கப்பட்டு பிடி கூலியாக 500 ரூபாவும் நாள் ஒன்றுக் கான பராமரிப்புக் கூலியாக 100 ரூபாவும் அறவிடப்படும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-6)

## மின்சாரம் வழங்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.28

முல்லைத்தீவு பாண்டின் குளம் பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் மின்சாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்து ஆறு மாதங்கள் கடந்த நிலையில் தமக்கான மின் இணைப்பு இதுவரையில் ஏற்படுத்தித்தரப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி இந்தப்பிரதேசத்துக்கு உட்பட்ட கரும்புள்ளியான், பாண்டியன்குளம், மத்திய பகுதி, பாட்டாளிபுரம், நட்டாங்கண்டல், பாலிநகர் போன்ற இடங்களுக்கு இதுவரை மின் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு நாளை வவுனியா நெல்லி ஹோட்டலில்

வவுனியா, ஒக்.28

சிறுபான்மை மக்களின் மொழி சார்ந்த உரிமையை உறுதிப்படுத்துதல், மேம்படுத்துதல், வலிமைப்படுத்து தல் ஆகிய நோக்கங்களுடன் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் மணியாற்றும்பிரதேச ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை வவுனியா நெல்லி ஸ்டார் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்தி அமைப்பினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்தக்கருத் தரங்கில் சட்டத்தரணி எஸ்.ஜே. புஞ்சிகேரத், ஊடகவியலாளர் சீ.தொடவத்த மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பிரஜைகள் பங்கு பற்றல் வேலைத் திட்ட பிரிவின் ஒருங் கிணைப்பாளர் லயனல் குருகே ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரையாற்றவுள்ளனர்.

இதன்போது சிறுபான்மை மக்களின் மொழி சார்ந்த உரிமையை உறுதிப்படுத்துதல், மேம்படுத்துதல் வலிமைப்படுத்துதல் தொடர்பான சட்ட வரைவு மற்றும் ஊடகங்களின் ஊடாக மொழிசார்ந்த உரிமையை உறுதிப்படுத்துவதில் ஏற்படும் முரண்பாடுகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்படவுள்ளன.

(எ)

# அவலத்துள் வாழும் கல்மடுக் கிராம மக்கள்

மன்னார் மாவட்டம் மடு பிரதேசத்துக்குட்பட்ட கல்மடு கிராமம் 1958ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அப்பொழுது 48நிரந்தர வீடுகள் இருந்ததாக ஊர்பெரியவர் ஒருவர் குறிப்பிட்டார். இதில் 28வீடுகள் முஸ்லிம்களுக்குச் சொந்தமானவையாகவும் எஞ்சிய 20வீடுகள் தமிழர்களுக்குச் சொந்தமானவையாகவும் இருந்தன. இக்கிராமத்தை ஒட்டி உவர்குளம், தணிச்சகுளம், அடம் பன்குளம், கல்மடுகுளம் என்ற பெரியகுளங்களும் ஏனைய சிறிய குளங்களும் அமைந்துள்ளன. இங்குள்ள மக்கள் கடுமையான உழைப்பாளிகள்.

விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட மக்கள் தமது கடின உழைப்பால் பொருளாதாரத்தில் தன்நிறைவு கண்டு சிறப்பாக வாழ்ந்துவந்தனர். இந்நிலையில் 1970ஆம் ஆண்டிற்கு முன்னர் இங்கிருந்த முஸ்லிம்கள் 28குடும்பத்தினரும் தமது வீடுகளையும் காணிகளையும் தமிழ் மக்களுக்கு விற்றுவிட்டு வெளியேறினர். அதிலிருந்து இக்கிராமம் முழுவதிலும் தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர். இப்பொழுது இக்கிராமம் 165 குடும்பங்களாக வளர்ச்சியடைந்துள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தில் இக்கிராம மக்களும் இடம் பெயர்ந்து வவுனியா கிடாச்சூரியில் இயங்கிவந்த இடைத்தங்கல் முகாமில் வசித்துவந்தனர். இக்கிராமத்தைச் சேர்ந்த 19குடும்பத்தினர் முள்ளிவாய்க்கால் வரை சென்று செட்டிகுளம் முகாமில் தங்கியிருந்து பின்னர் ஏனைய குடும்பத்தினருடன் 2010ஆம் ஆண்டு ஜூலைமாதம் மீள் குடியமர்ந்தனர்.

தற்பொழுது 133 குடும்பங்களைச் சேர்ந்த 503 உறுப்பினர்கள் மீள்குடியமர்ந்துள்ளனர். இங்கு ஒரு பாடசாலை இயங்குகிறது. இப்பாடசாலையில் தரம் 1 முதல் தரம்5வரை கற்பிக்கப்படுகின்றது. தற்பொழுது இந்தப் பாடசாலையில் 33 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இங்கு தூயபவுல் முன்பள்ளி என்னும் ஒரு பாலர் பாடசாலையும் இயங்கிவருகின்றது. இதில் 25பிள்ளைகள் பயில்கின்றனர். இப்பாடசாலைக்கான தளபாடங்கள், கற்றல் உபகரணங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் என்பன தேவைப்படுவதாக இப்பாடசாலையில் ஆசிரியைகளாகப் பணிபுரியும் எம்.ஷர்மிளா மற்றும் நேசமலர் ஆகியோர் தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தினால் இக்கிராமத்தைச் சேர்ந்த 3 பெண்கள் தமது கணவனை இழந்துள்ளனர். தடுப்பு முகாமில் 4 பேர் இருக்கின்றனர். 7 பேர் காயமடைந்துள்ளனர். 2 பேர் தமது அங்கங்களை இழந்துள்ளனர். முத்துலிங்கம் சுரேஸ்குமார் என்பவர் ஒரு கண், ஒருகை மற்றும் ஒருகால் என்பவற்றை இழந்துள்ளார். 5ஆண்கள் காணாமல்போயுள்ளனர். ஒரு பெண்மணியின் சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர்வு இடம்பெற்றுள்ள இக்கிராமத்தின் [illegible] கட்டுமானம் மற்றும் நிவாரண, வாழ்வாதார நடவடிக்கைகளை தொண்டு நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. ஆயினும் நிறுவனத்தின் செயற்பாடுகள் திருப்திகரமாகயில்லை என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராம மக்களின் நீரிறைக்கும் பம்பிகள், டிராக்டர்கள், மற்றும் உழவு இயந்திரங்கள் ஆகியவையும் மோட்டார் வாகன சேர்வீஸ்ஸ்ரேசன் வைத்திருந்த ஒருவரது அனைத்து உபகரணங்களும் முள்ளிவாய்க்காலில் கைவிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மீள்குடியமர்ந்த மக்கள் தமது உழைப்பினால் கிராமத்தில் தமது போக்குவரத்துக்கான வீதியை தாமே நிர்ணயித்து, விவசாய நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது போல் பயிரிடப்பட்ட நெற்காணிகளும் அண்மையில் பெய்த கடும் மழையினால் இம்மக்களின் வாயில் மண்ணைப் போட்டுவிட்டது.

### வவுனியன்

வயல்காணிகளை அண்மித்தே இவர்களது தற்காலிக மண்வீடுகளும் அமைந்திருப்பதால் வீடுகளில் நீர்ஊறி அவர்களின் வீடுகள் தங்குவதற்கே உபயோகமற்றதாக இருக்கின்றன. வடிந்தோடுகின்ற தண்ணீர் போவதற்கான வடிகால் வசதிகள் இல்லாததால் இவர்களின் வீட்டுத்தரைகள் மிகவும் ஈரமாக உள்ளன.

கைக்குழந்தைகளுடன் தாய் மார்களும் [illegible] முடியாதது. கிழக்கில் மக்கள்



வீடுகளுக்குள்ளேயே போக முடியாமல் உள்ளனர். இங்குள்ள மக்கள் வீட்டிற்குள் இருக்க முடியாமல் உள்ளனர். காணிகளும் கைவிரித்துவிட்டதால் இம் மக்கள் இப்பொழுது செய்வதறியாது உள்ளனர். எதற்காகக் கண்ணீர் விடுவதென்று தெரியாமல் அழுவதற்குக்கூட மறந்து போயுள்ளனர்.

கிராம மக்கள் தங்களுக்குச் சுகாதாரமான மலசல கூட வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும் என்றும் கிராமத்தைச் சுற்றியுள்ள ஒன்பதுபாதைகளின் 11 கி.மீ நீள சாலையை புனரமைத்துக்கொடுக்க வேண்டும் என்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதில் ஒரு ஆறுதலான விடயம் என்னவெனில் மீள்குடியமர்ந்த 133குடும்பங்களில் 68 குடும்பத்தினருக்கு வீடு கட்டித் தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்களது காணிகளுக்கு பெர்மிட்டுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னர் முஸ்லிம்கள் தமிழ் மக்களுக்கு விற்றுச் சென்ற காணிகளின் உறுதியை வாங்கியவர்களுக்கு மாற்றாததினால் இம் மக்கள் இப்பொழுது பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். முன்பு விற்றவர்கள் இப்பொழுது இக்காணிகளின்மீது உரிமை கோருவதாகவும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் 48 குடும்பத்தினருக்குத் தகரம் மட்டும் வழங்கப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய குடும்பத்தினருக்கு எவ்வித உதவியும் கிடைக்க வில்லை என்றும் கிராமவாசிகள் தெரிவித்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்தரு மரங்கள் போனதுதான் மிச்சம் மின்சாரத்தை இன்னமும் காணவில்லை

## நெடுங்கேணி மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஒக்.28

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் மூலம் நெடுங்கேணி கூழாங்குள வீதியூடான நலுமடு, கற்குளம், பட்டிக்குடியிருப்பு, மருதோடை ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காகக் கடந்த 4 ஆம் திகதி வீதியோர மரங்கள் தறிக்கப்பட்டு முழுமையாக அகற்றப்படாமல் உள்ளதாகவும் இதுவரையில் மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

இதனால் வீடுகளில் வீதியோரமாக இருந்த பயன்தரு மரங்கள் பல அகற்றப்பட்டதாகவும் வீதியில் நின்ற பல பெரிய மரங்கள் உரிய திணைக்களத்தால் எடுத்துச் செல்லப்பட்டன.

ஏனைய தறிக்கப்பட்ட வீதியோர மரங்கள் பல அங்குமிங்குமாக வீதிகளில் கிடக்கின்றன.

மேற்படி பணி தொடங்கி 8 மாதங்கள் கடந்த போதிலும் இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகூட மேற்கொள்ளப்படவில்லை எனவும் வீதியோர பெரிய மரங்கள் தவிர ஏனைய மரங்கள் முழுமையாக அகற்றப்படவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தறிக்கப்பட்ட மரங்களை முழுமையாக அகற்றி, விரைவில் மின்சாரத்தை வழங்குவதற்கு உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)



முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் மாணவர்களும் அதிபர், ஆசிரியர்களும்

# நோய்வாய்ப்பட்ட அரசியல் கைதியை மனிதாபிமானம் கருதி விடுவியுங்கள்

## நீதி அமைச்சரிடம் எம்.பி. வினோ வேண்டுகோள்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் மன்னாரைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் என்ற அரசியல் கைதியின் விடுதலையில் மனிதாபிமான அணுகுமுறையைக் கையாளுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் நீதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது கொழும்பு வைத்தியசாலையில் கால் விலங்கிடப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வரும் நிரந்தர நோயாளிக் கைதியான ஜெகதீஸ்வரன் பற்றி மனிதாபிமான அமைப்புக்கள், சக தமிழ் அரசியல் கைதிகள், அரசியல்வாதிகள், பொது அமைப்புக்கள் எனப் பலரும் ஊடகங்களூடாகவும் நேரிடையாகவும் உங்களிடமும் அரசிடமும் முறையிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அந்தக் கைதியின் விடுதலையில் அவசர முடிவெடுக்கும் கடமைப்பாட்டை நீங்கள் கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

குற்றுயிரும் குலையுயிருமாக இருக்கின்ற ஒரு கைதியை தூக்குக் கயிற்றுக்கு அருகில் கால், விலங்குடன் நிறுத்திவிட்டு வேடிக்கை பார்க்கின்ற ஒரு செயலாகவே இந்தக் கைதியின் நிலைமை இருக்கின்றது. இங்கே மனிதாபிமானம் ஏற்கனவே தூக்குக் கயிற்றுக்குள் அகப்பட்டு இறுக நெரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மரணத்தின் வாயிலில் நின்று உயிர்ப்பிச்சை கேட்கும் இந்தக் கைதியின் மரண ஓலம் எவர் காதிலும் புகாமல் இருப்பது ஏன் எனப் புரிந்து கொள்ள முடியவில்லை. நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையீனங்களே மேலெழுந்து நிற்கும் நிலையிலும் சட்டத்துக்கும் மனிதாபிமானத்துக்கும் இடையில் மனிதத்துவத்துக்கு சக்தி அதிகம் என நம்புகிறேன்.

இதன் அடிப்படையில் உங்களால் உங்கள் அரசால் கருணை கொள்ளப்பட்டு அந்த நோயாளி கைதியை விடுவிக்கவும் சுதந்திரமாகச் சிகிச்சை பெற்று உடல் குணமாக்கப்படவும் உயிர் காப்பாற்றப்படவும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு உங்களைத் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன். புலிகள் இயக்கப் போராளிகளை புனர்வாழ்வு கொடுத்து புது வாழ்வுக்குள் இணைத்துக் கொள்கின்ற அரசு நீதிகேட்டு நியாயத்துக்காக சிறைச்சுவர்களுக்குள் போராடும் வாழ்வை இழந்து நிற்கும் தமிழ் அரசியல்கைதிகளின் பக்கம் கருணைப்பார்வையை நீதியுடன் பார்க்க வேண்டும் - என்றுள்ளது. (எ-601)

# கசிப்பை வைத்திருந்த நபருக்கு தண்டம்

கிளிநொச்சி,ஒக்.28

கிளிநொச்சிப் பகுதியில் 27 போத்தல் கசிப்பை வைத்திருந்த நபருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். இதையடுத்து குறித்த குற்றவாளிக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

தண்டப் பணம் கட்டத் தவறின் நான்கு மாதம் சர்தாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிவான் பெ.சிவகுமார் தீர்ப்பு வழங்கியுள்ளார். (எ-6)

# சாரணருக்கு சின்னம் சூட்டல்

பரந்தன் மகாவித்தியாலய சாரணர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது. வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கிளிநொச்சி சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிர மணியமும் சிறப்பு விருந்தினராக சாரணர் அபிவிருத்திக்கான உதவி ஆணையாளர் கு.சுமுகலிங்கமும் கலந்து கொண்டு சாரணர்களுக்குச் சின்னஞ் சூட்டியுள்ளனர். (ம-207)

# புதுக்குடியிருப்பு பகுதியில் பெண்ணொருவர் கடந்த 20 ஆம் திகதி காணாமல் போயுள்ளார்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் வாய் பேசமாட்டாத பெண்ணொருவர் காணாமல் போயுள்ளார் என அவரது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.அண்மையில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட கோம்பாவில் பகுதியைச் சேர்ந்த வாய் பேசமாட்டாத பெண்ணொருவரே கடந்த 20 ஆம் திகதி காணாமல் போயுள்ளார்.

கோம்பாவில் புதுக்குடியிருப்பு பகுதி யில் மீளக்குடியமர்ந்தவர்கள் இராணுவ குடும்பப்பதிவுக்கான குடும்பப்புகைப்படம் எடுப்பதற்காகச் சென்றிருந்தபோது இவர் காணாமல் போயுள்ளதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வட்டாரம் கோம்பாவில் புதுக்குடியிருப்பை சேரந்த செல்வரத்தினம் சாந்தமலர் (வயது 39) என்ற பெண்ணே இவ்வாறு காணாமல் போயுள்ளார். கோம்பாவில் காட்டாமணக்கு பிள்ளையார் கோயில் வீதியில் அவரது தாயாருடன் சென்று குடும்பப் பதிவுகள் செய்யும் இடத்தில் இருந்தார் என்றும் பின்னர் காணாமல் போனார் என்றும் உறவினர்களால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் காணாமல் போய் ஆறுநாள்கள் கடந்த நிலையில் இதுவரை எந்தத் தக வல்களும் கிடைக்கவில்லை என உறவினர்கள் தெரிவிக்கின்றனர். புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மீள்குடியமர்வு செய்யப்படாத பகுதிகளுக்குள் இவர் சென்றிருக்கலாம் எனவும் இந்தப்பகுதிக்குள் சென்று தேட முடியாது இருப்பதாகவும், உறவினர்கள் தெரிவிக்கின்றனர். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் பொலிசார் சம்பவ இடத்திற்கு சென்று தேடுதல்களையோ அல்லது விசாரணைகளையோ இது வரையில் மேற்கொள்ளவில்லை எனவும் உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-6)

# 19,000 ஹெக்டேயரில் இம்முறை நெற்செய்கை

வவுனியா, ஒக்.28

வவுனியாவில் இந்த ஆண்டு இறுதிகாலப் போகத்திற்கு 19 ஆயிரத்து 438 ஹெக்டேயரில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ஜெ.ஜெகநாதன் இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த ஆண்டு 17 ஆயித்து 524 கெக்டெயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் 15 ஆயிரத்து 724 கெக்டெயரிலேயே அறுவடை செய்ய முடிந்திருந்தது. ஏறத்தாழ 4500 ஏக்கர் நெற்செய்கை வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக 56 ஆயிரத்து 482 மெட்ரிக்தொன் நெல்லினையே உற்பத்தி செய்ய முடிந்ததாகவும் தெரிவித்தார்.

# துணுக்காயில் சிறப்புற நடந்த சிறுவர் முதியோர் தினம்

துணுக்காய், ஒக்.28

சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வு துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணிக்குப் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தலைமையில் நடைபெற்றது.

சிறுவர்கள், முதியோர்களுக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வு கிராம அலுவலர் சி.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. மூவேந்தர் முன்பள்ளிச் சிறார்களின் பான்ட் வாத்திய இசை முழங்க சிறுவர் முதியோர்கள் பிரதேச செயலர் அலுவலகத்தின் பிரதான வீதியில் இருந்து செயலக வளாகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தேசியக் கொடியை பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் ஏற்றி வைக்க தேசிய கீதத்தை பாடசாலை மாணவர்களினால் இசைக்கப்



பட்டது. ஆசியுரையை புகழேந்திநகர் பால விநாயகர் ஆலய குருக்கள் உருத்திர மூர்த்தி, வண. பிதா தயாகரனும் வரவேற்புரையை சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் செல்வி சுபாஜினியும் சிறப் [illegible] திருமதி வில்வராசா, மல்லாவி பிரதேச காவல்துறை பொறுப்பதிகாரி எஸ்.ஜே.குணபால, முல்லை மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் குணசிங்கம், உள்ளூராட்சி திணைக்களத்தின் துணுக்காய் பிரதேச சபையின் உப தலைவர் எஸ்.செல்வரத்தினம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் 150 முதியோர்கள் கௌரவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர் கிராம அலுலவர்கள், பாடசாலை மணவர்கள், ஆசிரியர்கள் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-415)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடியோக்களில் இலகுவாக மாற்றம் செய்ய இலவச மென்பொருள்

இணையத்தில் எத்தனையோ வீடியோ மாற்றம் செய்யும் மென்பொருள்கள் கிடைக்கின்றன. சிலவற்றை பணம் கொடுத்து வாங்க வேண்டும். சில குறிப்பிட்ட நாள்களுக்கு இலவச சேவை அளிக்கு... ஆனால் இந்த மென்பொருளானது வீடியோக்களை மாற்றம் செய்யும் இலவச சேவையை முழுமையாக அளிப்பதுடன் அதிக வசதிகளை கொண்டுள்ளது.

இதனை பதிவிறக்கம் செய்து நிறுவியதும் உங்களுக்கு ஒரு விண்டோ ஒப்பன் ஆகும். இதில் உள்ள Add Video பட்டனை கிளிக் செய்வதன் மூலம் எம்மிடம் உள்ள வீடியோ படங்களை தெரிவு செய்யலாம். இதன் கீழேயே எண்ணற்ற போர்மட்டுக்கள் உள்ளது.

எந்தத் தரத்தில் படம் வேண்டுமோ அதனையும் நாம் தேர்வு செய்து கொள்ளலாம். ஓடியோ கோப்புகளுக்கான ஸ்கிறீன்சேவரையும் நாம் எளிதில் தேர்வு செய்து கொள்ளலாம். இதிலிருந்து நாம் You tube தளத்திற்கு நேரடியாக பதிவேற்றம் செய்து கொள்ளலாம். மேலும் நமது வீடியோவினை flv மற்றும் swf கோப்புகளாக மாற்றம் செய்து கொள்ளலாம். மேலும் நாம் பார்க்கும் வீடியோவினை வலது இடமாகவும் மேலும் கீழாகவும் மாற்றிக் கொள்ளலாம். வழக்கமாக புகைப்படத்தில் தான் நாம் இவ்வாறு மாற்ற முடியும். இப்போது வீடியோவிலும் நாம் இதில் எளிதில் மாற்றிக் கொள்ளலாம். இணையத்தள முகவரி http://www.4shared.com/file/pr6FMxcT/FreemakeVideoConverterSetup.html.



# Youtube Space Lab:

## விண்வெளியில் நிகழும் அதிசயங்களை அறிந்து கொள்வதற்கு

வளர்ந்து வரும் தொழில் நுட்பத்தில் மனிதன் தினம் தினம் பல்வேறு முயற்சிகளையும் சோதனை களையும் செய்து பல அரிய சாதனை களை நிகழ்த்தி வருகிறான். பூமியில் ஆராய்ச்சி செய்தது போதும் என்று விண்வெளியில் ஆராய்ச்சி கூடம் அமைத்து பல அரிய தகவல் களையும், கிரகங்களையும் தினம் தினம் கண் டறிய முயற்சிகளையும் மேற்கொள்கின்றான்.

விண்ணில் நடப்பது என்ன, கிரகங்கள் எப்படி இருக்கின்றன, என்ன ஆச்சரியங்கள் நடக்கின் றன இவை அனைத்தையும் நம் கண் முன்னே நிறுத்தும் முயற்சியாக யூடியுப் நிறுவனம் தற்பொழுது Space Lab என்ற புதிய வசதியை மக்களுக்கு வழங்கி உள்ளது.

இந்தத் தளத்தில் விண்வெளியின் நடக்கும் பல அதிசய செயல்களை வீடியோவாக வாசகர் களுக்கு வழங்குகிறது யூடியுப் தளம் மற்றும் 18 வயதுக்கு உட்பட்டோருக்கு போட்டிகளை வைத்து இலவசமாக அமெரிக்காவுக்கு செல்லும் வாய்ப்பையும் வழங்குகிறது.

http://www.youtube.com/spacelab

# உப்பு மூலம் Hard Disk அளவை 6 மடங்கு அதிகரிக்கலாம்

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள். உணவுக்கு சுவை சுவையைத் தருவதில் முக்கிய பங்கு உப்புக்கு உள்ளது. உண வுக்கு சுவை அதிகரிக்கும் உப்பு, கணினியின் அளவு கூட்டும் அதிசயத்தை விஞ் ஞானிகள் கண்டு பிடித் துள்ளனர். கணினியில் இயங்குவதற்கு தேவை யான மென்பொருள்கள், கணினில் நாம் பதிவு செய்கிற போட்டோ, பாட்டு, சினிமா உள்ளிட்ட பைல்கள் அனைத்தும் ஹார்ட் டிஸ்க்கி லேயே பதிவாகின்றன. கணினியில் கண்டு பிடிக்கப்பட்ட புதிதில், ஹார்ட் டிஸ்க்கு களை வைப்பதற்கு பெரிய அறைகள் தேவைப்பட்டன. டிஸ்க் அளவைகுறைப் பதற்கான ஆய்வுகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.




- கையடக்க ஹார்ட் டிஸ்க்குகள் மட்டுமின்றி சட்டை பொக்கெற்றில் போடுகிற சைஸில்கூட தற்போது ஹார்ட் டிஸ்க் வந்துவிட்டது. இந்த அளவை மேலும் குறைப்பது தொடர்பாகவும், கொள்ளளவை அதிகப்படுத்தி அதிக தகவல்கள், பைல்களைச் சேமிக்கும் வகையிலும் ஆராய்ச்சிகள் தொடர்ச்சியாக நடக்கின்றன. இது தொடர்பாக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தகவல் ஸ்டோரேஜ் கழகம் இணைந்து ஆய்வு மேற்கொண்டது. பேராசிரியர் ஜோயல் யாங் தலைமையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இதில் கிடைத்த ஆச்சரியமான தகவல்கள் பற்றி ஜோயல் கூறுகையில்: கணினியின் மிக முக்கியமான பகுதி ஹார்ட் டிஸ்க். பதிவுகள் அனைத்தையும் பாதுகாப்பது இதுதான். சமையலுக்குப் பயன்படும் ஒரு சிட்டிகை உப்புத் தூள் இதன் கொள்ளளவை அதிகரிப்பது முதலில் ஆச்சரியமாக இருந்தது. ஆனால் எதிர்பார்த்ததைவிட அதிக வெற்றி கிட்டியது நம்பிக்கையை அதிகரித்துள்ளது. இந்த முறையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலும் அதிகமான வெற்றி கிட்டியுள்ளது.

டேபிள்சோல்ட் எனப்படும் தூள் உப்பைக் கொண்டு கணினியின் ஹார்ட் டிஸ்க்கின் தகவல் பதிவுத் திறனை 6 மடங்கு அதிகரிக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹார்ட் டிஸ்க் தயாரிப்பின்போது அதில் சோடியம் குளோரைட்டு எனப்படும் சாதாரண உப்பையும் சேர்த்து பயன்படுத்தும்போது, ஹார்ட் டிஸ்க் கின் பதிவு திறன் ஒரு சதுர இன்சுக்கு 3.3 டெராபைட் அதிகரிக்கிறது. அதாவது, டிஸ்க் கொள்ளளவு 6 மடங்கு அதிகரிக்கிறது. உப்பு சேர்ப்பதால் கணினிக்கோ, இதர பாகங்களுக்கோ எந்தப் பாதிப்பும் இல்லை. இது மட்டுமின்றி, ஹார்ட் டிஸ்க்கின் செயற்பாடும் சிறப்பாக இருக்கிறது. இவ்வாறு ஜோயல் கூறினார்.

# ஒன்லைனில் எளிதான வரைபடங்களை உருவாக்குவதற்கு



ஒரு செயற்றிட்டம் அல்லது செய்யும் வேலை பற்றிய தகவல்களைக் கொண்டு [illegible] லைன் மூலம் சில நிமிடங்களில் உருவாக்கலாம். செயல் திட்டங்கள் ஒவ்வொரு நிலையிலும் எப்படி செயற்படும் என்பதை படங்களின் வாயிலாக வெளிக்கொண்டு வருவது தான் முழுமையான திட்டமாக இருக்கும். அப்படி முழுமையான செயல் திட்டம் உருவாக்குவதற்கு Graphic Diagram எளிதாக வரைவதற்கு வசதியாக ஒரு தளம் உள்ளது.

இந்தத் தளத்திற்குச் சென்று இடது பக்கம் இருப்பதில் நம்முடைய செயல் திட்டத்திற்கு எந்த வடிவம் சரியாக இருக்குமோ அந்த வடிவத்தை முதலில் தேர்ந்தெடுத்து அதில் இருக்கும் பலவி தமான வடிவங்களில் எமக்கு எந்த வடிவம் வேண்டுமோ அதை தேர்ந்தெடுத்து வலது பக்கம் இருக்கும் இடத்தில் சேர்த்து நேர்த்தியான செயல் திட்டம் உருவாக்கலாம்.

எங்கு எப்படி இணைப்பு கொடுக்க வேண்டும் என்பதில் தொடங்கி அனைத்துவிதமான வடிவங் களையும் நாம் சுருக்கி நமக்கு தகுந்தாற் போல் மாற்றி அமைக்கலாம். எல்லா வடிவங்களையும் சேர்த்து உருவாக்கிய பின் நம் செயல் திட்டத்தை PNG கோப்பாக மாற்றி சேமிக்கலாம்.

http://live.yworks.com/graphity/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருகையால் தந்து மறுகையால் பறிக்கும் சம்பள அதிகரிப்பை அரசு கைவிட வேண்டும்

## இஸ்லாமிய ஆசிரிய சங்கம் கோரிக்கை

அம்பாறை, ஒக்.28

சம்பள அதிகரிப்பு என்ற பெயரில் ஒருகையால் தந்து மறுகையால் பறிக்கும் நடைமுறையை அரசு கைவிட வேண்டும் என்று இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவர் எம். அனஸ் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற் கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அரசு சம்பள சீராக்கல் மேற்கொள்ளும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு கையால் தந்து மறுகையால் பறிக்கும் பொறிமுறையைக் கையாள முனையக் கூடாது என்பது இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் வினயமான கோரிக்கையாகும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் சார்பில், தலைவர் எம்.அனஸ்விடுத்துள்ள இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

"2006 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டபடி இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு ஒன்றுக்கு, ஆகக்குறைந்தது 5830 ரூபாவும், 3- II இற்கு 4595 ரூபாவும் அதிகரிக்கப்படுவதாகவும் 6/2006 இலக்கச் சுற்றறிக்கை மூலம் அரசு அறிவித்தது.

ஆனால் 15/2000 இலக்கச் சுற்றிக்கை மூலம் வழங்கப்பட்டு வந்த 1000 ரூபாவுக்குக் குறையாத, சம்பளத்தில் 10 வீத இடைக்காலப் படி மற்றும் 24/2001 இலக்கச் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டு வந்த 1200 ரூபா இடைக்காலப்படி என்பவற்றை அதிகரிப்பில் உள்ளடக்கிய தன் மூலம் 5830 ரூபாவை 3272 ரூபாவாகவும்,4595 ரூபாவை 2395 ரூபாவாகவும் குறைத்துக் கொண்டது.

அத்தோடு 01.01.2006 இல் அதிகரிப்பில் 50 வீதமே வழங்கப்படுமென்ற அறிவிப்புடன் மீதியைச் சுருட்டிக் கொண்டது. இது தவிர வகுப்பு ஒன்றுக்கு 9/2004 இலக்கச் சுற்றிக்கைச் சம்பளத்திட்டத்தில் வழங்கப்பட்டு வந்த 715 ரூபாவிலான ஐந்து சம்பள ஏற்றங்களின் பெறுமதியும் 6/2006 இலக்க சுற்றறிக்கை சம்பளத் திட்டத்தில் 645 ரூபாவாகக் குறைக்கப்பட்டு, அதனை முன்னர் அனுபவித்தவர்களுக்கு மாத்திரம் சீராக்கல்படி என்ற பெயரில், தனிப்பட்ட முறையில் குறைக்கப்பட்ட 70 ரூபாவையும் அனுபவிக்க அனுமதிக்கப்பட்டது.

அடுத்து 6/2006 (IV) இலக்கச் சுற்றிக்கை மூலம் சம்பள ஏற்றப் பெறுமதிகளின் தொகையை அதிகரித்த அரசு, முன்னர் பெற்று வந்த சம்பளப்படியேற்றங்களின் எண்ணிக்கையைக் குறைத்து அதிகரிப்பின் பல மடங்குகளைச் சுருட்டிக் கொண்டது.

படியேற்றங்களின் எண்ணிக்கைக் குறைப்பினால், சம்பளப் படியேற்றப் பெறுமதி பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் 6/2006 (V) சுற்றிக்கை மூலம் அதனைச் சரிசெய்தல் படி என்ற பெயரில் தனிப்பட்ட முறையில் அனுபவிக்க அனுமதித்த அரசு, தற்போது முன்னர் குறைக்கப்பட்ட படியேற்றங்களின் எண்ணிக்கையை 28/2010 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மூலம் நிலுவையின்றி மீண்டும் வழங்க முன் வந்துள்ள அதே வேளை சரிசெய்தல் படியை முற்றாக நிறுத்திக் கொண்டது.

எனவே அரசு எதிர்காலத்தில் சம்பளச் சீராக்கல் மேற்கொள்ளும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு கையால் தந்து மறுகையால் பறிக்கும் பொறி முறையைக் கையாள முனையக்கூடாதென்பது இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கத்தின் வினயமான கோரிக்கை ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-30)

# சம்பூர் மக்களை வேறு இடங்களில் குடியமர்த்த அரசு நடவடிக்கை

## பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

மூதூர், ஒக். 28

சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களை அரசு அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தாது வேறு இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று அந்தப் பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சம்பூரில் இருந்த மக்களைத் தனித்தனியாகப் பிரித்து ஆறு கிராமங்களில் குடியமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இது தமது சொந்த இடத்தைப் பறித்தது மட்டுமன்றி, தமது உறவினர்களையும் தம்மிலிருந்து பிரிக்கும் நடவடிக்கை என்று சம்பூர் மக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு சீதனவெளி, வேம்படித் தோட்டம், இளக்கந்தை, வீரமாநகர் வடக்கு, தங்கபுரம், குறவன் வெட்டுவான் ஆகிய பகுதிகளில் தலா 20 பேர்ச்சஸ் காணியும் நிரந்தரம் அற்ற தற்காலிக வீடு ஒன்றும் ஆரம்பத்தில் வழங்கப்படவுள்ளன என்று திருகோணமலை மாவட்ட செயலகம் துண்டுப் பிரசுரம் மூலம் தெரிவித்துள்ளது.

இந்தக் கிராமங்களில் குடியிருக்க விருப்பம் தெரிவிப்பவர்கள் வரிசைக் கிரமப்படி தெரிவு செய்யப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு வந்து பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்டச் செயலகம் வெளியிட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண அபிவிருத்தி: ஜப்பானிய அரசு நிதி ஒதுக்கீடு

திருகோணமலை, ஒக்.28

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நீர்ப்பாசனக்குளம், கிராமிய வீதி, மாகாணசபை வீதி ஆகியவற்றைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு ஆயிரத்து 894 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய ஜப்பான் நாட்டு நிதி நிறுவனம் முன் வந்துள்ளது.

இந்தப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளுக்கான கூட்டம் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும், கிராமிய மின்சாரம், நீர்வழங்கல் அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெப்பை தலைமையில் பிரதம செயலாளர் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர் உரை நிகழ்த்துகையில், கிழக்கு மாகாணம் கடந்த யுத்த காலத்தின்போது மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இதனை புனர்நிர்மாணம் செய்வதற்கு ஜப்பான் தனது நிதி நிறுவனம் மூலமாகப் பல பில்லியன் நிதியை இலங்கைக்கு உதவியுள்ளது. இதனையிட்டு நாட்டு மக்கள் சார்பாக ஜப்பானுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என்றார்.

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நீர்ப்பாசனக் குளத்துக்கு 410 மில்லியன் ரூபாவும், கிராமிய வீதி புனர்நிர்மாணத்திற்காக 214 மில்லியன் ரூபாவும், மாகாண சபை வீதிக்காக ஆயிரத்து 270 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் உதுமாலெப்பை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பிரதம பிரதிச் செயலாளர் வி.பி. பாலசிங்கம், அரச உயர் அதிகாரிகள் ஜப்பான் நாட்டுத் தொண்டு நிறுவன இலங்கைப் பிரதி நிதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வெளிநாட்டு நாணயங்களை கடத்தியவர்கள் கைது

தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களைக் கடத்திய நபர்களை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

பண்டாரநாயக்க விமான நிலையத்தின் ஊடாக தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களைக் கடத்திச் செல்ல முற்பட்டதாகவும், அந்த முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் விமான நிலைய காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மாத்தளை மற்றும் கிராண்ட்பாஸ் பிரதேசங்களைச் சேர்ந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிகவும் நுட்பமான முறையில் வெளிநாட்டு நாணயங்களும், தங்கமும் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு கடத்தப் படவிருந்ததாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.கைது செய்யப்பட்ட நபர்களிடம் காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மீட்கப்பட்ட தங்கம் மற்றும் நாணயங்களின் மொத்தப் பெறுமதி இதுவரையில் மதிப்பிடப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# வெள்ளம் பாதித்த சம்மாந்துறை மக்களுக்கு ஓமான் நாட்டின் நிவாரண உதவிகள்



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சம்மாந்துறை பிரதேச தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஓமான் நாட்டின் உதவியால் கடந்த செவ்வாய்க்கிழமை நிவாரணம் வழங்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சம்மாந்துறை பிரதேச செயளாலர் ஏ.மன்சூர் தலைமையில் அப்துல் மஜீட் மண்டபத்தில் நடைபெற்ற இந்தநிகழ்வில் கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சம்மாந்துறை பிரதேச மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 400 மாணவர்களுக்கு பாடசாலை சீருடை, புத்தகப்பைகளுடன் அப்பியாசக் கொப்பிகளும் 50 விவசாய, தச்சு, மேசன் தொழிலாழிகளுக்கு உபகரணங்களும் மற்றும் 500 பேருக்கு உலர் உணவும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர பிரதம விருந்தினராகவும் ஓமான் நாட்டின் இலங்கைக் கான தூதர் ஹுமைட் அல்மானி கௌரவ விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.சி. பைசால் காசிம், பி.எச்.பியசேன, திருமதி சிரியானி விஜயவிக்கிரம மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌசாத் உட்பட முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# சிறுவர் வைத்தியசாலையில் ஸ்கேன் இயந்திரம் பழுது

## பேராதனை நோயாளர் அசௌகரியம்

பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் உள்ள சீ.டீ.ஸ்கேன் இயந்திரம் பழுதாகி மூன்று வாரங்களாகியும் இதுவரை திருத்தப்படவில்லை என்று வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர்.

பழுது பார்க்கும் பிரிவு இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நோயாளிகளை தனியார் மருத்துவமனைகளுக்கு அனுப்புவதால் பெரும் செலவும், அலைச்சலும், காலதாமதமும் ஏற்படுகின்றன என்றும் அந்த வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர்.

பேராதனை வைத்தியசாலையின் உயரதிகாரியொரு வரிடம் இது பற்றி வினவிய போது ஸ்கேனர் பழுதடைந்தவுடன் சுகாதார அமைச்சின் பொறியியலாளர் பிரிவுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது என்றும் அவர்கள் மூன்று வாரங்களாகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் கூறினார்.(வ)

# ஆற்றில் மூழ்கி குடும்பஸ்தர் பலி

மட்டக்களப்பு, ஒக்.28

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை சின்னத் தட்டுமுனை ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் படகு கவிழ்ந்ததனால் ஆற்றில் மூழ்கி மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றது. ஐந்தாம் வட்டாரம் வாகரையைச் சேர்ந்த வீரக்குட்டி தம்பிராசா (வ்யது 68) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவர்.

இருப்பினும் இவருடன் உதவிக்குச் சென்ற சகோதரர் நீந்தி உயிர் தப்பியுள்ளார். சடலம் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேஷம்:**
வியக்கத்தக்க செய்திகளைக் கேட்கலாம். ஆசைகள் நிறைவேறும் நாள். ஆரோக்கிய மேன்மைக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். சுலநலமின்றி பிறருக்காக சில வேலைகளைச் செய்வீர்கள். மனதில் உற்சாகம் குடிகொள்ளும். தொழில் ரீதியான ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி உண்டு.




**இடபம்:**
வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள். பெரிய மனிதர்களின் அன்பைப் பெறுவீர்கள். தொழிலில் மேன்மையான நிலைமை காணப்படும். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. உறவினர் ஒருவருக்காக நண்பர் ஒருவரிடம் உதவி கேட்கலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். ஆதாயகரமான நாள்.




**மிதுனம்:**
சில விடயங்களை நினைத்து அதிக பயம் கொள்வீர்கள். அயலாரின் அதிருப்திக்கு ஆளாகலாம். கடன் தொல்லைகளைச் சமாளிப்பீர்கள். பொதுவாழ்வில் உள்ளோருக்கு அலைச்சல் ஏற்படும். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நீங்கள் செல்லும் இடத்தில் உறவினர் அல்லது நண்பர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம்.




**கடகம்:**
கடன் வசூலிப்பு முயற்சிகள் பலன் தரும். புதியவர்களின் சந்திப்பு நிகழும். நண்பர்களை நம்பி முக்கியமான வேலைகளை ஒப்படைப்பீர்கள். உறவினர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும்.



**சிங்கம்:**
ஆரம்பித்த காரியங்கள் துரிதமாக நடக்கும் நாள். எண்ணக் கனவுகள் நனவாகும். நெருங்கிய நண்பர் அல்லது உறவினர் ஒருவர் உங்களுக்கு கை கொடுத்து உதவலாம். அதிகச் செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவிற்கு வரும். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும்.



**கன்னி:**
தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகலாம். தொழில் ரீதியான மறைமுகமான போட்டிகளைச் சந்திக்கலாம். உங்களிடம் நேரடியாகப் பேசும் சிலர் மறைமுகமாக விமர்சிக்கலாம். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சிலர் உங்களிடம் கடனாகப் பணம் கேட்கலாம்.



**துலாம்:**
கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். சொல்வாக்கைக் காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். தொழில் கூட்டாளிகள் அனுசரணையாக இருப்பர். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். எதிர்பாராத உதவி கிட்டும்.




**விருச்சிகம்:**
சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி நாடி வரலாம். நெஞ்சை விட்டு அகலாத நிகழ்ச்சிகள் நடக்கலாம். வீடு, நிலம் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். நோய் உபாதைகளைத் தவிர்க்க உணவில் கவனம் அவசியம். பழைய விஷயங்களை நினைத்துப் பார்த்து புதிய காரியம் ஒன்றைச் செய்வீர்கள். அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.




**தனுசு:**
குடும்ப உறுப்பினர்கள் உங்களின் எண்ணம் போல் நடந்து கொள்வர். நினைத்த காரியங்கள் குறித்த நேரத்தில் நடந்து சந்தோஷம் அடைவீர்கள். சகோதரிகள் வழியில் உருவான அன்புத் தொல்லைகள் அகலும். பழைய கடன் மிகுதி ஒன்றைச் செலுத்துவீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காக பணத்தை செலவிடலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும்.



**மகரம்:**
கணவன், மனைவி இடையே ஏற்பட்ட பிணக்குகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். நண்பர்கள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் தீரும். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். தொழில் முன்னேற்றம் பற்றிய பற்றிய சிந்தனை அதிகரிக்கும். சிலர் உங்களை ஏமாற்ற முற்பட்டாலும், சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொள்வீர்கள்.



**கும்பம்:**
உடன் பணிபுரிவோர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கோபம் உண்டாக்கலாம். சிலர் வெளியூர் அல்லது வெளிநாட்டுப் பயணம் செல்லலாம். சில விடயங்களில் தனிமையில் இனிமை காண முற்படுவீர்கள். நண்பர்களுடன் சேர்ந்து முக்கிய காரியம் ஒன்றைச் செய்வீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம்.



**மீனம்:**
திட்டமிட்ட சில காரியங்களை தள்ளிவைப்பீர்கள். உத்தியோகத்தர்கள் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள். பிரியமான சிலரிடம் யோசித்துப் பேசும் நிலைமை உருவாகலாம். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்று முடியாமல் போகலாம். பணத்தட்டுப்பாடு ஏற்படும்.

# சுதந்திரம் கிடைத்த ஒ
# சமஷ்டிக் கோரிக்கை

**பொது நலவாய நாடுகள் அமைப்பின் மாநாடு 1974 கொழும்பில் நடைபெற்றது. தமிழ் மக்களின் உரிமைகள் பறி ஏற்பட்ட அரசியல் உரிமைகளின் இழப்புகள் குறித்து, தமிழர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், மாநாட்டில் பங்குபற்றிய வெளி மகஜரில் விவரித்திருந்தார்.**

**" இலங்கைத் தமிழரிடமிருந்து பொதுநலவாய நாடு பதினொரு பக்க ஆவணத்தின் முதற்பகுதியின் தமிழாக்கம் - ஆஸ்திரேலியாவில் இன்று (28.10.2011) ஆரம்பமாகும் இருபத்திரண்டாவது மாநாட்டை ஒட்டி இங்கு பிரசுரமாகிறது**

இலங்கையில் உள்ள பிணக்கு என்ன? இனப் பிரச்சினையா? பௌத்த மதத்துக்கு எதிரான வரலாற்றுப் பயமுறுத்தலா? விடுதலைப் போராட்டமா? அல்லது துரதிர்ஷ்டவசமான அரசியல் நிர்வாகச் சீர்கேடா? இலங்கையிலுள்ள பிணக்கை இவ்வாறு பல்வேறு பதங்களுக்கு உட்படுத்தலாம்.

கொழும்பிலும், கண்டியிலும் உள்ள ஆசிரியர்கள் நன்கு பரிச்சயமானவர்கள். ஆனால், நாட்டின் தெற்கு, கிழக்கு, வடக்குப் பிரதேசங்களில் உள்ளவர்களின் கண்ணோட்டம் என்ன?

ஆசிரியர்கள் இந்தப் பிணக்குகளை வித்தியா சமானதொரு நோக்கத்தில் பார்க்கிறார்கள். சிலது தெளிவாக அரசியல் ஆதிக்கத்துக்கு உட்பட்டு செயற்படுபவை. ஏனையவை மேலதிக அறிவுசார் இடைவெளியைக் கொண்டவை. சிலர், கற்காலம்வரை பின்னோக்கிச் சென்று இந்தப் பிணக்குக்கு சரித்திர முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மேலும் சிலர் சமகால அரசியல் நிலைவரத்தையும் யுத்தம் ஏற்படுத்திய மனிதாபிமான பின்விளைவுகளையும் பார்க்கிறார்கள்.

ஐரோப்பியர்கள் இலங்கையைக் கைப்பற்றியபோது, இங்கு மூன்று வெவ்வேறு இராஜதானிகள் இருந்தன. வடக்கில் ஒரு தமிழ் இராஜதானியும், தெற்கில் இரண்டு சிங்கள இராஜதானிகளும் இருந்தன. 1619 ஆம் ஆண்டு தமிழ் இராஜதானி போர்த்துக்கேயர்களிடம் வீழ்ந்தது. 1658 இல் ஒல்லாந்தர்கள் போர்த்துக்கேயரை போரில் வென்றனர். அதனையடுத்து 1796 இல் ஆங்கிலேயர் ஒல்லாந்தரை வென்று ஆட்சியைக் கைப்பற்றினர். 1815 இல் பிரித்தானியர் கண்டி இராஜ்ஜியத்தையும் தமதாக்கிக்கொண்டனர். மூன்று இராஜதானிகளும் இவ்வாறு கைமாறின.

இந்த மூன்று இராஜதானிகளும் வெவ்வேறாக செயற்பட்டுவந்ததுடன், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருந்தன. 1833 இல் ஆங்கிலேயர்கள் மூன்று இராஜ்யங்களையும் ஒன்றிணைத்து ஒரு நிர்வாகக் குடையின் கீழ் கொண்டுவந்தனர். நிர்வாகத்தை இலகுவாக்கச் செய்த இந்த ஒன்றிணைப்பில் பொதுமக்களின் கருத்து கோரப்படவில்லை. எனினும், கண்டிச் சிங்களவர்கள் இந்த ஒன்றிணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பொதுவான நிர்வாகமொன்றை அறிமுகம்செய்த ஆங்கிலேயர்கள், ஆங்கிலத்தை அரசமொழியாக்கினார்கள். இதன்மூலம் நாட்டில் இரண்டு வெவ்வேறு பிரிவுகளாக, பல யுகங்களாக வாழ்ந்துவந்த மக்களை ஆங்கிலேயர்கள் ஒரு குடையின்கீழ் கொண்டுவந்தார்கள். ஆங்கிலேயர்கள் தங்களது அதிகாரங்களின் ஒரு பகுதியை உள்நாட்டுத்தலைவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தனர். அதனைத் தொடர்ந்தே சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமான பிணக்குகள் தலையெடுக்கத் தொடங்கின. 1945 இல் இந்நாட்டு மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க நேரிட்டபோது அமைச்சர்கள் சபை புதிய அரசமைப்புக்கான தனது சொந்தப் பிரேரணைகளை சமர்ப்பித்தது.

தமிழர்கள் அந்தப் பிரேரணைகளை ஏறத்தாழ ஒரே அணியாக நிராகரித்துவிட்டார்கள். அந்தப் பிரேரணைகள் தமிழர்களை இந்நாட்டின் சிறுபான்மையினராக சித்திரித்ததுடன், அவர்கள் பெரும்பான்மை இனத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் எனக் கோடி காட்டியது.

அதனையடுத்து, சோல்பரி பிரபுவின் தலைமையில் அரச ஆணைக்குழு (Royal Commission) இப்பிரச்சினையை ஆராய்ந்து தீர்வுகாண இலங்கைக்கு அனுப்பப்பட்டது. அதிகாரத்தை சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தபின் சிங்களவர்களின் கை ஓங்கி தமிழர்களை சிறுபான்மையாக்கியதன் தாற்பரியத்தைப் புரிந்துகொண்ட சோல்பரி ஆணைக்குழு தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொண்டது.

அதனையடுத்து, அமைச்சர்கள் குழு தமிழர்களின் மனத்திருப்தி பேணப்படும் எனவும் தமிழர்களுக்கு மட்டுமன்றி, முழுநாட்டின் நலனையும் கருத்திற்கொண்டு செயற்படுவோமென சோல்பரி ஆணைக்குழுவுக்கு இணக்கம் தெரிவித்தது. அதன் பின் பிரிட்டிஷ் அரசு அமைச்சர்கள் சபைக்கு வெள்ளையறிக்கை (White paper) ஒன்றைச் சமர்ப்பித்தது. ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் விநியோகிக்கப்பட்ட அக்கடிதத்தில் ஆங்கிலேய அரசு எடுக்கும் எந்தச் சட்டபூர்வமான நடவடிக்கையும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது எனவும், சிறுபான்மையினரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலேயே அமைச்சர்கள் சபை தனது பிரேரணையை முன்வைக்கலாம் எனவும் அமைச்சர்கள் சபைக்கு மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருந்தது. இந்த இணக்கப்பாடு சிங்களத் தலைவர்களின் ஏராளமான உறுதிமொழிகளினால் கவசமிடப்பட்டது. எனினும், தொடர்ந்துவந்த அரசுகள் அனைத்துமே இந்த இணக்கப்பாட்டைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டன.

சிங்களத் தலைவர்கள் அளித்த இணக்கப்பாடுகளும் உறுதிமொழிகளும் உதாசீனம் செய்யப்பட்டதை சோல்பரி பிரபு பின்னாளில் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் B.H.Former எழுதிய 'Ceylon a divided Nation' என்ற நூலுக்கு அளித்த முகவுரையில் சோல்பரி பிரபு பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

''உண்மையில் எனது தலைமையில் அமைக்

## பொதுநலவாய நாடுகள் அமைப்பின்
## பிரதிநிதிகளுக்கு தந்தை செல்வா கை

கப்பட்ட ஆணைக்குழு இலங்கையில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் பல யுகங்களாக நிலவிவரும் விரோதத்தன்மை பற்றி மேம்போக்கான எண்ணத்தையே கொண்டிருந்தது. எனினும், பார்மர்ஸ் எழுதிய நூல் அன்று இருந்திருந்தால் இன்றைய இலங்கையில் பல நூற்றாண்டுகளாக இரு சமூகங்களுக்கும் இடையே நிலவிவந்த விரோதத்தன்மையை அந்தப் புத்தகத்தில் அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கலாம். எனக்கும் சக ஆணையாளர்களுக்கும் கசப்பான ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை சொல்லத் தேவையில்லை.எவ்வாறாயினும், பிரிட்டிஷ் அரசு நிர்மாணித்த நிர்வாக ஒருமைப்பாடு பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையில் மூன்று பிரதான பிரேரணைகளைத் தமிழர்கள் முன்வைத்தார்கள்.

1. சமநிலைப் பிரதிநிதித்துவம்.

எமது முன்னைய கோரிக்கை காலனித்துவ ஆட்சி வலயங்களின் செயலாளரும் டெவோன்ஷயர் கோமகனுமானவர் (Duke of Devonshire) பரிந்துரை செய்தபடி சமநிலைப் பிரதிநிதித்துவப் பிரதிநிதித்துவத்தைக் கோருவதே. சமநிலைப் பிரதிநிதித்துவம் ஒருசாராரை வல்லவர்களாக்கி மற்ற அணியைப் பலவீனமாக்கும் அபாயத்துக்கு இடமளிக்காது. எல்லா சமூகத்துக்கும் சமமான அதிகாரத்தையும், சக்தியையும் அது வழங்கும். ஆனால், சோல்பரி ஆணைக்குழு எமது கோரிக்கையை ஏற்கவில்லை.

2. சமஷ்டி அரசமைப்புக்கான கோரிக்கை

இரண்டாவதாக, சுதந்திரம் கிடைத்து ஒருவருட காலத்துக்குள் இலங்கைத் தமிழர்களின் நிலை துரிதமாக சீர்குலையத் தொடங்கியது. அதனையடுத்து சமஷ்டி முறையிலான அரசொன்றை அமைப்பதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இரண்டு துருவங்களாக விளங்கிவந்த தனித்துவமுள்ள இரண்டு இனங்களை ஒரேகுடையின் கீழ் கொண்டு வருவதற்கான ஒரேவழி இதுவே என உணரப்பட்டது.

1926 மே மாதம் அல்லது அதற்கு முன்னரே எஸ்.டபிள்யூ.ஆர்.டீ . பண்டாரநாயக்க சமஷ்டி முறையைத் தீவிரமாக ஆதரித்துவந்தவர். எனினும், அவர் பதவிக்கு வந்ததும் அந்த முறைக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

17 ஜூலை 1926 ஆம் ஆண்டு வெளிவந்த 'சிலோன் மோர்னிங் லீடர்' பத்திரிகையில் வெளியான அவரது கூற்றின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

''எமது
பார்த்தால்
கள், கண
இலங்கை
பேதமின்
அவர்கள்
கொள்ளவ
அவரது
சமஷ்டி மு
காண மு
3. 19
ஆறு
மூன்று
இறுதியில்
சமைப்பெ
தப்பட்டு
ஆணைக்கு
மிக மெல்
விட்டது.
களற்ற ச
புகுத்திய
இந்தச்
என்ற ஒ
ஓரணியில்
அரசியல்
தான கட்சி
தனர். இ
குரலாக
TUF
இரண்டு
பிரதேச,
மற்ற நா
கோரிக்கை
பின்வ
ஷைகளை
தப்படவே
1.அரச
தமிழுக்கு
2.இந்
டுள்ள த
ரிமை வ
பில் வழ
வேறு இ
பாகுபாடு
பிரஜாவுரி
சுக்கு இரு
3. சக
வழங்கும்
4. இ
ளுக்கும்
தரவாதம்
5. சாதி
மைப்பு
6. ஜன
திய கட்ட
ஜனநாயக
யாகச் செ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வருடத்திலேயே
# த முன்வைக்கப்பட்டது

**ாடு 1974 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மகள் பறிக்கப்பட்டதால் அப்போது அவர்களுக்கு , தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர், தந்தை ிய வெளிநாடுகளின் பிரதிநிதிகளிடம் கையளித்த**

**ாய நாடுகளுக்கு ஒரு மகஜர்" என்ற அந்தப் ழாக்கம் -**
**ம்பமாகும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் ரமாகிறது. மிகுதி தொடர்ந்து பிரசுரமாகும்.**



"எமது நாட்டின் சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்த்தால் தமிழர்கள், தென்னிலங்கைச் சிங்களவர்கள், கண்டிச் சிங்களவர்கள் என்ற மூன்று சமூகமும் இலங்கையில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாகப் பேதமின்றி வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் அவர்கள் தங்களுக்குள் பிளவுகளை உருவாக்கிக் கொள்ளவில்லை என்பதும் புலனாகும்.

அவரது கூற்றுக்கு எதிர்ப்புகள் கிளம்பியபோது, சமஷ்டி முறையின் ஏதாவது ஒரு வடிவத்திலேயே தீர்வு காண முடியுமென அவர் உணர்ந்துகொண்டார்.

**3. 1972 இன் புதிய அரசமைப்பும் ஆறு அம்ச சூத்திரமும்.**

மூன்றாவதாக, இந்த ஆலோசனைகள் அனைத்தும் இறுதியில் நிராகரிக்கப்பட்டு 1972 இல் புதிய அரசமைப்பொன்று ஒருதலைப்பட்சமாக அமுல்படுத்தப்பட்டது. இந்தப் புதிய அரசமைப்பு சோல்பரி ஆணைக்குழு சிறுபான்மையினருக்கு அளித்திருந்த

## ப்பின் 1974 ஆம் ஆண்டு மாநாட்டின்
## வா கையளித்த மகஜரில் தகவல்

மிக மெல்லிய பாதுகாப்புகளையும் கபளீகரம் செய்துவிட்டது. அத்துடன், சிங்களவர்களற்ற, பெளத்தர்களற்ற சமூகங்களின் மீது மேலும் இயலாமைகளைப் புகுத்தியது.

இந்தச் சம்பவம் தமிழர் ஐக்கிய முன்னணி (TUF) என்ற ஒரே குடையின்கீழ் அனைத்து தமிழர்களையும் ஓரணியில் திரளவைத்தது. இந்த அணியின் கீழ் தமிழ் அரசியல் கட்சிகள், பிரதான தொழிற்சங்கங்கள், பிரதான கட்சி சார்பற்ற தமிழர்கள் ஆகியோர் ஒன்றிணைந்தனர். இன்று (TUF) தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக அங்கீகாரம் பெற்றுள்ளது.

TUF புதிய அரசமைப்பை நிராகரித்ததுடன் இரண்டு தேசங்களையும் ஒன்றிணைப்பதற்கும் பிரதேச, மொழிபேதம், சமயபேதம், கலாசார பேதமற்ற நாட்டை உருவாக்குவதற்கும் ஆறு அம்சக் கோரிக்கையொன்றை முன்வைத்தது.

### தமிழில் 'மணி'

பின்வரும் விடயங்களில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பாதுகாப்பதற்கு அரசமைப்பு திருத்தப்படவேண்டுமென TUF கோரிக்கை விடுத்தது.

1.அரசமைப்பில் சிங்கள மொழியைப் போலவே தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

2.இந்த நாட்டைத் தமது தாய்நாடாக்கிக்கொண்டுள்ள தமிழ்பேசும் சகல மக்களுக்கும் பிரஜாவுரிமை வழங்குவதற்கான உத்தரவாதம் அரசமைப்பில் வழங்கப்படவேண்டும். பிரஜைகளில் வெவ்வேறு இனங்கள் இருக்கக்கூடாது; அவர்களிடையே பாகுபாடுகள் இருக்கக்கூடாது; ஒரு பிரஜையின் பிரஜாவுரிமையை நீக்குவதற்கான அதிகாரம் அரசுக்கு இருக்கக்கூடாது.

3. சகல சமயங்களுக்கும் சமமான பாதுகாப்பு வழங்கும் மத சார்பற்ற அரசு அமையவேண்டும்.

4. இன, கலாசார அடிப்படையில் சகல மக்களுக்கும் சமமான உரிமைகளை வழங்கும் உத்தரவாதம் அரசமைப்பில் இருக்கவேண்டும்.

5. சாதி பேதத்தையும், தீண்டாமையையும் அரசமைப்பு இல்லாதொழிக்கவேண்டும்.

6. ஜனநாயக, சோஷலிஸ சமூகமொன்றில் மத்திய கட்டமைப்பின் கீழ் அமைக்கப்படும் அரசே ஜனநாயக ரீதியில் மக்களின் பங்களிப்புடன் சரியாகச் செயற்படும். அரச சக்தி மக்கள் சக்தி என்ற ரீதியில் இயங்கவேண்டும்.

TUF முன்வைத்த இந்த ஆலோசனைகளுக்கு சிங்களத் தலைமையில் இயங்கும் எல்லா அரசியல் கட்சிகளும் ஏதோவொரு வகையில் இணக்கம் தெரிவித்தமை இக் கோரிக்கைகளில் இருந்த நியாயபூர்வத்தை அங்கீகரிப்பதாக அமைந்திருந்தது. சில சமயங்களில் அல்லது பல சமயங்களில், சுதந்திரத்துக்கு முன்போ அல்லது பின்போ, இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது . ஆனால், இந்த அரசு இந்தக் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்குக்கூட அக்கறை எடுக்கவில்லை.தமிழர்கள் மிக நீண்ட தூரம் பயணித்து இன்று தமது பயணத்தின் முடிவில் இருக்கிறார்கள். இரண்டு தேசங்களும் ஒன்றாக இணையும் சாத்தியம் இல்லாமல் போனால் அவை பிரியும் நிலை ஏற்படும். பிரியும் நேரம் வந்துவிட்டதா? அதுதான் இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலை.

சிங்களத் தலைமைகளுக்கு ஒரு குறிக்கோள் உண்டு. அது, இரு தேச, இரு மொழி, பல சமயங்கள் நிறைந்த இலங்கையை ஒரே தேசமாக்குவதே. அதன்படி, சிங்களம் மட்டும், பெளத்தம் மட்டும் என்ற கோதாவில் தமிழர்களை ஒடுக்குவதே அதன் இலக்கு. 1974 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 27 ஆம் திகதிய டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளிவந்த இன்றைய அரசின் அமைச்சர் ஒருவரின் கூற்றின் ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது.

"உண்மையில் இன்று நடப்பது என்னவென்றால், முன்பு பிரிந்துபோய்க்கிடந்த ஏராளமான இந்தியத் தமிழர்கள் இன்று சிங்களம் கற்கிறார்கள். சிங்களப் பெயர்களைக்கூட வைத்துக்கொள்கிறார்கள். புத்த சமயத்தைத் தழுவுகிறார்கள். இதுதான் ஒன்றிப்போதலின் ஒருபகுதி."

மேற்கூறிய கொள்கையில் அனுசரிப்புக்குள்ளான ஆறு பகுதிகளையும் அவைபற்றிய சுருக்கமான விவரங்களையும் தருகிறோம்.

**பிரஜாவுரிமையும் குடியுரிமை நீக்கமும்**

சுதந்திரம்பெற்ற சில மாதங்களிலேயே சிங்களத் தலைவர்கள் கொடுத்திருந்த சகல உறுதிமொழிகளையும், இணக்கப்பாடுகளையும் சுலபமாக மறந்துபோனார்கள். அதன் விளைவாக சுதந்திரத்துக்கு முன்பு ஏனைய சமூகத்தினரைப் போலவே சகல உரிமைகளையும் அனுபவித்து வந்த தமிழர்களில் பத்து லட்சம் பேர் 1948 ஆம் ஆண்டின் 18 ஆவது பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் நாடற்றவர்களாக்கப்பட்டனர். இந்தச் சட்டம் தமிழர்களையும், முஸ்லிம்களையும் நிலைகுலையச்செய்தது. தமிழ் அல்லது முஸ்லிம் பெயர்களைக் கொண்டிருந்தவர்கள் அவர்களது பிரஜாவுரிமைக்கான அத்தாட்சிகளைச் சமர்ப்பிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

**பிரஜாவுரிமை அத்தாட்சி கோரப்பட்ட பணிகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.**

1. அரச துறையில் தொழில்.
2. கடவுச்சீட்டும் ஏனைய பயண அனுமதிப்பத்திரங்களும் வழங்கல்.
3. பிரஜாவுரிமைச் சான்றிதழ் வழங்கல்.
4. அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் வழங்கல்.
5. வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவு.
6. சொத்துகள், பங்குகள் உரிமை மாற்றம்.
7. இலங்கை வர்த்தகராக ஒருவரைப் பதிவுசெய்தல்.
8. இலங்கையருக்கான ஏனைய வரப்பிரசாதங்களைப் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எது சொந்தம்?



இந்த வீடு எனக்குச் சொந்தம் என்று சொல்கின்றோம். அதற்காக நாம் போகின்ற இடமெல்லாம் அந்த வீட்டையும் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு போகின்றோமா? அது முடியாத காரியம். அவ்வாறே நாம் சொந்தம் என்று நினைக்கின்ற பல விடயங்கள் எமக்குச் சொந்தமில்லை .

எட்டு லட்சம் ரூபா செலவு செய்து வீட்டைக் கட்டியிருப்பார்கள். பணம் அவர்களது என்றாலும் அந்த வீட்டில் பல்லியும் எட்டுக்கால் பூச்சியும் வாழாமலா போய்விடும்? அவையெல்லாம் அந்த வீடு தமது வீடு அதுதான் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கும் .

ஒருவர் தான் பத்து லட்சம் ரூபா சொத்துக்கு அதிபதி என்றார். சொத்து எங்கே என்று கேட்டால் "நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது; தீர்ப்பு சாதகமாக வரவேண்டும் என்றார். இந்தக் கேள்விக்கு ஞானிகள் என்ன பதில் கூறுகிறார்கள் என்று இப்போது பார்க்கலாம்.

முற்றுந் துறந்த முனிவர் ஒருவர் இருந்தார். பற்றுக்களற்ற பரம ஞானி அவர். இன்றைக்கு ஓர் ஊரில் இருப்பார். நாளைக்கு வேறொரு ஊரில் இருப்பார் ஒரு வேளைதான் சாப்பிடுவார். அதுவும் உப்பில்லாத சாப்பாடு. பொய் சொன்னால் அவருக்குப் பிடிக்காது. பொய் சொல்பவர்களது வீட்டில் சாப்பிடவே மாட்டார்.

ஒரு நாள் அவர் ஓர் ஊருக்குப்போய், அந்த ஊரில் உண்மையானவர் யார் என்று கேட்டார் "அதோ ஒரு மாடி வீடு தெரிகிறதே; அந்த வீட்டில் ஒரு பண்ணையார் இருக்கிறார். அவர் உண்மையானவர், நேர்மையானவர், அடியார்கள் மேல் பக்தி கொண்டவர். செல்வமுள்ளவர். நான்கு பிள்ளைகள் அவருக்கு. என்று பக்கத்தில் இருந்தவர்கள் கூறினார்கள். உடனே அந்த முனிவர் பண்ணையார் வீட்டுக்குப் போனார். இவரைக்கண்டதும் உட்கார்ந்திருந்த பண்ணையார் எழுந்து ஓடி வந்து முனிவர் காலில் வீழ்ந்து வணங்கினார். அது மட்டுமன்றி "தயவு கூர்ந்து தாங்கள் எனது வீட்டில் சாப்பிடவேண்டும் என்றார்.

அவருடைய அன்பு, அடக்கம், பணிவு இவையெல்லாம் முனிவருக்குப் பிடித்துப்போய்விட்டது. இருந்தாலும் அவர் உண்மையானவர்தானா என்பதை சோதித்துப் பார்த்து விட்டுத்தான் அவர் வீட்டில் சாப்பிட முடிவு செய்தார். அதற்காக முனிவர் அவரிடம் சில கேள்விகளைக் கேட்டார்."ஐயா உங்களிடம் எவ்வளவு செல்வம் உண்டு" என்றார். "என்னிடம் இருபத்து இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது என்றார் பண்ணையார். "குழந்தைகள் எத்தனைபேர்?" என்றார் எனக்கு ஒரேயொரு மகன்தான் என்றார். உமக்கு எத்தனை வயது என்று கேட்டார் சுவாமி. அதற்குப்பண் ணையார் என்னுடைய வயது மூன்று வருடங் கள், ஐந்து மாதங் கள், ஏழு நாள் பதினாறரை மணி" என்றார்.

முனிவருக்கு கோபம் வந்துவிட்டது."நீர் கூறுவது முழுவதும் பொய்யாக இருக்கின்றன; உமது வீட்டில் சாப்பிட்டால் என்னுடைய தவம் அழிந்துவிடும் என்று கூறிப்புறப்பட்டார்.

பண்ணையார் பதறிப்போய் "சுவாமி எனக்குப் பொய் சொல்லத் தெரியாது; நான் கூறுவதெல்லாம் உண்மைதான்"என்று கூறி வரவு செலவு புத்தகத்தை எடுத்துக் காட்டினார். அதில் இருப்புத் தொகை ஒரு லட்சம் இருந்தது.

"இருபத்து இரண்டாயிரம் என்று பொய் சொன்னியே" என்றார் முனிவர் "சுவாமி ஒரு லட்சம் பெட்டியில் இருக்கிறது. "இதோ பாருங்கள் 22 ஆயிரம் ரூபா தருமம் செய்திருக்கிறேன் தருமம் செய்த பணம்தானே எனக்குச் சொந்தமாகும் என்றார்.

முனிவருக்கு ஆச்சரியமாய் இருந்தது சரி உமக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றதாகக் கேள்விப்பட்டேன்" என்றார். "எனக்கு பிறந்த பிள்ளைகள் நான்குபேர்தான் ஆனால் என்பிள்ளை ஒருத்தன் தான் என்றார். அது எப்படி என்றார் முனிவர்.

பண்ணையார் ஒவ்வொரு மகன்களாகக் கூப்பிட்டார். அவர்கள் மூன்றுபேரில் விளையாடிக்கொண்டிருக்கின்றேன் வரமுடியாது என ஒருத்தனும் "ஏன் இப்படிக் கூச்சல் போடுறாய், பேசாமல் இரு என இன்னொருத்தனும் "உனக்குப்புத்தி இருக்கா; ஏன் இப்படி அலறுகிறாய்; இந்தப் பூமிக்கு இன்னமும் சுமையாக இருக்கின்றாய் என்று மற்ற மகனும் கூறினான் அடுத்து "மகனே! கந்தசாமி என்று கூப்பிட்டதும் அவன் ஓடி வந்து கை கட்டி நின்று "என்ன அப்பா வேண்டும்"? என்று கேட்டான். அப்போது பண்ணையார் சுவாமி இவன்தான் என் பிள்ளை என்றார்.

வயது விடயம் எப்படி என்றார் முனிவர் "சுவாமி நான் ஒரு நாளைக்கு அரை மணி நேரம்தான் வழபாடு செய்கின்றேன். மற்றைய நேரமெல்லாம் இந்த உடம்புக்காக உழைக்கின்றேன்.

அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து அறுபது வருடங்கள் ஆகின்றன. ஆனாலும் 5 வயதிலிருந்து வழிபாடு செய்த நேரம்தான் எனக்குச் சொந்தம்; அதைக் கூட்டித்தான் வயது கூறினேன் என்றார். முனிவர் மிகவும் சந்தோசப்பட்டு அவர் வீட்டில் சாப்பிடுவிட்டுப் போனாராம்.

இது பெரியவர் ஒருத்தர் கூறியது. இதிலிருந்து நமக்கு சொந்தம் எது என்று விளங்குகிறதில்லையா?

இந்தக் கதையை 50 வயதாகின்ற ஒருவரிடம் கூறிவிட்டு, "இப்போது கூறுங்கள் உங்கள் வயது எத்தனை? என்று கேட்டபோது "இப்போதுதான் நான் பிறந்திருக்கிறேன்" என்றார்.

**கோ.சுவாமிநாதன்**



நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் ரவிசங்கரின் சிஷியரின் தியான நிகழ்வு இடம் பெறுகிறது. (ம)

# உளநலம் பாதிக்கப்பட்டவர்களும் தன்னிச்சையாகச் செயற்பட வேண்டும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் கூறுகிறார்

வலி.வடக்கு, ஒக்.28

உளநலம் பாதிக்கப்பட்டவர்களும் தன்னிச்சையாகச் செயற்பட வேண்டும். ஏனையவர்களுக்குப் பொறுப்பானவர்களாக இவர்கள் இருக்கக் கூடாது. சமூக மட்டத்தில் இவர்களையும் ஏனையவர்கள் போன்று இணைத்து வாழ வழி செய்ய வேண்டும். இவ்வாறு யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச உளநல நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: உலக மட்டத்தில் இன்று சமூக உளநலம் பற்றி பேசப்படுகின்றது. சேவைகள் சம்பந்தமாகவும் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலும் கூட இத்தகைய தேவைப்பாடுகள் காணப்படுவதுடன் ஏனைய வடக்கு, கிழக்கு மாவட்டங்களிலும் தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

இத்தகையவர்களின் வாழ்க்கை மேம்பட சமூகத்தின் உதவிகளும் கூட தேவைப்பாடு உடையனவாக இருக்கின்றன. இன்று யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உள சமூக சேவையாளர்கள் நல்ல முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளார்கள்.

இதனால் யாழ். மாவட்டம் உளநல விடயத்தில் ஏனை மாவட்டங்களை விட முன்னணியில் நிற்கின்றது.இந்த நிலமைக்கு காரணம் பேராசிரியர் தயா சோமசுந்தரம், வைத்தியகலாநிதி சிவயோகன் மற்றும் அவர்களுடன் இணைந்த குழுவினரும் ஆகும்.

கடந்த நெருக்கடியான காலகட்டத்தில் உளநலப்பணியாளர்கள் தமது உயிரைப் பணயம் வைத்துக் கூட இந்தச் சேவையை சிறந்த முறையில் மேற்கொண்டுள்ளார்கள்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உளநல விடயத்தில் ஏனைய மாவட்டங்களில் இல்லாத வகையில் முன்னோடியான செயற்பாடுகள், நடவடிக்கைகளை கொண்டமைந்துள்ளது. யாழ். மாவட்டத்தில் உளநலத்துறை சிறந்த முறையில் செயல்படவும் முன்னேற்றம் அடையவும் உலக சுகாதார நிறுவனமும் அதனுடன் இணைந்தவர்களும் பெரும் பங்கு ஆற்றியுள்ளார்கள். அவர்களுக்கு எமது நன்றியறிதலையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றும் தெல்லிப்பழை, மந்திகை உளநல வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கான தேவைப்பாடுகள் உண்டு. தெல்லிப்பழை வைத்தியசாலை உளநலப்பிரிவுக்கு ஒரு வைத்தியர் கிடைத்துள்ள போதிலும் மந்திகை வைத்தியசாலைக்கு கிடைக்கவில்லை.

இன்றும் கூட உளநலம் பாதிக்கப்பட்டு மீள் புனரமைப்பு செய்யும் குடில் என்ற அமைப்பு தற்போது வாடகை வீடுகளிலேயே இயங்கி வருகின்றன. இந்நிலையில் மாற்றம் கொண்டுவரப்பட்டு சொந்தக் கட்டடத்தில் விரைவில் இயங்க உதவிகள் தேவைப்படுகின்றன.-என்றார். (ச-86)

# சமூக முன்னேற்ற சமாசச் செயற்பாடுகளை மக்களுக்கு விளக்க வேண்டியது அவசியம்

வண்ணை, ஒக்.28

''மக்களை எழுச்சி கொள்ளச் செய்ய வேண்டும். இந்த சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தை எதற்காக உருவாக்கினோம்; தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கின்றோம் என்பதை மக்களுக்கு விளங்கச் சொல்ல வேண்டும்''

நல்லூர் பிரிவுக் கிளை சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் எழுச்சித் தந்தை இ.மு.நாகலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யோசெப் பிரான்சிஸ் சேவியார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

1980 களில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சமாச முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் மண்டபம் நிறைந்த மக்கள் சூழ விழாவைக் கொண்டாடினோம்.

அதற்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பின்னடைவு வந்தது. அதை இனிமேலும் கண்ணை மூடிக் கொண்டிருந்து. சமூக முன்னேற்றத்துக்கு குந்தகம் ஏற்படுத்த முடியாது.

எமது பணிகளின் இலக்கு வட கிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற நாவிதர் சமூகத்தையே முன்னிலைப்படுத்தி உதவிகளை வழங்குவதாக இருந்த போதும் ஏனைய சமூகத்தவர்களையும் விட்டு விடமாட்டோம். முழு இலங்கை மக்களுக்கும் உதவுவதற்கு இந்த சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் எண்ணியுள்ளது.

போரால் வன்னியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 4 லட்சம் ரூபா உதவிகளை வழங்கினோம். இதில் கல்வி சார் உதவிகள் தனியானது. இனி வரும் வருடங்களில் வருடா வருடம் 3 லட்சம் ரூபா நிதி வழங்குவதற்காக நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.- என்றார். (ம-160)

# கிளிநொச்சி வலய மட்ட வணிக விழாப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,ஒக.28

வடக்கு மாகாண கல்வித் திணைக்கள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் கிளிநொச்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட வணிக விழாப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்:

பிரிவு 1:

பேச்சு: ம.லக்சி (வட்டக்கச்சி ம.வி), க.பிரவீனா (பூநகரி ம.வி), பா.சிந்துஜா (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

கட்டுரை: யே.நிதுஜா (புனித திரேசா பெண்கள் கல்லூரி), வி.சயானா (முருகானந்த ம.வி), நா.தர்சினி (தருமபுரம் ம.வி).

குறுவினாவிடை: லோ.யோகானந்தன் (கண்டா வளை ம.வி), யே.நிதுஜா( புனித திரேசா பெண்கள் கல்லூரி), கௌ. கமலேசன் (கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா),

பிரிவு II

பேச்சு : நா.தனுசியா (தருமபுரம் ம.வி), அ.புனிதா (கனகபுரம் ம.வி), சு.சோபிகா (முருகானந்த ம.வி),

கட்டுரை: வீ. சுஜித்தா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), யோ.தர்சியா (பரந்தன் இந்து ம.வி), த.சுதர்சன் (பூநகரி ம.வி),

குறுவினா விடை: கே.கதீஸ் (முழங்காவில் ம.வி), நா.தனுசியா (தருமபுரம் ம.வி), கோ.போசகாந் (பூநகரி ம.வி),

பிரிவு III :

பேச்சு: ப. சங்கீதன் (திருவையாறு ம.வி),ஆ.சுகிர்தா (கிளிநொச்சி ம.வி), ஜெ.ஜெயதர்சினி (கிளிநொச்சி மத்திய கல்லூரி),

கட்டுரை: ம.கேசவன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), இ.வினோ (புனித திரேசா பெண்கள் கல்லூரி), இ.சிந்துஜா (திருவை யாறு ம.வி),

குறுவினா விடை: வி.டயானி (கனகபுரம் ம.வி), ம.கேசவன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), த.வினோத் (பளை மத்திய கல்லூரி).

வலய மட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் வடக்கு மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-402)

## கௌரவிக்கப்பட்ட மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஒக்.28

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள் கடந்த வாரம் பாடசாலை சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் விவரம் வருமாறு:

தனுஷன் கோணேஸ்வரன் - 187, ராம்ஜினி ஞானசுதன் - 179, சிறிசங்கர் சிறிகரன் - 176, சாருஜன் தயாளன் -175, விமலலோஜன் தர்மகுலசிங்கம் - 174, கபிலன் விஜயரட்ணம் - 173, வைஸ்ணவி உலகநாதன் - 169, துளசிகன் எழிற்செல்வன் - 169, விஷாலினி மகேந்திரராஜா - 168, ஹர்சியா அன்ரன்கிரேரியன் - 166, பிரிந்துசன் நாகேந்திரன் -165, காயத்ரி தியாகச்சந்திரன் - 163, நிருஜா குயின்ரன் -163, ஆதர்சினி திவாகரன் - 159, விஷ்ணு யோகராஜா - 158, சந்துஜா கிருபாகரன் - 157, மதுஷா கண்ணதாசன் - 157, திலக்ஸிகா தவேந்திரநாதன் -156, வைஸ்ணவி பாலகிருஸ்ணன் -156, யூலியட் டினேஷன் சாவேல் - 156, நேசகுமார் - 156, துவாகரன் தயாகணநாதன் -156, பிரியம்வதா ரமேஸ்குமார் - 155, தஸ்ஷினி சிறிகரன் - 155, உஷாந்திகா முருகதாஸ் - 155, ஷர்மி செல்வராஜ் - 153, கஜனி கிருஸ்கானந்தராஜா - 153, விஸ்லைனி காந்தரூபன் - 151, ஷர்மிலன் பரமானந்தன் - 151, விதுஷன் கதிர்காமநாதன் - 151. (ச-302)

## சிறுவர் அரங்கப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,ஒக் 28

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட கல்விக் கோட்டங்களின் மட்டத்தில் நடைபெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களின் சிறுவர் அரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்:

**கோட்டம்: கரைச்சி-** கிளிநொச்சி மத்திய ம.வி, புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தி.

**கோட்டம்: கண்டாவளை-** தருமபுரம் இல.1 அ.த. க.பாடசாலை, முருகானந்த ஆரம்ப வித்தி, கண்டாவளை ம.வி., பிரமந்தனாறு ம.வி.

**கோட்டம்:** பளை- பளை மத்திய கல்லூரி, இயக்கச்சி அ.த.க.பாடசாலை, சோரன் பற்று கணேசா வித்தி.

**கோட்டம்:** பூநகரி- கறுக்காய் தீவு.ம.வி., முக்கொம்பன் அ.த.க.பாடசாலை, சுண்ணாவில் அ.த.க. பாடசாலை, வினாசியோடை அ.த.க.பாடசாலை. (ச-450)

## இலவச தேவார பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

அகில இலங்கை திருமுறை மன்றம் வாராந்த சனி, ஞாயிறு கிழமைகளில் பிற்பகல் 3 மணிக்கு இலவச தேவாரப் பண்ணிசை பயிற்சி வகுப்பை நடத்தி வருகின்றனர்.

இந்தப் பயிற்சி வகுப்பில் ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றி பயன்பெறலாம் என்று மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூற வேண்டியவர்கள் ஒதுங்கினால் என்ன செய்வது?

முன்னைய காலங்களில் அதாவது எமது பாட்டன், பாட்டி காலத்தில் ஊர்க் கோயில்களில் புனிதம் பேணப்பட்ட தோடு பக்தியும் மேலோங்கி இருந்த தாகச் சொல்லுவார்கள். அந்தக் காலத்தில் ஊரவர்கள் கோயில் குளம் என்று இருந்ததோடு மட்டுமல்லாது நல்ல வாழ்வு வழிமுறைகளையும் பின்பற்றி வந்தனர். இதனால் அந்தக் காலத்தில் ஊரவர்களின் மனதில் எந்தக் கெட்ட பழக்கமும் இருக்கவில்லை. தீய சிந்தனைகூட அறவே இல்லாமல் இருந்தது. இதனால் ஊர்களில் உள்ள ஆலயங்களில் களவு ஏற்பட வாய்ப்பே இருக்கவில்லை. இதற்கு இன்னொரு முக்கியமான காரணம் உண்டு. அதாவது அந்தக் காலத்து ஊர் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ளனர். இதனால் தான் ஊரே பாதுகாப்பாக இருந்தது. பிறகு எப்படி ஆலயங்களில் களவு போக முடியும். 24 மணி நேரமும் ஆலயங்கள் திறந்தே இருக்கும். எந்த நேரமும் ஆலயத்துக்குச் சென்று கும்பிட்டுவிட்டு வரமுடியும். அந்தக் காலத்துக் கதைகளை எனது பாட்டி எனக்குச் சின்ன வயதில் சொன் னது இப்பவும் ஞாபகத்தில் இருக்கிறது. இப்ப எனது பாட்டியும் இல்லை. பாட்டி வாழ்ந்த அந்தக் காலத்து ஊர் நடைமுறையும் இல்லை.

இப்போதைய காலம் கலியுகம் பாருங்கோ. எது என்றாலும் நடக்கும். இனிவரும் காலங்களில் கடவுளை சனத்துக்குக் காட்டாமல் ஒழித்து வைத்து பூசை நடந்தாலும் வியப்பில்லை பாருங்கோ. அந்த அளவுக்கு எமது ஊர்க் கோயில்களில் களவு போகும் சம்பவம் அடிக்கடி நடக்கிறது. இதை யார் செய்கிறார்கள், இதற்கு யார் உடந்தை என்று பார்த்தால் நாங்கள் தான். ஏன் இப்படி சண்முகம் சொல்லுறன் என்று பார்க்கிறியளா? பின்ன என்ன? பெறுமதிமிக்க பொருள் களை கோயில்களில் வைத்திருந்து அதனைப் பாதுகாக்க முடியாமல் உள்ளோம்.

ஊர்க் கோயில்களுக்குத் தலைவர், உபதலைவர், பொருளாளர், செயலாளர் என்று எல்லோரும் இருந்தும் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கின்றோம். எந்த ஆலயங்களில் களவு போகிறதோ அதன் பொறுப்பை அவர்கள்தான் ஏற்க வேண்டும் என்று ஒரு சட்டம் வந்தால் கண்டிப்பாக ஆலயங்களில் உள்ள பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள்.

அதைவிட்டுவிட்டு களவு போய் விட்டது என்று சொல்லி விட்டு பேப்பரில செய்தியைப் போட்டுவிட்டுத் தம்பாட்டில் இருந்து விடுவார்கள். இப்படிப்பட்டவர்களை ஆலயங்களில் தலைவர், உபதலைவர், பொருளாளர், செயலாளர் என்று பதவி கொடுத்து வைத்திருக்கின்றோம்.

கோயிலுக்கு பூசை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங் களில் சென்று கும்பிட முடியாதுள்ளது. ஆலயங்களில் அடிக்கடி களவு போவதால் ஆலயங்களை மூடி வைத்திருக்கிறார்கள். ஆலயங்களில் பெறுமதிமிக்க பொருள்கள் இருப்பதால் கோயில்களை மூடி வைத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. பெறுமதிமிக்க பொருள்களை ஆலயங்களில் வைத்துவிட்டு பாதுகாப்புக்காக ஆலயங்களை மூடி வைக்கவும் என்று கடவுள் சொல்லவில்லை. மனிதர்கள்தான் கடவுளைத் தங்கள் பாட்டுக்கு ஆட்டுகின்றார்கள்.

ஆலயங்களாக இருந்தால் எந்த நேரமும் கடவுளைக் கும்பிடக் கூடியதாக திறந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் எமது ஊரில் பழைய நிலைமை வரும். அதற்கான வழி வகைகளைச் செய்யாமல் விட்டுவிட்டு களவு போகிறது என்று சொல்லுகிறோம். ஆலயங்களும் சரி, ஊரவர்களும் சரி இந்தக் காலத்தில் நிலை தடுமாறி நிற்கிறார்கள். பெரும் யுத்தம் நடைபெற்ற நிலம் இது. இன்னும் மீளமுடியாமல் ஒருவேளை சாப்பாட்டுக்கு கஷ்ரப்படுகின்ற மக்கள் எமது ஊரில் அதிகம் பேர் உள்ளனர். இந்த மக்களின் பசியைத் தீர்க்க கடவுளால் என்ன செய்ய முடியும்?

தன்னிடம் தருகின்றவற்றை அந்த மக்களின் பசியைத் தீர்த்து விடுங்கள் என்று சொல்லவா முடியும்? அப்படி முடிந்தால் எப்பவோ இந்தக் களவுகள் எல்லாம் இல்லாமல் போயிருக்கும். யாழ்ப்பாணத்தில் தடக்கி விழும் இடமெல்லாம் கூடுதலாகக் கோயில்கள் இருக்கின்றன. அனைத்துக் கோயில்களும் உடைக்கப்பட்டு, உடைக்கப்பட்டு மீண்டும் மீண்டும் புதிதாகக் கட்டப்படுகின்றன.

பணவசதி படைத்தவர்களால் மட்டுமல்ல, எல்லோரும்தான் கோயில்களுக்குக் கொட்டிக் கொடுகிறோம். அதனால் அந்த ஊர் மக்களின் குறையை போக்க முடியாது.

ஆலயங்களை பிரமாண்ட மாகக் கட்டி அதற்குள் பெறுமதிமிக்க பொருள்களை வைத்து அழகுபார்க்க முடியுமே ஒழிய கடவுள் தோன்றி அந்தப் பெறுமதிமிக்க பொருள்கள் களவு போகிறது என்று தடுக்கமாட்டார். ஏனெனில் அனைவரும் மனிதர்கள் என்றுதான் கடவுள் பார்ப்பார். ஒருவர் வைக்கிறார் ஒருவர் எடுக்கிறார் என்று தான் கடவுள் பார்ப்பார்.

யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பொலிஸார் தமது கடமையைச் சரிவரச் செய்திருந்தால் ஆலயங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் பலவற்றை முறியடித்திருக்கலாம் என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் கண்ணில் படாமல் களவாடப்பட்ட ஆலயத்தின் பொருள்கள் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டது. எங்களை நாங்களே நம்ப முடியாதுள்ள போது எப்படி பொலிஸாரினை நம்பமுடியும். பொலிஸாரின் கண்ணில்படாமல் ஆலயப் பொருள்கள் வெளிமாவட்டங் களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்க முடியாது என்று கூட்டத்தில் தெரிவிக் கும் போது எப்படி பொலிஸாரினை நம்பி ஆலயத்துக்கு பாதுகாப்பு கொடுக்குமாறு கேட்க முடியும்.

அந்தக் கூட்டத்தில் ஆலயத் திருட்டுச் சம்பந்தமான முறைப்பாடுகள் பலவற்றைப் பொலிஸார் முறைப்பாடாகப் பதிவு செய்ய மறுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆலயத் திருட்டுச் சம்பந்தமான முறைப்பாடுகளையே பதிய மறுக்கும் பொலிஸார் எப்படி ஆலயங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க முன்வருவார்கள். இந்தக் கலந்துரையாடலுக்கு பெரிய




அளவில் ஆலய பிரதிநிதிகள் சமூகம் கொடுக்கவில்லை. ஏன் இவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவில்லை என்று சர்வமதச் சங்கத்தின் இணைப்பாளரிடம் கேட்ட போது, களவு போன ஆலயங் களின் பிரதிநிதிகள்கூட சமூகம் கொடுக்கவில்லை என்று மனவேதனையுடன் தெரிவித்தார்.

பார்த்தியளா ஆலயத்தின் பிரதிநிதிகள் என்று ஊரவர்களால் சொல்லப்படும் பெரியவர்கள் ஆலய நிர்வாக சபையில் இருந்தும் ஒன்றுதான், இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான்.

இந்தக் கலந்து ரையாடலுக்கு எமது மதம் அல்லாத பிற மதத் தலைவர்கள் வந்திருக்கிறார்கள் என்பது எவ்வளவு பெரிய விடயமாகும்.

இதனையாவது கருத்தில் கொண்டு இந்து மதத்தைச் சேர்ந்த ஆலய நிர்வாகத்தினர் செயற்பட முன் வரவேண்டும். அப்பொழுதுதான் எமது ஆலயங்களில் களவுகளை இல்லாமல் செய்ய முடியும். ✱


## நெஞ்சம் நெகிழ்வு நினைவஞ்சலி

அமரர்

## பேதுருப்பிள்ளை சாள்ஸ் அன்ரனி

Late P.C.Antony



பே.சா.அன்ரனி அவர்கள் 22.10.2011 இல் கனடாவில் இறை பதமடைந்து விட்டார்.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவனான இவர் தாய்ச் சங்கத்தின் நீண்ட கால கௌரவ பொருளாளராகவும் பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் உருவாக்கத்தின் நிறுவுநர்களில் ஒருவராகவும் அதன் பதிவாளராகவும் முன்னாள் யாழ். கொமர்சல் வங்கியின் முக்கிய நிர்வாக அலுவலராகவும் பெரும் பணியாற்றிய பெருமகனார்.

அன்னாரின் ஆத்மா நிலைவாழ்வுபெற இரங்கல் திருப்பலி சனிக்கிழமை 29.10.2011 பி.ப. 4.30 மணிக்கு கல்லூரி சிற்றாலயத்தில் நடைபெறும். அத னைத் தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெறும்.

நன்றிப் பெருக்குடைய அன்பு நெஞ்சங்கள் அனைவரையும், சிறப்பாக சகல பழைய மாணவர்கள், பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனத்தினர், புனித பத்திரிசிரியார் கல்லூரி சமூகத்தினர் மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*"யார் அறிவார் சா நாளும் வாழ் நாளும்"*

இல.6, புனித பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.

புனித பத்திரிசியார் கல்லூரி
பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனத்தின்
பழைய மாணவர் சங்கம்.



## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம்
பிரிவு 268 இன் பிரகாரமான

## அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அனுமதியின்றி சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டடங்கள் கட்டுதல், திருத்தங்கள் செய்தல், வீதியோர எல்லைச்சுவர் போன்றவற்றை அமைத்தல் மேற்படி சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே இதற்கான அனுமதியை இந்தப் பிரதேச சபையிலிருந்து வழங்கப்படும் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக விவரங்களைப் பிரதேசசபை பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை,
ரெட்பானா, விசுவமடு,
27.10.2011

சி.அ.ஆனந்தகுமார்
செயலாளர்
புதுக்குடியிருப்பு பிரதேச சபை



## Start Your Degree With Your Pending A/L Results



இலங்கையில் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமான இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஊடாக அரிய வாய்ப்பு,

அனுமதிக்கான தகுதிகாண் பரீட்சை யாழ்நகரில் வரும் 30.10.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு SLIIT யாழ் நிலையத்தில் நடைபெறஉள்ளது.

*புதிதாக பதிவுசெய்ய விரும்புபவர்கள்*
*பதிவுக்கட்டணத்துடன் பரீட்சை நிலையத்திற்கு நேரில் சமுகம் தரவும்*

**SLIIT Jaffna Centre**
No.154A, Navalar Road, Jaffna
Tele : 021 7200406
Web :www.sliit.lk
Contact : Shandra- 0772 974710
Bravo - 0777 315262


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவலத்தால் அழிந்த யாழ். மத்திய கல்லூரிக்கு மெருகேற்றிய அதிபர் இராசதுரை



கணபதி இராசதுரை என்னும் தனி மனிதனின் செயற்பாடுகள், சாதனைகள், தேடல்கள், தொடர்புகள் என்பன அவரைப் பல்வேறு குழுமங்களுக்குள் உள்ளீர்த்து அவர் சார்ந்த காலத்து வேலைத் திட்டங்களை செழுமை பெற வைத்தன.

கல்விப் புலத்துச் செயற்பாடுகளில் காலடி வைத்தவர்களுக்கு வழிகாட்டியாகவும் முன்னுதாரண மாகவும் திகழ்ந்த மறைந்த அதிபர் இராசதுரையை கல்விச் சமூகத்து அங்கத்துவரென்ற ரீதியில் நினைவு கூர்ந்து அவரின் சிந்தனைகள் சில இங்கே வெளிப் படுத்தப்படுகின்றன.

தென்மராட்சியில் ஏழ்மைச்சூழலில் ஒரு தொழிலா ளியின் மகனான இவர் அகில இலங்கை யிலும் அறியப்பட்டவராக உண்மைக்கல்வியின் வரைவிலக்கணத்தைப் புரிந்தவராக மேற்தரச் சிந்தனையை கொண்டவராக வளர்ந்தமைக்கு அந்த மந்துவில் கிராமத்து வளர்ப்பு முறை காரணமாக அமைந்தது. அதன் பின்னணி இவருக்கு சமூகக் கட்டமைப்பின் மறுசீரமைப்பையும் சமூக விழுமியம், கலாச்சாரத்தின் நவீனப் படுத்தலுக்குமான சிந்தனையை வழங்கியது. தன்னை மறைக்கின்ற தன்மையும் ஒப்பிட்டு உயர்த்திக்காட்டும் போக்கும், இலாபம் கருதி முன்வரும் பண்பும், இயல்பு மனித நிலையை விலத்தி நிற்கும் சுபாவமும் கொண்டதான யாழ்ப்பாணத்துக் கலாசாரம் இராசதுரை அவர்களிற்கு சவாலாக அமைந்தது. தாயின் நெறிப்படுத்தலிலும் கடின உழைப்பிலும் இக்குடும்பம் சுயதேடல் மிக்க ஒரு கல்வியை நாடியது. சுய கற்றலின் சிறப்பபை நாம் அக்குடும்ப அங்கத்தவர்கள் இன்றுள்ள நிலையில் தெரிந்து கொள்ளலாம்.

இலங்கையில் பல மாவட்டங்களில் இவர் ஆற்றிய ஆசிரியப்பணி அவரின் கல்வி தொடர்பான சிந்தனைக்கு உரமிட்டது. பல்வேறு மாணவப் பிரச்சினைகள், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் இலங்கையின் பரீட்சைகள், கற்பித்தலில் காட்டிய நுட்பம், ஆசிரியத்துவத்தின் தவறான அர்த்தப்படுத் தல் என்பன இவரால் முழுமையாகப் புரிந்து கொள் ளப்பட்டது. யா/கட்டுவன்புலம் ம.வி, யா/ நடேஸ்வராக் கல்லூரி, யா/அச்சுவேலி ம.வி, யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்பவற்றில் அதிபராகக் கடமையாற்றிய போது அப்பாடசாலைகளில் இவர் ஏற்படுத்திய மாற்றம் இன்றும் நினைவு கூரத்தக்கன. உட்கட்டுமானம், முகாமைத்துவ முறை; பணிப் பங்கீடு, பௌதீக மனித வள முகாமை போன்றவை இவரால் புது அர்த்தப்படுத்தப்பட்டன. இன்றைய பண்புத் தரங்கள், அவற்றின் சுட்டிகள், உப சுட்டிகள் போன்றவை அன்றே இந்த அதிபரால் அவரது நிர்வாகத்தில் முன் வைக்கப்பட்டன. பாடசாலையும் சமூகமும், முறையான பாடவிதான முகாமைத்துவம், மாணவர் அடைவு மட்டம், மாணவர் நலன்புரிச் சேவை என்னும் பண்புத் தரங்களில் கூடிய கரிசனை காட்டினார். குறிப்பாக யாழ்ப்பாணம் மத்திய் கல்லூரியில் அதிபராக இவர் கடமையாற்றிய காலம் இலங் கைக் கல்வித்திட்டமிடலில் ஆவணமாய்ப் போற்றக் கூடியது.

ஆனால் இவற்றை ஆழமாக ஆராயவும் ஆதரவுக்கை கொடுக்கவும் முன்னெடுக்கவும் ஒரு சிலர் மட்டுமே கூட இருந்தனர். ஏனையோர் எதையும் எதிர்ப்போம் என்றும் சிலதை எதிர்பார்ப்போம் என்றும் சுய லாபமீட்டலில் வெற்றி காண முற்பட்டனர். எமது சமூகத்தில் பற்று என்பது உதட்டுப் பேச்சாகவும் கல்வியியலில் பகுப்பாய்வும் தீர்வும் இன்றி சும்மா இருப்போரின் பேச்சாக ஓங்கி ஒலித்தது. அவலத்தால் அழிந்த மத்தியம் மெருகேறியது. பௌதீக வளங்கள், ஆளணி அதிகரித்தது. பரீட்சை அடைவு மட்டம் அதிகரித்தது. தேசிய இலக்கை நோக்கி விளையாட்டு வளர்ந்தது. கழகங்கள் இருபதிற்கு மேல் இயங்கின. கலைத்திட்ட மாற்றங்கள் கல்வி மறுசீரமைப்பிற்கு ஏற்ப ஏற்படுத்தப்பட்டன. முந்திய கல்லூரி அதிபர்கள் அதிகரித்ததுபோல் இராசதுரையும் நிரந்தரப் பெயர் பெற்றுக்கொண்டார்.

### சவால்கள்

அதிபர்.இராசதுரையின் காலத்தில் நாட்டுச்சூழல் மிகப்பயங்கரமாக இருந்தது. இந்த நிலைக்கு எதிர்கொள்ளல் என்பது துணிவுமிக்கவர்க்கு மட்டுமே உரியது. அது இவரிடம் நிறைய இருந்தது. ஆசிரிய சமூகத்தின் போக்கு அடுத்த சவாலாக அமைந்தது. உயர்கல்விப் பெறுகைக்கு முயற்சிக்கும் ஆசிரிய சமூகத்துக்கு களைப்பாறும் இடமாகவே பாடசாலைகள் கருதப்பட்டன். கற்பித்தல் செயற்பாட்டுடன் பின்னிப் பிணைந்த இணைப்பாட விதானச் செயற்பாடுகள், விசேட செயற்திட்டங்கள், கலை ஆக்கத் திறன் விருத்தி போன்றவற்றில் மன முவந்து ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

இலகு வேலைத்திட் டத்தில் இணைப்பதற்கான அதிபரின் நடவடிக் கைகளில் முரண்படுவோர் அமைக்கும் குழுக்களும் அக்குழு முரண் பாடும் அதிபரினால் எதிர்கொள்ளப்பட்ட இன் னோர் சவாலாகும். அதிபரால் ஏற் படுத் தப்டும் மாணவர் ஒழுக்காற்று நடவடிக் கைகளில் மேற்படி குழுமுரண் பாடு மாணவர்களிடத்தும் பிரச்சினையை வளர்த்தல் மற்றோர் சவாலாகும். புதிய கல்வி மறுசீரமைப்பில் நிகழ்த்தப்படும் ஆசிரியர் பயிலமர்வுகளின் தரம் மற்றும் அவை தரும் விளைவுகளால் மாற்றப்ப டாத ஆசிரியர்களின் எதிர் விளைவும் அதிபர்எதிர்கொண்ட சவால்களாகும்.

ஆய்வுகூடப் பொருள்கள், வள நிலையங்களின் மூலப் பொருள், நூலகத்தின் நூல்கள், விளையாட்டு உபகரணங்கள், நவீன இலத்திரனியல் கற்பித்தல் சாதனங்கள், சிறந்த தொழில் நுட்பத்திறன் கொண்ட ஆசிரியர்கள், இவற்றைத் தேடிப் பெறல் அவர் எதிர் கொண்ட ஏனைய சவால்கள் ஆகும். வளர்க்க நினைக்கும் மத்திய கல்லூரிக்கு பொருள்வளமும், பணமுதலீடும், திட்டமிடலாளர்களும் இன்னொரு சவாலாக அமைந்தது.

### தனிச்சிறப்புகள்

எந்த நபரையும் சரியாக எடை போடுவார். நகைச்சுவையும் அர்த்தமும் கலந்த உரையாடல் திறன்கொண்டவர். கேள்வி கேட்பதில் வல்லவர். அதீத ஞாபக சக்தி கொண்டவர். இலக்கிய இரசனை கொண்டவர். உதயன் மற்றும் பத்திரிகைகளின் செய்தியாளராகவும் ஆய்வுக் கட்டுரையாளராகவும் இலங்கியவர். பலாலி தளமான கதை என்ற இவரின் கட்டுரை பல்வேறு நாழிதழ்களில் வெளிவந்தது. தெல்லிப் பழை கலை இலக்கிய வட்டம் எனும் அமைப்பில் இவர் அங்கத்தவராக இருந்து இலக்கியப்பணி செய்தார்.

வாகனங்கள் ஓட்டவும், கணணியைக் கையாளவும் தேர்ச்சி பெற்றவர். மும்மொழியிலும் உரையாட வல்லவர். பாமர மக்களுடன் உரையாடுவதில் விருப் பம் கொண்டவர். பாரம்பரியக் கலைகளுக்கு மதிப்புக் கொடுப்பவர். யப்பான், இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிற்கு கல்விக் களப்பயணம் செய்தவர். இலங்கை வானொலியிலும் யாழ் FM இலும் கல்வி ஒலிப் பதிவுகளிற்கு உதவி செய்தவர்.

தனது வேலைகளைத் தானே நிறைவேற்றுவார். சுற்றத்தார் நண்பர்கள் எல்லோரையும் மிகவும் நம்புபவர்.

கல்லூரியில் யாழ்ப்பாணத்து தேவைகளுக்குரிய மண்டபம், உபகரணங்கள் என்பவற்றை வழங்குவதில் முன்னிற்பார். யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக இருந்து பல்கலைக்கழக வளர்ச்சிக்காக பாடுபட்டவர். யாழ்.கல்வியியல் கல்லூரி ஆரம்பித்தபோது அதன் தேவைகளை நிறைவேற்ற ஒத்துழைத்தவர். அதிபர் சங்க தலைவராக இருந்தபோது ஆசிரியர் மாணவர்க்கான பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்தவர்.

பாடசாலையில் உள்ளக மேற்பார்வை செய்யும் போது காணும் கழிவுப் பொருள்களை தாமே அகற்றுவார். மின்சாதனங்களை திருத்துவார். பன்முக ஆளுமை கொண்ட இவரின் தனிச்சிறப்புக்களே இவரிற்கு சவால்களை வெற்றி கொள்ள உதவின. சுருக்கமாகக் கூறினால் மேலே சொன்ன சவால்கள் வெல்லப்பட்டன. இது ஒரு சாதனையாக அமைந்தது. அதிக மாணவர்கள் அனுமதி பெற்றனர். அடுத்த சாதனை நேரகாலம் பார்க்காமல் அதிபரின் பணிகளில் இணைந்து செயற்படத் தயாராக இருந்த ஆளணிகள் அடுத்த வெற்றியாக அமைந்நது.

மத்திய கல்லூரி மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் செயற்பாடுகள் வலய மாகாண மட்டங்களில் பாராட்டப்பட்டன. துடுப்பாட்டம், கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் மாணவர்கள் வெற்றி பெற்று சிறந்த அணிகள் உருவாகின. ஸ்கிறபிள், செஸ் போன்ற உள்ளக விளையாட்டுக்கள் வளர்ச்சி கண்டன. விஞ் ஞானக் கண்காட்சி, புத்தாக்கச் செயற்பாடுகளில் மத்திய கல்லூரி முன்னிற்கு நின்றது. இவரின் பதவிக்காலத்தில் புத்தாக்கத்திற்கான சிறந்த ஜனாதிபதி விருது மத்திய கல்லூரிக்குக் கிடைத்தது. சாரணர்கள் தேசீயமட்ட ஜம்போறிகளில் திறமை காட்டினர். சென்ஸ் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சிறந்த பயிற்சியும் சேவை நோக்கம் கொண்டதாயும் விளங்கியது. கந்தசாமி அழகியற் புங்கா புதுப்பொலிவு பெற்றது.

யாழ் மாவட்டக் கலைஞர்களை ஒன்று திரட்டி இசை நாடக விழாவை ஒழுங்கு செய்து திறமையான கலைஞர்களை இனம் காட்டியதோடு எமது மாணவர்களாலும் சத்தியவான் சாவித்திரி இசை நாடகம் மிகுந்த தரத்துடன் அரங்கேற்றப்பட்டது. சொல்லாடல் கழகம் உருவானது. யாழ். மாவட்டத்து தொழில் முறைக் கலைஞர்களிற்கு சவாலாக பட்டிமன்றக் குழு உருவானது. ஆலயங்களில் இக்குழு விழிப்புணர்ச்சிச் செயற்பாடுகளில் ஈடுபட்டது. பாதீனிய ஒழிப்பு, சுற்றுப்புறச் சூழல் காப்பு, இலவச மருத்துவமுகாம் போன்ற சமூகம் தொடர்பான செயற்திட்டங்கள் முன்கொண்டு செல்லப்பட்டன. சாதனைகளால் பாராட்டுக்களும் ஒத்துழைப்புகளும் கிடைக்கத் தொடங்கின. மத்தியம் யாழ்ப்பாடசாலைகளில் முன்னணிப் பாடசாலையாக எழிச்சிகண்டது.

**க.இராஜேந்திரன்,**
அதிபர், கிளி/பாரதி வித்தியாலயம்.

யாழ்ப்பாணத்துக் கல்விப் புலத்தில் அசைக்க முடியாத சேவைகள் ஆற்றிய அதிபர் கணபதி இராசதுரையின் நினைவுகளை யாரும் எழிதில் அகற்ற முடியாது. அவரின் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். அர்ப்பணிப்பு என்ற சொல்லின் கருத்து எல்லோராலும் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

சமகால நிலைக்கேற்ப எமது பெரும் சொத்தான மாணவர்கள் எதிர்கால தேவைக்கு தயார்ப்படுத்தப்பட வேண்டும். எமது அர்ப்பணிப்பான செயற்பாடுகளே காலம் சென்ற அதிபரிற்கு எமது நன்றிக் கடனாகவும் அஞ்சலியாகவும் அமையும்.

## பஸ் தரிப்பிடம் அமைப்பு

வரணி, ஒக்.28

வரணி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் க.பஞ்சரத்தினம், பெற்றோர் வே.கந்தசாமி- திருமதி க.தங்கம்மா ஆகியோரின் ஞாபகார்த்தமாக இந்தப் பாடசாலை முன்பாக பஸ் தரிப்பிடம் ஒன்று அவரது குடும்பத்தினரால் அமைக்கப்பட்டு அண்மையில் பொது மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை-கொடிகாமம் பிரதான வீதியில் இந்தத் தரிப்பிடம் அமைக்கப்பட்டதன் மூலம் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் ஆகியோர் பயனடைவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-122)

## வடக்கில் அபிவிருத்தி பணிகளுக்கு தயக்கம் காட்டும் நிறுவனங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.28

வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ள பின்னடித்து வருவதாக தெரியவருகிறது. மாகாணத்தில் எந்தவொரு அபிவிருத்தித் திட்டங்களின் முன்மொழிவுகளுக்கும் சிபார்சு பெறப்படல் வேண்டுமென மாகாண ஆளுனரால் சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி உதவி வழங்க வெளிநாடுகளின் நிறுவனங்கள் தயக்கம் காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆளுநரின் அறிவிப்பு வெளிவர முன்னர் வெளிநாடுகளின் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட திட்டங்களின் முன்மொழிவுகளை அந்தந்த நிறுவனங்கள் கவலை தெரிவிக்கும் கடிதத்துடன் திருப்பி அனுப்பியுள்ளன. இதனால் அமைச்சுக்களால் முன்மொழியப்பட்ட வேலைத் திட்டங்கள் இல்லாமல் போய்விட்டதாகவும் தெரியவருகிறது. (ம-207)

## சுகாதார முகாமை உதவியாளர் சேவை முகாமைத்துவ சேவைக்குள் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

வடமாகாண சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதி வடமாகாண ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளது.

எனவே வடமாகாண சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்தவர்கள் தம்மை வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யுமாறு கோரி மாகாண பொது நிர்வாகச் சுற்றறிக்கையின்படி உள்ளீர்ப்பு விண்ணப்பப் படிவங்களை அனுப்பமுடியும்.

எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்து சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரது சிபார்சுடன் வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சுக்கு விண் ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்ய விரும்பாத சுகாதார முகாமைத்துவ உதவியாளர் எதிர்வரும் 17 ஆம் திகதி அல்லது அவர் இறுதியாக சேவையாற்றிய திகதியிலிருந்து இளைப்பாறுவதற்கு அனுமதிக்கப்படுவார் எனவும் இவ்வாறு ஓய்வுபெற வைக்கப்படும் அலுவலர்கள் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 02 ஆம், 7ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவர்கள் எனவும் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-300)

## சங்கங்களை பதிவு செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.28

சுகாதார நிறுவனங்களில் இயங்கும் நலன்புரி சங்கம் மற்றும் வைத்தியசாலை அபி விருத்திச் சங்கங்கள் உடனடியாக பதிவு செய்யப்பட வேண்டும் என்று வடமாகாண சுகாதார சுதேசவைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன் வடமாகாணத்தில் இயங்கும் சுகாதார நிறுவணங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பதிவுசெய்யப்படாத நலன்புரி சங்கள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திச்சங்கங்கள் இயங்குவதற்கு வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சால் அனுமதிக்கப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் தெரியப்படுத்தியுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகசேவையாளர்களின் நிதி உதவியுடன் கல்வி வழங்கும் ஈஞ்சடி நாவலர் பாடசாலை

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

ஈஞ்சடி நாவலர் பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்பான சேவைகளை மட்டுமல்லாது நிதி உதவிகளையும் சமூக சேவையாளர்கள் பலர் வழங்கி வருகின்றமை பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக உள்ளது.

பாடசாலையின் கட்டடம் அமைந்துள்ள காணி ஈஞ்சடி நாவலர் பாடசாலைக்குச் சொந்தமானதாக இருந்தாலும் பாடசாலைக்கு விளையாட்டு முற்றம் தேவை என்பதை உணர்ந்து பாடசாலையுடன் இணைந்த காணியை பாடசாலையின் நிர்வாகச் சபைத் தலைவரான இ.பேரின்பநாயகம் தனது நிதி உதவியுடன் விளையாட்டு முற்றத்துக்குத் தேவையான காணியை அன்பளிப்புச்செய்தார்.

அதனைத் தொடர்ந்து சிறார்களின் விளையாட்டு உபகரணங்களுடன் கனடாவைச் சேர்ந்த சமூகசேவையாளர் இந்திரன் பத்மநாதன் வழங்கிய நிதி அன்பளிப்புடன் விளையாட்டு முற்றம் ஊஞ்சல், இராட்டினம் கொண்டதாக மெரு கூட்டப்பட்டது.



பாடசாலைக்கெனத் தண்ணீர்த் தாங்கியொன்றை இ.அருமைத்துரை தனது சகோதரரின் பிள்ளைகளின் ஞாபகார்த்தமாக அன்பளிப்புச் செய்தார்.

சிறுவர் அரங்கு அமைப்பு பேராயிரவர் செல்வி றோகினி அன்பளிப்பாக வழங்கி பாடசாலைக்கென ஓர் பேராயிரவர் அரங்கினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பாடசாலையின் ஒவ்வோர் அடிப்படைத் தேவைகளும் வெளிநாட்டில் வாழும் ஈஞ்சடி மக்களின் நல்லெண்ணங்களாலும், சுதுமலை வாழ் சமூக சேவையாளர்கள் பலரினதும் நிதி உதவியினாலும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் வளர்ச்சியில் பெரிதும் சேவையாற்றிய நிர்வாக சபையில் 2003 ஆம் ஆண்டு தலைவராக இ.பேரின்பநாயகம், உபதலைவர் திருமதி பத்மாவதி அருமைத்துரை, செயலாளர் க. ஸ்ரீநந்தகோபன், உபசெயலாளர் திருமதி ப.சிவலிங்கம் பொருளாளர் சி. இராசரத்தினம், உறுப்பினர்களாக ச. லிங்கசீலன், திருமதி அ.நவரட்ணம் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது பொது நிர்வாக சபையின் தலைவராக இ.பேரின்பநாயகம், உபதலைவராக வி. சந்திரராசா, செயலாளராக க. ஸ்ரீநந்தகோபன், உபசெயலாளராக க. இராசரத்தினம், பொருளாளராக ச. தம்பித்துரை ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக சி. இராசரத்தினம், த. இலங்கநாதன், ந.குணரத்தினம், ந.பவாநாதன், சி. பாலேந்திரா, க. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

2008 ஆம் ஆண்டு மூன்றாவது நிர்வாக சபையில் தலைவராக சி. சந்திரராசா உப தலைவராக இ. பேரின்பநாயகம், செயலாளராக க. ஸ்ரீநந்தகோபன், உப செயலாளராக தி.சுகுமாரன், பொருளாளராக க. இராசரத்தினம், ஆகியோரும் உறுப்பினர்களாக ந. குணரத்தினம், க. பாலசுப்பிரமணியம், த. இலங்கநாதன், ந. பவாநாதன், க. தேவராசா, இ. ஈஸ்வரன் ஆகியோரும் கடமையாற்றினார்கள். பாடசாலை ஆரம்பிக்கப் பட்ட காலத்தில் முதலாவது நிகழ்வாக 2009 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நடைபெற்றது. அதன் பின்னர் கலை விழாக்களும் இடம் பெறத் தொடங்கின.

பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் சேவையாற்றிய இ. பேரின்பநாயகம் ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை ஆசிரியர்களுக்கான சம்பளத்தின் ஒரு பகுதிகளையும், நிதிசார் வேலைத்திட்டங்களுக்குப் பணத்தையும் முதலீடு செய்தல். பாடசாலையில் இடம்பெறும் சகல விழாக்களுக்கும் நிதி உதவியையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சோபனா

மாணவர்கள் கற்றலை இலவசமாக மேற்கொள்ள சகல வசதிகளும் இந்தப் பாடசாலையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை புதிய கட்டடத் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் 2003 ஆம் ஆண்டு 28 மாணவர்களும், 2004 ஆம் ஆண்டு 46 மாணவர்களும், 2005 ஆம் ஆண்டு 42 மாணவர்களும், 2006 ஆம் ஆண்டு 26 மாணவர்களும், 2007 ஆம் ஆண்டு 35 மாணவர்களும், 2008 ஆம் ஆண்டு 32 மாணவர்களும், 2009 ஆம் ஆண்டு 21 மாணவர்களும் உள்வாங்கப்பட்டு கற்றல்செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு முக்கிய பிரதான கர்த்தாக்களாகத் திகழ்பவர்கள் இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆவார்கள்.

நாவலர் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் பெற்றோர்களின் ஆர்வமும் கற்றலை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்ததுடன் ஆசிரியர்களின் ஆர்வத்தையும் வலுவூட்டியது.

*(தொடரும்)*



770, 772, கே.கே.எஸ்.வீதி, (தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம். TP: 021 222 0421, Fax: 222 0421
526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம். TP :021 222 1723.

தோற்றம்: 20.07.1982

மறைவு: 11.11.2007



## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

திதி: துதியை (28.10.2011)

*அமரர்*

### பரமநாதன் ஜெயக்குமார் (ஜெயா)

*எங்கள் அன்பின் ஜெயாவே!*
*நீண்ட நெடுநாள்கள் வாழ்வாய்*
*பக்கபலமாய் நீ இருப்பாய் என்றிருந்தோம்*
*கண்ணிமைக்கும் நொடிப் பொழுதில்*
*கயவர்களின் அம்பு பட்டு*
*உன் உயிரை பறித்தானோ*
*பாசத்தால் கட்டுண்டு நாம் தவிக்கின்றோம்*
*ஆண்டுகள் நான்கென்ன*
*நாலாயிரம் ஆண்டுகள்தான் ஆனாலும்*
*என் அருகில் தான் நீயிருக்கிறாய்*
*ஜெயா! ஜெயா! என்று எம்மோடு பலரும்*
*கூப்பிடுவது உன் காதில் கேட்கிறதா?*
*துணையாக நீ நின்று தோள் கொடுத்ததெல்லாம்*
*கதையாகி கனவாகி போனதேனோ*
*உனை நினைத்து அழுதாலும் தொழுதாலும்*
*ஆறாது நம் துயரம்*
*என்றென்றும் உன் ஆத்மா சாந்தியடைய*
*கல்வளையான் வீரபத்திரர் காளி*
*துணை கொண்டு பிரார்த்திக்கின்றோம்*

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, அண்ணைமார், அக்கா, தம்பி, அத்தான்,
அண்ணிமார், மருமக்கள், பெறாமக்கள், சின்னையா.

தாவளை, இயற்றாலை, கொடிகாமம்.

## கண்ணீர் அஞ்சலி

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின்
உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு.சி.அருட்செல்வன்
அவர்களின் அன்பு மாமியார்
அமரர் இராசையா புவனேஸ்வரியம்மா
அவர்கள் இறைபதமெய்தியமையால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினரின் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
கண்டாவளை.

உதவி அரசாங்கஅதிபரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

## ஈராண்டு நினைவஞ்சலி



### ஆசீர்வாதம் துரைரட்ணம்

(ஆசிரியர்)

பாரினில்
01★05★1935

பரமனிடம்
28★10★2009

ஆண்டிரண்டு சென்றாலும் ஆறவில்லை எம்துயரம்
பாரினில் எம்மைத் தவிக்கவிட்டு பரமனிடம் சென்றீர் ஐயா
உம் செயல்கள் ஒவ்வொன்றும் எம் மனதை உருக்குதையா
குடும்பத்துக்கு நல்ல தலைவனாய் - இந்தக் குவலயத்தில்
நல்ல மனிதனாய் என்றும் கூடி வாழ்ந்து
உறவு கொண்ட தந்தையே - கூற்றுவனின்
அழைப்பினால் கூடுவிட்டுச் சென்றதேனோ?

ஆத்ம சாந்தி திருப்பலி இன்று (28.10.2011) வெள்ளிக்கிழமை புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் காலை 6 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். என்றும் உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

32, முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக தேர்தலில் போட்டியிட்ட அரச அலுவலர்கள் மீது நடவடிக்கை

கொழும்பு,ஒக்.28

சட்டவிரோதமான முறையில் தேர்தலில் போட்டியிட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரச உத்தியோகத்தர்கள் சிலர் தேர்தல் விதிகளை மீறிச் செயற்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்கள் பலர் உரிய விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ளாது தேர்தலில் போட்டியிட்டுள்ளனர்.

பதவி விலகாமலேயே அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களின் ஊடாக தேர்தலில் போட்டியிட்டுள்ளனர். கொல்கஹாவெல, சிலாபம் போன்ற பிரதேசங்களில் முக்கிய அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களில் இவ்வாறு அரச உத்தியோகத்தர்கள் போட்டியிட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக தேர்தலில் போட்டியிட்ட சகல அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கண்ணி அகற்றும் பாக்.குழு வன்னிக்கு நேரில் வருகை

கொழும்பு,ஒக்.28

பாகிஸ்தான் இராணுவத்தின் பொறியியல் பிரிவைச் சேர்ந்த 10 அங்கத்தவர்கள் கொண்ட கண்ணிவெடி அகற்றும் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

இந்தக் குழு வன்னிக்கும் சென்று கண்ணி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டது.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் குழுவுக்கு, கேணல் சாபிர் நிஸார் தலைமை தாங்குகிறார் எனவும் இவர்கள் சூடான், கம்போடியா ஆகிய நாடுகளில் கண்ணிவெடி அகற்றிய அனுபவம் கொண்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கண்ணிவெடி அகற்றுவதில் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதே மேற்படி குழுவினரின் இந்த பயணத்தின் நோக்கமாகும். அத்துடன், கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான கற்கைநெறிகள் பலவும் மேற்படி குழுவினரால் இலங்கையில் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பயணம், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பையும் நட்புறவையும் மேம்படுத்தும் என நம்பப்படுகிறது என்றும் பாகிஸ்தான் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குர்பா செய்ய ஒட்டகங்களை இறக்குமதி செய்து தரத்தயார்

## அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவிப்பு

ஹஜ் பெருநாள் தினங்களில் மாடுகளை அறுத்துப் பலியிடுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அதனை விசேடமாக நிறைவேற்றுங்கள். ஆனால் கன்றுக்குட்டிகள், பசுக்கள், எருமைகள் போன்றவற்றைக் கொல்ல வேண்டாம். குர்பா செய்யப்படும் மாடுகளை வதை செய்யாமல் அறுத்து, உங்களுடைய கடமையைச் செய்யலாம். தேவை ஏற்படுமானால் ஒட்டகங்களைக் கூட இறக்குமதி செய்யத் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மக்கள் தொடர்பாடல் மற்றும் மக்கள் விவகார அமைச்சர் மேர்வின் சில்வா.

நேற்றுமுன்தினம் பகல் மல்வானையில் முஸ்லிம் சமூக பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற குர்பா தொடர்பான கலந்துரையாடல் ஒன்றின்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் இது குறித்து தொடர்ந்து கூறுகையில்:

எந்தச் சந்தர்ப்பத்திலும் மாடுகள் வதைசெய்யப்படாது, உரிய முறையில் அறுக்கப்பட வேண்டும். இல்லாத பட்சத்தில் அதைத் தடுத்து நிறுத்த நான் தயங்க மாட்டேன். முஸ்லிம்கள் எமது சகோதரர்கள். இதனால் தான் சதாம் ஹூஸைன் கொலையின் போது நாம் குரல் எழுப்பினோம். இன்று கடாபி போன்றவர்களை மிலேச்சத்தனமாக வெள்ளையர்கள் கொன்றனர். நாம் ஒற்றுமையானவர்கள் . உலகம் எமது நாட்டைத் தாக்கும் போது எமக்கு உதவியவர்கள் முஸ்லிம் தலைவர்களே.

இன்று வத்தளை போன்ற பகுதிகளில் மாடுகள் தகாத முறையில் வதை செய்யப்பட்டு கொல்லப்படுகின்றன. இவற்றை நான் நிறுத்தினேன். அந்த மாடுகளை விடுவித்தேன்.

எனவே மாடுகளை அறுக்காமல் ஆடுகள் அறுக்க முயற்சிக்குமாறு நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். தேவை ஏற்படுமானால் ஒட்டகங்களைக்கூட இறக்குமதி செய்யத் தயாராக இருக்கிறேன். - என்றார் அவர்.

# ஆபாசப்படங்களை விநியோகித்தவர் பொலிஸாரால் கைது

பேருவளை, ஒக்.28

பாடசாலை மாணவ, மாணவிகள், இளைஞர்கள் ஆகியோருக்கு கணினியிலிருந்து மெமரிகாட், பென்ரைவ்களுக்கு ஆபாசக் காட்சிகளை விநியோகம் செய்த சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவரை இங்கிரிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இங்கிரியவில் உள்ள கடையொன்றைத் திடீரெனச் சுற்றி வளைத்த பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர். அத்துடன், கணினியையும் கைப்பற்றினர். சந்தேகநபர் கணினியில் உள்ள ஆபாசக் காட்சிகளை குறிப்பிட்ட கடைக்கு வரும் இளைஞர்கள், பாடசாலை மாணவர்களுக்கு மெமரி கார்ட், பென்ரைவ்களுக்குப் பதிவு செய்து கொடுத்துப் பணம் பெற்றுள்ளார். பாடசாலை மாணவிகள்கூட இங்கு வருகின்றனர் எனத் தெரிய வருகிறது. மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன. (வ)

# சூழலை அசுத்தமாக வைத்திருந்த மூவர் கைது

வாழைச்சேனையில் டெங்கு நுளம்பு பரப்புவதற்கான சூழலை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் மூன்று பேர் வாழைச்சேனைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரிபிரிவுக்குட்பட்டதியாவட்டுவான் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரும், ஹிஜ்ரா நகர் கிராமத்தைச்சேர்ந்த இருவருமாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பொலிஸாருக்குக் கொடுத்த தகவலையடுத்து வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் சார்ஜன் எச்.எம். சியாம்தலைமையில் சென்ற சுற்றுச் சூழல் பிரிவிற்குப் பொறுப்பானபொலிஸார் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் அந்தப் பிரதேசத்திற்குச் சென்று குறித்த மூவரையும் கைது செய்துள்ளனர்.

**விற்பனைக்கு**

56 அச்சுக்கூட லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் மேல்மாடி வீடு மற்றும் கச்சாய் வெளி பிள்ளையார் கோயில் அருகில் 6 ஏக்கர் தென்னங்காணி மற்றும் புலோப்பளை பிரதான வீதிக்கு அருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0779592051

**காணி விற்பனைக்கு/வாடகைக்கு**

குப்பிளான் வடக்கு கேணியடி வைரவர் கோயிலடியில் உள்ள 4 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு உடன் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

திருமதி Y. விஜய்

தொடர்புகளுக்கு:- 0776636469

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

47, நாள்கள் நிரம்பிய பொமினேரியன் ஆண், பெண் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- க. நடராசா,
பொற்பதி வீதி, காளி கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**பிரத்தியேக/குழு வகுப்புகள்**

க.பொ.த. (உ/தரம்): இரசாயனவியல்
க.பொ.த (சா/தரம்): 9,10 கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்

மேற்படி வகுப்புகள் உங்கள் இல்லங்களுக்கு வந்து கற்பித்துத் தரப்படும்.

தொடர்புகளுக்கு விரையுங்கள் 077 4014345

# முதலாம் வருட நினைவலைகள்

அன்னை மடியில்
1942 . 10 . 08



ஆண்டவன் அடியில்
2010 . 11 . 08

அமரர் சின்னத்தம்பி தேவராசா

திதி: துதியை (28.10.2011)

வருடம் ஒன்று ஆனபோதும்
வருடும் உங்கள் நினைவுகளோ
தினம் தோறும் மீட்டிப் பார்க்கின்றன
உங்கள் உருவமது மறைந்த போதும்
உள்ளத்து உணர்வுகளுடன்
நினைவுகளும் கனவுகளும்
நீங்காத சிற்பங்களாய்
நிலைத்துவிட்டன எம் நெஞ்சங்களில்...
அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்திபெற
அஞ்சலிப் பாக்களால் அர்ச்சிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாச்சிமார் கோவிலடி,
கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

# காணாமல்போன சுவீடன் நாட்டவரின் சடலம் மீட்பு

காலி கடற்பரப்பில் காணாமல்போன வெளிநாட்டவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த பிரஜையே இவ்வாறு காணாமல் போய் உயிரிழந்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி காணாமல் போன் குறித்த நபரின் சடலம் நேற்று முன்தினம் மாலைவரை கிடைத்திருக்க வில்லை.

உனவட்டுனவை அண்மித்த கடற்பரப்பில் சடலம் மிதப்பதாகக் கடற்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து கடற்படையினர் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (வ)

# 25ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

நாகமுத்து சிவப்பிரகாசம்

மலர்வு 05.02.1918 | உதிர்வு 02.10.1986

திதி: துதியை

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சிரணி நாகம்மாள்
கோயிலடி, சண்டிலிப்பாய்.- மனைவி.

# மரண அறிவித்தல்



P.C.அன்ரனி

இல.7, கோயில் வீதியில் வசித்தவரும் தற்போது கனடாவில் வசித்தவருமான பி.சி.அன்ரனி (இளைப்பாறிய கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர் / இளைப்பாறிய பதிவாளர் பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனம்) 22.10.2011 சனிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் 29.10.2011 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திக்காக 29.10.2011 சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரி சிற்றாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

9, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஆர்.லங்காதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கு பிரதமர் மீது குற்றம் சுமத்த காங்கிரஸ் முயற்சி

## சுப்ரமணியம் சுவாமி தெரிவிப்பு



2ஜி ஊழலுக்கான முழுப் பொறுப்பை யும் பிரதமரின் மீது சுமத்த காங்கிரஸார் முயற்சி செய்வதாக சுப்ரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளரிடம் கூறுகையில்:

மன்மோகன் சிங்கை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி விட்டு, பிரதமர் பதவிக்கு ராகுலைக் கொண்டு வரும் தீவிர முயற்சியில் காங்கிரஸார் ஈடுபட்டிருக்கின்றனர்.

மேலும், மன்மோகன் சிங்கை 2ஜி ஊழலுக்குப் பொறுப்பாளியாக்க காங்கிரஸார் முயற்சிக்கின்றனர். ஆனால் இதன் மொத்தப் பொறுப்பின் பின்னணியும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியாவிடம் உள்ளது.

பிரதமரை இந்த ஊழலுக்குள் இழுத்து விடும் காங்கிரஸ் காரர்களுக்கு, பிரதமர் குற்றவியல் சட்டத்தை மீறியதாக எவரும் சொல்லமுடியாது என்று நான் கூறிக்கொள்கிறேன்.

மேலும், நான் அனைத்து கோப்புகளையும் பார்த்துவிட்டேன். அனைத்துத் தீர்மானங்களையும் ஆராய்ந்துவிட்டேன். எந்த இடத்திலும் மன்மோகன் சிங் நாட்டுக்கு இழப்பு ஏற்படுத்தும் விதமாக எந்த வழிகளிலும் செயற்படவில்லை.

பிரதமர் தன்னுடைய முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி ராசா 2 ஜி அலைவரிசை ஒதுக்கீட்டின் போதான ஊழலில் ஈடுபடுவதைத் தடுத்திருக்க வேண்டும். இந்த ஒரே ஒரு வழியை பிரதமர் செய்யாமல் விட்டுவிட்டார்.

ஆனால் பிரதமரைக் காட்டிலும் ஒருவருக்கு மிகப் பெரும் பொறுப்பும் அதிகாரமும் இருக்கிறது. அவரே சோனியாகாந்தி. எனவே யாரேனும் இந்த ஊழலுக்குப் பொறுப்பு யார் என்று சுட்டிக்காட்ட விரும்பினால் சோனியாவையே குறிக்கும்.

2ஜி விவகாரம் வழக்கில் ப.சிதம்பரத்துக்கு உள்ள பங்கை வெளிக்கொண்டு வரும் வரை நான் ஓயப்போவ தில்லை. 2ஜி ஸ்பெக்ட்ரம் விலை நிர்ணயத்தில் தவறிழைக்கக் காரணமாக இருந்தவர் சிதம்பரம்.

முன்னாள் மத்திய அமைச்சர் அ.ராசா எந்த விதத்திலும் கட்டுப்பாடில்லாமல் சுதந்திரமாக இயங்க வழி அமைத்துக் கொடுத்தவரும் சிதம்பரம்தான்.

ப.சிதம்பரம் இந்த ஊழலில் ஈடுபட்டதற்கான முகாந்திரம் இருக்கும் சூழ்நிலையில், சி.பி.ஐ. அவர் மீது உடனடியாக விசாரணை மேற்கொண்டு உண்மையைக் கொண்டுவர வேண்டும் - என்றார் சுப்பிரமணியம் சுவாமி. (வ)

# இந்தியாவின் பணக்கார பெண்மணியாக சாவித்திரி ஜிந்தால்



டில்லி, ஒக்.28

போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள பணக்கார இந்தியர்கள் பட்டியலில் 5ஆவது இடம் பிடித் துள்ளார் இந்தியாவின் பணக்கார பெண்மணியான சாவித்ரி ஜிந்தால். முகேஷ் அம்பானி முதல் இடத்தை தக்க வைத்துள்ளார்.

பணக்கார இந்தியர்கள் பட்டியலை அமெரிக் காவின் முன்னணி பப்ளிஷிங் மற்றும் ஊடக நிறுவனமான போர்ப்ஸ் நிறுவனம் வெளியிட் டுள்ளது. அதில் தொடர்ந்து 4 ஆவது முறையாக முதல் இடத்தில் உள்ளார் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் அதிபர் முகேஷ் அம்பானி. அவரது சொத்து மதிப்பு 22.6 பில்லியன் டொலர். ஆனால் அவரது தம்பி அனில் அம்பானி 10 ஆவது இடத்தில் இருந்து 13 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்.

19.2 பில்லியன் டொலர் சொத்து மதிப்புள்ள ஸ்டீல் நிறுவன அதிபர் லக்ஷ்மி மிட்டல் இரண்டாவது இடத்தில் உள்ளார். விப்ரோ நிறுவனர் ஆசிம் பிரேம்ஜி 3ஆவது இடத்திலும், 9.5 பில்லியன் டொலர் சொத்து மதிப்புள்ள - சாவித்ரி ஜிந்தால் 5ஆவது இடத்திலும் உள்ளனர். (வ)


# எடியூரப்பா மீது 6 ஆவது ஊழல் வழக்கு

பெங்களூர், ஒக்.28

ஊழல் வழக்கில் கைதாகி பெங்களூர் சிறையில் இருக்கும் கர்நாடக முன்னாள் முதல்வர் எடியூரப்பா மீது 6ஆவது ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெருமளவில் லஞ்சம் வாங்கிக் கொண்டு அரசு நிலத்தை தனியார் நிறுவனங்களுக்கு அடிமாட்டு விலைக்கு முறைகேடாக ஒதுக்கிய வழக்கில் கர்நாடக பா.ஜ.க. முன்னாள் முதல்வர் எடியூரப்பா கடந்த 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பெங்களூர், பரப்பன அக்ரஹாராவில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள் ளார். ஏற்கனவே அவர் மீது 5 ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில் 2 வழக்குகளில் அவருக்கு பிணை கிடைத்துள்ளது. மேலும் 2 வழக்குகளில் அவருக்கு பிணை கிடைக்குமா என்பது இன்றுதான் தெரியவரும். இந்தநிலையில் எடிதியூரப்பா மீது 6 ஆவதாக ஒரு ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (வ)



லோக் ஜனசக்தி கட்சித் தலைவர் ராம் விலாஸ் பாஸ்வன், அவரது மனைவி மற்றும் மகன் ஆகியோருடன் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து தீபாவளி வாழ்த்து தெரிவித்தனர்.

# தீபாவளியன்று குண்டுவெடிப்பு மணிப்பூரில்7 பேர் உயிரிழப்பு

மணிப்பூர், ஒக்.28

தீபாவளிப் பண்டிகையான நேற்றுமுன்தினம் மணிப் பூரில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 7 பேர் உயிரிழந்தனர்.

மணிப்பூர் மாநில தலைநகர் இம்பாலில் நேற்றுமுன்தினம் இரவு மக்கள் தீபாவளி கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொழுது, பயங்கரச் சத்தத்துடன் குண்டு வெடித்ததில் மக்கள் அலறியடித்தப்படி நாலா புறமும் சிதறி ஓடினார்கள்.

இம்பாலின் முக்கிய தெருக்களில் உள்ள ஜவுளி மற்றும் நகைக்கடைகளில் மக்கள் கூட்டம் அதிகம் காணப்பட்டதையடுத்து, இரவு 8 மணி அளவில் அங்குள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முன்பு திடீரென பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது.

அடுத்த சில நிமிடங்களில் அங்குள்ள புடைவைக் கடை ஒன்றில் மற்றொரு சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் அந்த கட்டடமே குலுங்கி நொறுங்கியது. குண்டுவெடிப்பில் சிக்கி 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்பில் காயம் அடைந்தவர்களை பொலிஸார் மீட்டு மருத்துவமனைகளில் சேர்த்துள்ளனர். இதுவரை இந்த குண்டு வெடிப் புக்கு எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பு ஏற்கவில்லை. (வ)

# கல்கத்தா மருத்துவமனையில் 2 நாளில் 12 குழந்தைகள் சாவு

கல்கத்தா,ஒக்.28

கல்கத்தா பிசி.ராய் குழந்தைகள் மருத்துவமனையில் கடந்த 48 மணி நேரத்தில் 12 குழந்தைகள் மரணமடைந்துள்ளன. இதனால் கோபமடைந்த அந்தக்குழந்தைகளின் பெற்றோர் மருத்துவமனைக்கு முன்பு வீதி மறியலில் ஈடுபட்டனர்.

அரசால் நடத்தப்பட்டு வரும் பிசி.ராய் மருத்து வமனை வடக்கு கல்கத்தாவில் உள்ளது. மருத்துவமனையின் அலட்சியம் காரணமாக தங்கள் குழந்தைகள் இறந்துள்ளதாக அந்த குழந்தைகளின் பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதுகுறித்து மருத்துவமனையில் பணியாற்றும் டாக்டர்கள் கூறுகையில்,

இந்த மருத்துவமனையில் குழந்தைகளின் உயிரிழப்பு எண்ணிக்கை சராசரியாக தினமும் 5 முதல் 6 வரை இருக்கும் என்றும் பெரும்பாலான குழந்தைகள் மோசமான நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படுவதே அதற்குக் காரணம் என்றும் தெரிவித்தனர். (வ)

# அசாமில் குண்டுவெடிப்பு: பயணிகள் ரயில் அருந்தப்பு

அசாம் மாநிலம் திமாஹைஸோ மாவட்டத்தில் அபராக் வேலி எக்ஸ்பிரஸ், ஹப்லாங்க் நோக்கிச் சென்று கொண்டிருந் தது. மகூர், பிகிடிங் ரயில் நிலையங்களுக்கு இடையே சென்று கொண்டிருந்த போது நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தண்டவாளத்தில் குண்டு வெடித்தது.

இந்தக் குண்டுவெடிப்பை வடகிழக்கு ரயில்வே மண்டல செய்தித் தொடர்பாளர் ஹஜோங் தெரிவித் தார். இந்த குண்டு வெடிப்பினால் தண்டவாளங்கள் சேதமடைந்ததாகவும், சென்று கொண்டிருந்த ரயில் தெய்வாதீனமாக விபத்தில் சிக்காமல் தப்பியதாகவும் ஹஜோங் தெரிவித்துள்ளார்.

தற்போது பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது குறித்து ரயில்வே பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

# நேபாளத்துக்கு இந்தியா நிதியுதவி

நேபாள நதிகளில் ஏற்படும் வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கு இந்தியா நிதியுதவி வழங்கியுள்ளது.

நேபாளத்தின் தெற்கு பகுதிகளில் உள்ள பல நதிகளில் வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கு இந்தியா 216 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது. நேபாளத்துக்கான இந்திய தூதர் ஜயந்த் பிரசாத் 216.10 மில்லியன் தொகைக்கான காசோலையை அந்நாட்டு நீர்பாசனத்துறை அமைச்சர் மகேந்திரா பிரசாத்யாத விடம் வழங்கினார். இந்த தொகை மூலம் நேபாளத்தில் உள்ள லால் பாக்கியா, பக்மதி மற்றும் கம்லா நதிகளில் வெள்ளத்தடுப்புப் பணிகள் மேற் கொள்ளப்படும். (வ)

# அருணாசலப் பகுதியில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்துக

## பா.ஜ.க. வலியுறுத்து

அருணாசலப் பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்று பிரதமரிடமும் சோனியா காந்தியிடமும் பாரதிய ஜனதாக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இப்போது மாநிலத்தில் நிலவி வரும் அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வர இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 356 (1) இன்படி ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் தேசிய பொதுச் செயலர் தபீர்கோவா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் அவர் தனித்தனியே அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

அருணாசலப் பிரதேசத்தில் அமைச்சர்கள் மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள மோதல்களும் உட்கட்சிப் பூசல்களும் ஆட்சியை சீர்குலைத்துள்ளன. இதனால், சட்ட அமுலாக்கம் சீர்குலைந்து விட்டது. தலைமை மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை குறித்து சட்டப்பேரவை உறுப்பினர்களின் கருத்தறிய பாரதிய ஜனதா கட்சி அரசியல் நோக்கர்களை அனுப்பி வைத்தது.

இது உட்கட்சிப் பிரச்சினை தான் என்றாலும், இதனால் மாநில மக்கள் ஏன் இன்னல்பட வேண்டும்? உரிய வளர்ச்சியும் பொது விநியோகமும் ஏன் பாதிக்கப்பட வேண்டும்?

வன்முறைகள், கொலைகள், ஆள்கடத்தல், முழு அடைப்பு நடத்துவது ஆகியன நாளாந்த நிகழ்வுகள் போலாகி விட்டன - என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வித பாதிப்பும் இல்லை

## நிமல் சிறிபால டி சில்வா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்க விஜயம் தொடர்பாக அரசு அலட்டிக்கொள்ளவில்லை. அது தனிப்பட்ட விஜயம். உத்தியோகபூர்வ விஜயம் அல்ல.

கூட்டமைப்பின் விஜயம் உத்தியோகபூர்வமானது என்றால் அமெரிக்கா எமக்கு அறிவித்திருக்கும். ஆனால், தவறான அறிவித்தல்கள் எவையும் எமக்குக் கிடைக்க வில்லை. கூட்டமைப்பின் விஜயத்தால் அரசுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அமெரிக்காவில் யாரோ அழைத்த தற்காக கூட்டமைப்பு அங்கு சென்றால் அதைப்பற்றி நாம் ஏன் பெரிதாக அலட்டிக்கொள்ள வேண்டும்?

ஊடகங்கள்தான் கூட்டமைப்பின் விஜயத்தை பெரிதுபடுத் துகின்றன. அரசு இந்த விஜயத்தைத் தடுப்ப தற்கு முயற்சி செய் தது என்று கூறுகின்றன. அப்படி எதுவும் இடம்பெறவில்லை. இப்படித் தெரிவித் தார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

# கூட்டமைப்பினரின் அமெரிக்க விஜயம் இலங்கைக்குத் தாக்கத்தை ஏற்படுத்துமா?

சம்பந்தன் தலைமையில் அமெ ரிக்கா சென் றுள்ள தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினர் அங்கு அமெ ரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி மற்றும் பான் கீ - மூன் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள் ளனர் என செய்திகள் வெளியாகி யுள்ளன. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்க விஜ யம் அரசுக்கு எவ்வகையான தாக் கத்தை ஏற்படுத்தும் என அர சியல்வாதி களிடம் நாம் கருத்துக் கேட்டோம்.

# தீர்வு முயற்சியில் அரசு உறுதி

## அஸாத் சாலி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா சென்றாலும் சரி, வேறு நாடுகளுக்குச் சென் றாலும் சரி தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவதில் அரசு உறுதியாக இருக்கின் றது.

புலிகள் ஒழிக்கப்பட்ட மறுகணமே தமிழ் மக்களுக்கு அரசியல்தீர்வை வைத்திருந்தால் இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்காது. இருந்தாலும், தீர்வு முயற்சியில் இருந்து ஜனாதிபதி பின்வாங்கவில்லை.

மீண்டும் புலிகள் உருவாவதற்கு இடங் கொடுக்க முடியாது. நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசுக்கு இருக்கும் போதே நாம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டுவிடவேண்டும். அந்த உயரிய நோக்கில் தான் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்குமிடையில் பேச்சுகள் தொடங்கப்பட்டுள் ளன. எந்தவொரு காரணத்திற்காகவும் தீர்வு முயற்சியைப் பிற்போட முடியாது. - இப்படித் தெரிவித்தார் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் அஸாத் சாலி.

# பாதகம் ஏற்பட்டால் அரசே பொறுப்பு

## திஸ்ஸ அத்தநாயக்க

இச்சந்திப்பின் பின்னர் என்ன நடக்கப் போகின்றது; அது எப்படிப்பட்ட சர்வதேச அழுத்தங்களைச் சந்திக்கப் போகின்றது என்பதை நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்சி என்ற வகையில் அமெரிக்க அரசுடன் பேசுவதை எம்மால் விமர்சிக்கமுடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை அவர்கள் சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்வதை எவராலும் தடுக்க முடியாது.

இச் சந்திப்பின் பின்னர் அரசுக்கு எப்படிப்பட்ட பிரச்சினை வந்தாலும் அரசு எதிர்கொள்ளவேண்டும். நாட்டுக்குப் பாதக மான நிலைமைகள் ஏற்பட்டாலும் அதற்கும் அரசே பொறுப் பேற்க வேண்டும்.

- இப்படித் தெரிவித்தார் ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க

# தமிழர் பிரச்சினை தீர்க்காதமையே காரணம்

## விஜித ஹேரத்

யுத்தம் முடிவுற்றபின்னர் அரசு தமிழ் மக்களின் பிரச் சினைகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்காமல் பேசிப் பேசிக் காலத்தை இழுத்த டித்ததால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா விடம் போய் பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றைய நாடு களின் உள்நாட்டுப் பிரச்சினை களைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் ஒரு நாடு. அந்த வகையில் இலங்கையின் பிரச் சினையைத் தமக்குதச் சாதக மாகப் பயன்படுத்தத்தான் அமெ ரிக்கா தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை அழைத்துள் ளது.

இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுவதற்கு இலங்கைதான் வழியேற் படுத் திக் கொடுக்கின்றது. இவ்வாறு செய்தமைக்கு நாம் இலங் கைக்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம். இலங்கை அரசு இனியாவது உணர்ந்து செயற்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நட வடிக்கை எடுக்க வேண்டும்.

- இப்படித் தெரிவித்தார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விஜித ஹேரத்.

# இதற்குக் காரணம் ஜனாதிபதியே - ஏ.ஆர்.எம்.மன்சூர்

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தமிழ்த் தலைவர்களுடன் பேசித் தமிழர்களின் பிரச்சினை களைத் தீர்த்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர்கள் ஏன் அமெரிக்காவுக்குச் செல்லப்போகின்றார்கள்?

இப்போது அமெரிக்கா சென் றுள்ள கூட்டமைப்புத் தலை வர்கள் தமிழர்களினதும் முஸ் லிம்களினதும் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர்கள். ஜனா திபதி மஹிந்தவும் தமிழர்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்த வர். அப்படியென்றால் கூட் டமைப்பின் இத்தலைவர் களு டன் ஜனாதிபதி பேசி எவ்வளவு அழகாகப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

இதேவேளை, கூட்டமைப் பின் அமெரிக்க விஜயத்தால் முஸ்லிம்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது என்று நாம் நம்புகிறோம். அவர்கள் முஸ் லிம்களின் பிரச்சினைகளையும் நன்கு அறிந்தவர்கள்.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா செல்வதற்கு முதற்காரணம் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவும் அவரது அரசும்தான்.

ஆட்சியில் இருந்த அரசுகள் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்காதமையால்தான் பயங்கர வாதம் தோன்றியது என்று அர சுக்கு நன்கு தெரியும். அந்தப் பயங்கரவாதம் இப்போது தோற்கடிக்கப்பட்ட நிலையில் பயங்கரவாதத்திற்கான கார ணத்தை ஆராய்ந்து பிரச்சினை களைத் தீர்ப்பதுதான் சரியான வழி.

- இப்படித்தெரிவித்தார் ஐ.தே.கவின் முன்னாள் அமைச் சர் ஏ.ஆர்.எம். மன்சூர்

# முஸ்லிம் தலைவர்களை கருவறுக்கும் நடவடிக்கைகளில் மேற்குலக நாடுகள்

## அஸ்வர்

முஸ்லிம் உலகத் தலைவர்களை கரு வறுக்கும் நடவடிக்கைகளை மேற் குலக வல்லரசு நாடுகள் வேகமாக மேற்கொண்டு வருவதை லிபியாவின் முன்னாள் தலைவர் கேர்ணல் கடாபி யின் படு கொலை மூலம் உலகம் உணரத்தக்கது என்று ஏ.எச்.எம்.அஸ்வர் எம்.பி. குறிப் பிட்டார்.

மௌலவி காத்தான்குடி பௌஸ் எழுதிய எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசைஞானம் ஆய்வு நூல் வெளியீட்டு விழா பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியில் நடை பெற் றது. அந்தநிகழ்வில் பிரதம அதிதி யாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்; கேர்ணல் கடாபி ஒடுக்கப்பட்ட, நசுக்கப் பட்ட மற்றும் அநீதிகளுக்கும் அவலங் களுக்கும் ஆளாகிய மக்களுக்காக சர்வதேச ரீதியில் குரல் கொடுக்கும் சக்தியாகத் திகழ்ந்தார். இலங்கையின் உற்ற நண்பர் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு எமது நாட்டுக்கு பல வழி களிலும் உதவினார். உலக முஸ்லிம் களுக்கு உதவி செய்தவர்.

இவ்வாறான ஒருவர் மிகவும் பயங்க ரமான முறையில் கொலை செய்யப் பட்டுள்ளார்.

அவரின் படுகொலை குறித்து கேர்ணல் கடாபியிடமிருந்து உதவி களைப் பெற்றவர்களும் ஏனைய முஸ் லிம் இயக்கங்களும் தமது கண் டனத்தை தெரிவிக்காதுள்ளமை புரியாத புதிராகவுள்ளது எனவும் கூறினார். (வ)

# ஜெயபுரத்தில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.28

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உள்நாட்டில் இடம் பெயர்ந் தோருக்கான தேசிய பாது காப்புக்கும் நிரந்தர தீர்வுக்குமான செயற்றிட்டத் தின் கீழ் பல்லவராயன் கட்டு, ஜெய புரம் வடக்கு, ஜெயபுரம் தெற்கு, மற்றும் பூநகரி உதவி அரச அதிபர் பணி மனைக் குட்பட்ட பிரதேச மக்களுக்கான நட மாடும் சேவை ஒன்று இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணி வரை ஜெயபுரத்தில் அமைந்துள்ள உதவி அரச அதிபர் பணிமனையின் உப அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பகுதி மக்கள் இந்த நட மாடும் சேவையில் பங்கு பற்றுவதன் மூலம் தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நடமாடும் சேவையில் சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகத் திணைக்களம், பூநகரி உதவி அரச அதிபர் பணிமனை, வலயக் கல்விப் பணிமனை- கிளிநொச்சி, சுகா தார வைத்திய அதிகாரி- பூநகரி, சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு- பொலிஸ் நிலையம், பிரதேச சபை- பூநகரி, சிறு வர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத் தர், தொழிற்பயிற்சி அதிகார சபை போன்ற பிரிவுகள் பங்கு பற்றி மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# உரிமை கோரப்படாத சைக்கிள்கள்

வலி.வடக்கு, ஒக். 28

தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட திருடன் ஒருவரிடம் இருந்து மீட்கப்பட்ட மூன்று சைக்கிள்கள் உரிமை கோரப்படாத நிலையில் இருப்பதாகத் தெல்லிப்பழை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

சிசிசி 64736 55560319, 20047 இலக்க சைக்கிள் களே இவ்வாறு உரிமை கோரப்படாத நிலையில் உள்ளன.

உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம- 86)

# புதிய ஆசிரிய மாணவருக்கு நவம்பரில் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஒக்.28

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக் குப் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் தேசியக் கல்லூரியில் நேர்முகப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 15,16,17 மற்றும் 18 ஆம் திகதி களில் நடைபெறும்.

தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளுக் கான அழைப்புக் கடி தங்கள் விரைவில் அனுப்பி வைக்கப் படவுள்ளன என்று பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

வணிகமும் கணக்கியலும், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், நடனம், விஞ்ஞானம் ( ஆங்கில மொழி மூலம்) ஆகிய பாடங்களுக்கான நேர்முகத் தேர்வே இவ்வாறு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பரீட்சை மண்டப இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.28


அரச அலுவலர்களுக்கு நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த சிங் கள மொழி மூல எழுத்துப் பரீட்சை யின் மண்டபங்கள் மாற்றப்பட்டுள்ளன என்று யாழ். வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டப இல - II - திருக்குடும்ப கன்னியர் மண்டப இல - I இற்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டப இல III - யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் மண்டப இல -II இற்கும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டப இல- III- சென்.மேரிஸ் வித்தி யாலயத்துக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டப இல- III சென்.சாள்ஸ் மகா வித்தி யாலயத்துக்கும் மாற்றப்பட் டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபி மகன் சைய்ப் சரணடைய விரும்பம்

## தேசிய மாற்றத்துக்கான பேரவை அறிவிப்பு



திரிபோலி, ஒக்.28

லிபிய முன்னாள் அதிபர் கேணல் மும்மர் கடாபியின் புதல்வரான சைய்ப் அல் இஸ்லாம் சர்வதேச நீதிமன்றத்தில் சரணடைய விரும்புவதாக தேசிய மாற்றத்திற்கான பேரவை அறிவித்துள்ளது.

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட சைய்ப் அல் இஸ்லாம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் சரணடைவதற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளதாக பேரவையின் அதிகாரிகள் தெரிவித்துள்ள இதேவேளை, புலனாய்வுப் பிரிவின் முன்னாள் மூத்த அதிகாரி அப்துல்லா அல் சனூசியும் நெதர்லாந்தைத் தளமாகக் கொண்ட குற்றவியல் நீதிமன்றத்தில் சரணடைய விரும்புகிறார் என்று பேரவையின் அதிகாரியான அப்தில் மஜிட்மிலகாட்டா கூறியுள்ளார்.

கடாபியின் எட்டு பிள்ளைகளில் 39 வயதான சைய்ப் அல்இஸ்லாம் மட்டுமே முக்கியமான ஒருவராகக் கருதப்படுகின்றார்.

இவர் லிபியாவின் தென் பிராந்தியத்திலுள்ள பாலைவனப் பகுதியில் தற்போது மறைந்துள்ளதாக வாழ்வதாகவும் இந்த நிலையிலே அவர் சரணடைய விரும்புகிறார் என்றும் தேசிய மாற்றத்துக்கான பேரவை குறிப் பிட்டுள்ளது.

சைய்ப் அல் இஸ்லாம் சரணடைவாராயின் கடாபி குடும்பத்தின் நான்கு தசாப்த வரலாற்றில் மற்றுமொரு முக் கியப் பகுதி முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

எனினும், சைய்ப் அல் இஸ்லாம் சரணடைவதற்கான எந்த வித பேச்சுக்கான கோரிக்கையும் இதுவரை கிடைக்கவில்லை எனச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கூறியுள்ளது.

இதேவேளை, மக்களைப் பாதுகாப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நேட்டோ அமைப்பின் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை கலந்துரையாடி வருகின்றது. (ந)

# தன் முன்னோர் மரித்த மண்ணில் தானும் மரிக்கவே கடாபி விரும்பினார்

## அவருடைய மெய்ப் பாதுகாவலர் சாட்சி

லிபியாவை விட்டு கடாபி தப்பிச் செல்வதற்கு எத்தனையோ வாய்ப்புகளும் வழிகளும் இருந்த போதும், தன் முன்னோர்கள் மரித்த அதே மண்ணில் தானும் மரிக்கவே கடாபி விரும்பினார். லிபியர்கள் தன்னை அதிகம் விரும்பியதாகத் தன்னுடைய கடைசி நிமிடம் வரையிலும் கடாபி நம்பியிருந்தார்.

இந்த தகவலை ''தி நியூ யோர்க்டெய்லி நியூஸ்'' இதழுக்கு அளித்த பேட்டியில் கடாபியின் மெய்ப் பாதுகாவலரான மன்சூர் தாவ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திரிபோலி ஆக்கிரமிப்பாளர்களால் கைப்பற்றப்பட்டு விட்டதாகத் தகவல் தெரிவிக்கப்பட்ட பின்னரும் லிபியர்கள் தன்னை அதிகம் விரும்புகிறார்கள் என்றே கடாபி நம்பினார். அவர் இப்படி நினைத்ததற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அவர் இங்குள்ள சூழ்நிலையைத் தவறாகவே கணித்து விட்டார். அவர் மட்டும் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருந்தால், சுகமான வாழ்க்கையை வாழ்ந்திருக்க முடியும் என்று வருத்தத்துடன் தெரிவித்தார்.


கடாபி அவரது மகன், அவர்களது பாதுகாப்பு அமைச்சர் அபுபக்கர் யூனிஸ் ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை லிபிய பாலைவனத்தில் அடையாளம் தெரியாத இடத்தில் புதைக்கப்பட்டனர். இருப்பினும், கடாபியின் உறவினர்கள், அவருடைய ஆதரவாளர்கள் சிலர் என ஒருசிலரை இஸ்லாமிய முறைப்படியான கடைசிக் கட்ட சடங்குகளைச் செய்ய அனுமதித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், சரியான இடத்தை மட்டும் காட்டிக் கொடுக்கவில்லை. அது தெரிந்தால் அந்த இடம் எதிர்காலத்தில் புனிதத் தலம் போல் மாற்றி விடக் கூடும் என அஞ்சியதால் அவ்வாறு செய்ததாகவும் அதிகாரிகள் கூறினர். (ந)

# சீனாவில் சமூக வலைத் தளங்களுக்கு கட்டுப்பாடு

சமூக வலைத்தளங்கள், சமூக ஊடகங்கள் குறுந்தகவல் அனுப்பும் தளங்கள் ஆகியவற்றைச் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் சீனா நடவடிக்கை எடுக்கத் தீவிரம் காட்டுகிறது.

ஆளும் கம்யூனிஸக் கட்சிக்கு ஆதரவாகவுள்ள செய்திகள் அறிக்கைகள் கருத்துக்கள் குறித்த இணையத்தள நிர்வாகத்தைப் பலப்படுத்துவது குறித்து தலைவர்கள் மட்டத்தில் பேசப்பட்டது.

இதில் மக்களிடம் பரவலாகச் செல்வாக்குப் பெற்றுவரும் மைக்ரோப்ளாக்குகள் குறித்த கட்டுப்பாட்டை அரசு வைத்திருக்கவும் கண்கணிக்காவும் வேண்டிய தேவைகள் குறித்து ஆராயப்பட்டன. (ந)




கட்டார், டோஹாவில் நடந்த 'பிரண்ட்ஸ் ஓப் லிபியா' குழுக்கூட்டத்தில் பட்டத்து இளவரசர் ஷேக் தமிம் பன் ஹமத் அல்-தானி(நடு), லிபியா தேசிய இடைக்கால கவுன்சில் தலைவர் முஸ்தபா அப்தெல் ஜலில் கலந்து கொண்டு பேசினர்.

# எரிபொருள் தாங்கிகளை இலக்கு வைத்து தாக்குதல்

காபூல், ஒக்.28

எரிபொருள் தாங்கிகளை இலக்கு வைத்து ஆப்கானிஸ்தானில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில், 50 பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின், வட பகுதியான பர்வான் மாகாணத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறிய குண்டு ஒன்று எரிபொருள் தாங்கிக்கு அருகில் வெடித்துள்ளது. இதனால் அதில் இருந்து கசிந்த எரிபொருளை, பொது மக்கள் பெற ஒன்று கூடியுள் ளனர்.

இந்த நேரத்தில் பெரியளவிலான குண்டு ஒன்று வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அந்தக் குண்டுத் தாக்குதலால் உயிரிழப்பு ஏற்படவில்லை. இதுவரையில் எந்தக் குழுவும் தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

# பிரான்ஸின் தென் பகுதியில் புயல் எச்சரிக்கை

பிரான்ஸ் நாட்டின் தென் பகுதியில் மழை காரணமாக புயல் முன்னெச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அதேசமயம் வட பகுதியில் இத்தாக்குதல் பற்றி உறுதியாக கூறப்படவில்லை.

தென்கிழக்கில் உள்ள கோட்டேடி மற்றும் புரொவென் பகுதிகளில் பெரும்புயல், காற்று போன்றவற்றால் சில இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனையடுத்து ஆலங்கட்டி மழை பெய்யலாம் என்று வானிலை ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதன் காரணமாக கடற்கரைப் பகுதிகளில் அலைகள் உயரமாக எழும்;கடல் கரைக்குள் வந்து வெள்ளமாக வழியும்; தென் பகுதியில் புயல் மழையின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆய்வாளர்கள் உறுதிபடக் கூறினர்.

வரப்போகும் பெருமழையினால் பிரான்ஸ் நாட்டின் மேற்கு கோடியில் உள்ள பனிஸ்ட்டெரெ பகுதியின் கட்டடங்கள் வெள்ளத்தில் மூழ்கக்கூடும் என்பதால் மீட்புப் படையினர் தயார் நிலையில் உள்ளனர்.

இந்தப் புயலை இயற்கைப் பேரிடர் என்று அறிவித்து நிவாரண உதவிகளை வழங்குமாறு அரசுக்கு மாகாணத் தலைவர்கள் கேட்டுக் கொண்டுள் ளனர். (ந)

# விண்ணில் பறந்த முதல் பிளாஸ்டிக் விமானம்




போயிங் விமானத் தயாரிப்பு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட உலகின் மிகவும் இலகுரகப் பயணிகள் விமானம், 787 ட்ரீம்லைனர், நேற்று முதல் முறையாக விண்ணில் பறந்தது.

உலகின் முதல் பிளாஸ்டிக் ஜெட் என்று போயிங் நிறுவனத்தால் வர்ணிக்கப்படும் இந்த விமானத்தின் கட்டுமானப் பொருள்களில் சுமார் அரைப்பகுதி, கார்பன் இழைகள் மற்றும் பிளாஸ்டிக்கால் ஆனவை. இந்த விமானம் எரிபொருளை பயன்படுத்துவதில் மிகவும் சிக்கனமானது என்று கூறப்படுகிறது.

264 இருக்கைகள் கொண்ட இந்த விமானம் டோக்கியோவிலிருந்து ஹொங்கொங்குக்கு இயக்கப்பட்டது. (ந)

# பாகிஸ்தான் தொடர்ந்து தீவிரவாதிகளுக்கு உதவி

## அமெ.விசாரணை அதிகாரி தெரிவிப்பு

பாகிஸ்தானே கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆதரவளித்து வருகிறது என்று ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானின் உளவுப் பிரிவு ஆற்றிய பங்கு குறித்து ஆராய அமெரிக்க அதிபர் ஒபாமாவால் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற சி.ஐ.ஏ. அதிகாரி ப்ரூஸ் ரெய்டல் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:

வெளிப்படையாக அமெரிக்காவின் கூட்டாளி போல நடித்து கொண்டு, உண்மையில் பாகிஸ்தான் தலிபானை ரகசியமாக ஆதரித்து வருகிறது என்ற குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் நடந்த கிளர்ச்சிக்கு பாகிஸ்தானிய ராணுவமும், பாகிஸ்தானின் உளவுப்பிரிவான, ஐ.எஸ்.ஐயும் தீவிர ஆதரவளித்ததை நாங்கள் கண்டோம். பாகிஸ்தான் தலிபானுக்காகப் பணம் திரட்டியது, தலிபானுக்கு பயிற்சி தந்தது, நேட்டோ படை கள் மீது தாக்குதல்களை நடத்த தாலிபான் கிளர்ச்சியாளர்களுடன் வல்லுநர்களையும் அனுப்பியது.

அதுமட்டுமன்றி அமெரிக்கா பாகிஸ்தானின் ஆப்கன் எல்லைக் கிராமங்களில் நடத்தப் போகும் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் குறித்து முன் கூட்டியே பாகிஸ்தானுக்கு தகவல் வழங்குவதை நிறுத்திய பின்னர் தான், இந்த ஆளில்லா விமானத் தாக்குதல்கள் வெற்றிகரமாக நடந்தன. முதலில் இந்த ஆளில்லா விமான நட வடிக்கைகள் குறித்து நாங்கள் முன்கூட்டியே பாகிஸ்தானுக்கு தகவல்கள் தெரிவிப்போம். அப்போதெல்லாம் ஒவ்வொரு முறையும், நாங்கள் தாக்க விருந்த இலக்கு தப்பி விடும். இதற்கு காரணமும் பாகிஸ்தானே என்று ரெய்டல் மேலும் தெரிவித்தார்.

எனினும் தலிபானைத் தாங்கள் ஆதரிப்பதா்க வரும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் பாகிஸ்தான் ராணுவப் பேச்சாளர் ஜெனரல் அத்தர் அப்பாஸ் மறுத்துள்ளார். (ந)

# சவூதியில் புதிய மன்னர் தெரிவு

சவூதி நாட்டின் புதிய இளவரசாக அந்த நாட்டு உள்துறை அமைச்சர் நியமிக்கப்பட உள்ளார்.

உடல்நலக் குறைவு காரணமாக சவூதியின் இளவரசராக இருந்த சுல்தான் கடந்த வாரம் காலமானார். இதைத் தொடர்ந்து புதிய அரசரைத் தெரிவு செய்யும் பணி நடந்து வந்தது. தற்போது உள்துறை அமைச்சார் நையீப் புதிய இளவரசராகத் தெரிவு செய்யப்படலாம் எனவும் அதற்கான ஒப்புதலை அரண்மனை நிர்வாகம் இன்னும் சில நாள்களில் அறிவிக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் ஒளியில் கூடைப்பந்தாட்டம் யாழ்.மத்திய கல்லூரியில் இன்று


பட்டபிளை விளையாட்டுக்கழகம்


பமிலியன்ஸ் விளையாட்டுக்கழகம்


ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம்


சென்ரலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழகம்

யாழ்ப்பாணம், ஒக்.28

சர்வதேச லயன்ஸ் கழகம் 301 'பி'யின் ஆதரவுடன் யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று மின் ஒளியில் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது.

ஆண்கள் பிரிவில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பெண்கள் பிரிவில் பமிலி யன்ஸ் விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து பட்டபிளை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் 306 'பி' 1 இன் மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்ணாண்டோ கலந்து கொள்ளவுள்ளார். (எ-23)

## ஒழுங்கு நிரல் தயாரிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.28

வலய மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான போட்டி ஒழுங்கு நிரல் தயாரிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியள வில் யாழ்.கல்வி வலயப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இதில் கோட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் வெற்றியீட்டிய உதைபந்தாட்ட அணிகளின் பொறுப்பாசிரியர்களை இந்த ஒழுங்கு நிரல் தயாரிக்கும் நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு "போட்டி ஒழுங்கமைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-23)

## கண்டி வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக.28

கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத்தினால் முதன்முறையாக ஒழுங்கு செய்யப்பட்ட தீபாவளிப் பண்டிகை விளையாட்டு விழா போட்டிகள் மற்றும் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை கண்டி திருத்துவ ஆரம்பப் பிரிவு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று.

மேற்படி நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கலந்து கொண்டனர்.

இதில் பெண்கள், ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி, பெண்களுக்கான மல்லிகைச் பூச்சரம் தொடுக்கும் போட்டி மற்றும் விநோத உடைப் போட்டிகள் இடம் பெற்றன. (23)

## சென் பற்றிக்ஸ்-ஹென்றிசிற்கும் இடையிலான உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.28

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரிக்கும் இடையிலான 14, 16, 18, 20 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 14 வயது பிரிவு அணிக்கான ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கிலும் 18 வயது பிரிவு அணிக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றுள்ளன.

16,20 வயது பிரிவு அணிகளுக்கான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது. (எ-23)

# மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.28

வட மாகாண மாற்று வலுவுள்ளோர் பாடசாலைகள் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆரம்பநாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும், கௌரவ விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளரும் கல்விப் பண் பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பதில் செயலாளருமாகிய எஸ்.இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலரும் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பதில் செயலருமான எஸ். இளங்கோவனும் கௌரவ விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலயப் பணிப்பாளர் கே.முருகவேளும் பங்குகொள்ளவுள்ளனர். (எ-23)


கோப்பாய் கோட்டமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 14 வயது பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியன் வென்ற உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி வீரர்கள் அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்களுடன். (எ-23)

## கராத்தே போட்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.28

இலங்கை கராத்தே சம்மேளனம் வருடா வருடம் நடத்தும் தேசிய மட்ட கராத்தே சுற்றுப்போட்டி நேற்று வியாழக்கிழமை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது.

மேற்படி போட்டியில் வடமாகாணத்தில் இருந்து 20 பேர் பங்கு கொள்கின்றன. (23)

## மழை காரணமாக நிறுத்தப்பட்ட ஆட்டங்கள் திங்களன்று

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ் உதைப்பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென்.றோக்ஸ் விளையட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மழைகாரணமாக இடை நிறுத்தப்பட்டு இருந்த ஆட்டங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (23)

# கே.ஸி.ஸி.ஸி, பற்றீசியன் மூன்றாமிடத்தை தமதாக்கின



யாழ்ப்பாணம், ஒக்.28

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 301 'சி' யின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் மூன்றமிடத்துக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டி மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

நேற்று மாலை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ் இந்து மகளிர் அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.


இதில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி 44: 06 என்று புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி 61:51 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையைப் பதம் பார்க்கும் பாகிஸ்தான்



இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி 4 இலக்குகள் நஷ்டத்துக்கு 281 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன் மூலம் இலங்கை அணியை விட 42 ஓட்டங்களை மேலதிகமாகப் பெற்றுக்கொண்டுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் டுபாயில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இலங்கை அணி ஆட்டம் ஆரம்பமானதிலிருந்தே தடுமாற்றத்துடன் காணப்பட்டது. ஒரு கட்டத்தில் சங்கக்கார 78 ஓட்டங்களுடன் வெளியேற இலங்கை 154 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் ஹேரத், வெலகெதர இணைந்து 9 ஆவது இலக்குக்காக 75 ஓட்டங்கள் பகிர்ந்தனர். இந்த நிலையில் ஹேரத் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதிவரை சிறப்பாக ஆடிய வெலகெதர இறுதி இலக்காக 239 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சரிக்கப்பட்டார். 2 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 48 ஓட்டங்களை வெலகெதர இலங்கைக்காக பெற்றுக் கொடுத்தார். உமர்குல், சயிட் அஜ்மல் தலா 3 இலக்குகளையும், யுனைட் கான், அப்துர் ரெஹிமான் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை பாகிஸ்தான் அணி தொடங்கியது. நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவின் போது இலக்கு நஷ்டமின்றி 42 ஓட்டங்கள் பெறப்பட்டது. ஹபீஸ் 18, உமர் 20 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

நேற்றைய ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரட்டைச் சதம் அடித்து அசத்திய தௌபீக் உமர் 27 ஓட்டங்களுடன் தம்மிக்க பிரசாத்தின் பந்து வீச்சில் வெளியேறினார். தொடர்ந்து தம்மிக்கவின் அடுத்த பந்து பரிமாற்றத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மொஹமட் ஹபீஸ் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பாகிஸ்தான் 64 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்தது.

இதன் பின்னர் இணைந்த அஷார் அலி, யுனிஸ் கான் இருவரும் இணைந்து பாகிஸ்தானின் ஓட்டச் சேகரிப்பைத் தொடர்ந்தனர். இவர்களது இணைப்பாட்டத்தின் மூலம் பாகிஸ்தான் வலுவான நிலையை அடைந்தது. மூன்றாவது இலக்குக்காக 117 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் யுனிஸ்கான் 55 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். யுனிஸ்ஸை தொடர்ந்து நுழைந்த அணித்தலைவர் மிஷ்பா அஷார் அலியுடன் இணைந்து ஆட்டத்தை தொடர்ந்தார்.

இவர்களும் மிகச் சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்து இலங்கைக்கு நெருக்கடி கொடுத்தனர். பந்து வீச்சில் இலங்கை அணி பெரிதாகச் சோபிக்கவில்லை. இறுதியில் 4 ஆவது இலக்குக்காகவும் 94 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையிலேயே இலக்கு சரிக்கப்பட்டது. அஷார் அலி தனது சர்வதேச டெஸ்ட் அரங்கில் சதம் கடந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் நேற்றைய ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி 4 இலக்குகளை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அணித்தலைவர் மிஷ்பா 40, சயிட் அஜ்மல் 5 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். இதன் மூலம் இலங்கை அணி பெற்றுக் கொண்ட ஓட்ட எண்ணிக்கையினைவிட 42 ஓட்டங்கள் மேலதிகமாகப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் 6 இலக்குகளை பாகிஸ்தான் கைவசம் கொண்டுள்ளது. பந்து வீச்சில் இலங்கையின் சார்பில் தம்மிக்க பிரசாத், டில்ஷான் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாளாகும். (15)

# இங்கிலாந்தை வீழ்த்தியதால் முன்னேற்றம்

ஐ.சி.சி ஒருநாள் போட்டிக்கான தரவரிசைப்பட்டியலில் இந்திய அணி மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது. சர்வதேச ஒரு நாள் போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில '(ஐ.சி.சி) டுபாயில் வெளியிட்டது.

இதில் இந்திய அணி ஐந்தாவது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்துக்கு 118 புள்ளிகளுடன் முன்னேறியது. சமீபத்திய இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்திய அணி 5-0 என்று கைப்பற்றியதே இந்த முன்னேற்றத்துக்கு முக்கிய காரணம்.

ஒருநாள் தொடரை முழுமையாக இழந்த இங்கிலாந்து அணி நான்காவது இடத்தில் இருந்து ஐந்தாவது இடத்துக்கு 106 புள்ளிகளுடன் பின்தங்கியது. இந்திய அணி மூன்றாவது இடத்தில் நீடிக்க இன்று டர்பனில் நடக்கவுள்ள மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்காவை வீழ்த்த வேண்டும்.

ஒருவேளை தென்னாபிரிக்க அணி வெற்றி பெறும் பட்சத்தில் இந்திய அணி மீண்டும் நான்காவது இடத்துக்கு தள்ளப்படும். தவிர தென்னாபிரிக்க அணி 120 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்கு முன்னேறிவிடும். இலங்கை அணி (119 புள்ளி) இரண்டாவது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள அடுத்து வரவுள்ள பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரை கைப்பற்ற வேண்டும். (15)

# சாய்னா நேவல் வெற்றி

பிரெஞ்ச் ஓபன் பட்மின்ரன் தொடரின் முதல் சுற்றில் இந்திய வீராங்கனை சாய்னா நேவல் வெற்றி பெற்றார். பிரான்ஸ் தலைநகர் பரிசில், பிரெஞ்ச் ஓபன் பட்மின்ரன் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சாய்னா நேவல், நெதர்லாந்தின் ஜிய் யோவை எதிர்கொண்டார். இதில் அபாரமாக ஆடிய சாய்னா 21-14, 21-9 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் சேட்டன் ஆனந்த், பிரான்சின் பிரைஸ் லவர்டசை எதிர்கொண்டார். இந்தப் போட்டியின் முதல் செட்டை பிரான்ஸ் வீரர் 21-13 எனக் கைப்பற்றினார். காயம் காரணமாக இரண்டாவது செட்டில் இருந்து சேட்டன் ஆனந்த் விலகினார். இதனால் பிரைஸ் லவர்டஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் திஜு, ஜுவாலா கட்டா ஜோடி 16-21, 8-21 என்ற நேர் செட்டில் இந்தோனேசியாவின் டான்டோவி அகமது, லிலியானா நாட்சிர் ஜோடியிடம் தோல்வி அடைந்தது. (15)

# இலங்கை வீரர்களுக்கு சம்பளம் இல்லை

இலங்கை கிரிக்கெட் சபை வரலாறு காணாத அளவிலான கடனில் தத்தளிப்பதாகவும், ஒப்பந்த வீரர்களுக்கு கடந்த ஏப்ரல் மாதம் முதல் சம்பளம் வழங்கப்படவில்லை என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இதுகுறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் உபாலி தர்மசாலா கூறியதாவது, இந்த தகவல் உண்மைதான் என்றும், இன்னும் 2 மாதங்களுக்குள் வீரர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளுடன் இணைந்து உலகக் கிண்ண கிரிக்கெட் நடத்தினோம். அதற்கான கட்டணத்தை ஐ.சி.சி இதுவரை எங்களுக்கு வழங்கவில்லை. அதன் காரணமாக கிரிக்கெட் சபை கடனில் சிக்கியுள்ளது. விரைவில் ஐ.சி.சி அந்த நிதியை தரும் என்று எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார். (15)

# கேட்டானே ஒரு கேள்வி?

- கங்குலியைப் பார்த்து



கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்துக்குள் நுழைந்த முன்னாள் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலியை பார்த்து, ஐ.சி.சி அதிகாரி ஒருவர் 'யார் நீங்கள் ?' எனக் கேட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான கடைசி ஒரு நாள் ஆட்டம் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்தது. இந்த ஆட்டம் தொடங்குவதற்கு முன்னர், 'பிட்ச் ரிப்போர்ட்' கொடுப்பதற்காக மைதானத்திற்குள் நுழைந்த கொல்கத்தாவின் 'டடாவும்', வர்ணனையாளருமான கங்குலியை, ஐ.சி.சியின் ஊழல் தடுப்பு அதிகாரி தர்மேந்தர் சிங் யாதவ், 'யார் நீங்கள் ? ' எனக் கேட்டார். அப்போது அவர், 'நான் தான் கங்குலி. 'பிட்ச் ரிப்போர்ட்' கொடுப்பதற்காக மைதானத்திற்குள் செல்கிறேன், எனக் கூறினார். இதற்கு ஒன்றும் மசியாத தர்மேந்தர் சிங் யாதவ், கங்குலியை மைதானத்திற்குள் செல்ல அனுமதி அளிக்கவில்லை. அடையாள அட்டையை காண்பிக்குமாறு கூறினார். அடையாள அட்டையை, வர்ணனையாளர் அறையில் வைத்துவிட்டு வந்த கங்குலி, மீண்டும் சென்று எடுத்து வந்தார். அதன்பின் கங்குலியை மைதானத்திற்குள் செல்ல அனுமதி அளித்தார். இது தொடர்பாக கங்குலி அமைதியாகவே இருந்து விட்டார்.

இது குறித்து மேற்கு வங்க கிரிக்கெட் சங்க துணைத் தலைவர் பிஸ்வாரப் தேய் கூறுகையில், இந்த சம்பவம் குறித்து விசாரித்து முடிவு எடுக்கப்படும். இது பற்றி கங்குலியுடன் பேச உள்ளேன், என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபை உறுப்பினர் உட்பட நன்கு பேருக்கு விளக்கமறியல்

கம்பளை, ஒக்.28

கம்பளை நகரில் வர்த்தக நிலையமொன்றினுள் புகுந்து உடைமைகளைச் சேதமாக்கிய குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் உட்பட நால்வரை எதிர்வரும் 4ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

கம்பளையில் வர்த்தக நிலையமொன்றுக்குள் ஞாயிற்றுக்கிழமை இரவு புகுந்த சந்தேகநபர்கள் அதன் உரிமையாளருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் பின்னர் இந்தக்குழுவினர் வர்த்தகநிலைய உடைமைகளைச் சேதப்படுத்தியதுடன், வர்த்தகரையும் தாக்க முற்பட்டனர் எனவும் கம்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைதுசெய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# இந்தியப் பணக்காரர் பட்டியலில் அம்பானி தொடர்ந்து முதலிடம்

டெல்லி, ஒக்.28

அமெரிக்காவின் போர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ள இந்தியப் பணக்காரர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானி தொடர்ந்தும் முதல் இடத்தைத் தக்கவைத்துள்ளார்.

முகேஷ் அம்பானி தொடர்ந்து 4 ஆவது ஆண்டாக இந்திய பணக்காரர்களில் முதல் இடத்தில் உள்ளார்.

முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு 22.6 பில்லியன் டொலராகும். அவரது சகோதரர் அனில் அம்பானி அந்தப் பட்டியலில் 13 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுவிட்டார்.

2 ஆவது இடத்தில் தொழில் அதிபர் லட்சுமிமிட்டல் உள்ளார். 3 ஆவது இடத்தில் விப்ரோ நிறுவுநர் அஜிம்பிரேம்ஜி உள்ளார்.

பணக்காரர்கள் வரிசையில் 5 ஆவது இடத்தை சாவித்ரி ஜிண்டால் எட்டியுள்ளார். இந்திய பணக்காரப் பெண்களில் சாவித்ரி முதல் இடத்தைப் பிடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## தேவை

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்துக்கு நித்திய மேளம் தேவை. பணியாற்ற விரும்புபவர்கள் ஆலய நிர்வாகத்தினருடன் தொடர்பு கொள்ளவும். சம்பள விவரம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொலைபேசி இல: 0777296475

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மட்டுவிலைச் சேர்ந்த வை.தயாகரன் என்பவரது வாகன இல. NPLK 8559 கொண்ட வரி புத்தகம், காப்புறுதி, வரி அனுமதிப்பத்திரம், போக்குவரத்து அனுமதிப் பத்திரம் என்பன முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கும் கிபிர் கடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து முல்லைத்தீவு, மின்னிசை இலத்திரனியல் கடையில் கொடுத்துதவவும்; சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0778096941, 0212290088

## நீங்காத நினைவில் 12 ஆம் ஆண்டு



7 ஆம் கட்டை ஒழுங்கை,
மல்லாகம்.


அமரர் சுவாமி நாதன்
ஸ்ரீ பாஸ்கரன்

தோற்றம்: 07.01.1932
மறைவு: 26.10.1999

பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் - மனைவி,
சகோதரர்கள், குடும்பத்தினர்.

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 20 * 08 * 1980



இறப்பு: 14 * 11 * 2004

### வரதராஜக்குருக்கள் - அரிஹரசர்மா

ஆண்டுகள் ஏழு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
எங்கு சென்றாய் - நீ
என்றும் உன் நினைவுடன்

மடம் வீதி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

# செய்தி துளிகள் ஒரே பார்வையில்

### ஜெகதீஸ்வரனை விடுதலை செய்க

இரண்டு சிறு நீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது கொழும்பு வைத்தியசாலையில் கால்விலங்கிடப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வரும் மன்னாரைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் என்ற அரசியல் கைதியின் விடுதலையில் மனிதாபிமான அணுகுமுறையை கையாண்டு அவரை விடுவிக்க வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்து நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

### ரூபா 66 கோடி அபராதம் வசூல்

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் சட்டத்தை மீறியோரிடம் 66 கோடி ரூபாவுக்கும் அதிகமான அபராதம் அறவிடப்பட்டுள்ளது. என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, நிர்ணய விலைக்கும் அதிகமாக பொருள்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட நுகர்வோர் சட்டத்தை மீறிய வர்த்தக நிலையங்களை இனங்காண்பதற்காக இந்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### திவிநெகும அங்குரார்ப்பணம்

தேசிய வேலைத்திட்டமான திவிநெகும திட்டத்தின் இரண்டாம் கட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவால் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

### மகாவலி நீர்மட்டம் குறைந்தது

வரட்சியான காலநிலை நிலவுவதால் மகாவலி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளது.

ஏனைய நீர்த்தேக்கங்களுடன் ஒப்பிடும்போது மகாவலி நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் மிகவும் குறைந்துள்ளது என அதன் நிர்வாக செயலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

### பென்குயின் ஜோடி

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலைக்கு மீண்டுமொருமுறை பென்குயின் ஜோடி ஒன்றை வழங்குவதற்கு தேசிய மிருகக்காட்சி திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மிருகங்களைக் கைமாற்றும் திட்டத்தின் கீழ் குறித்த பென்குயின்களை இறக்குமதி செய்யவுள்ளதாக அதன் பணிப்பாளர் பாஷ்வர சேனாங்க குணரத்ன தெரிவித்துள்ளார்.

### தொல்பொருள் கொள்ளையைத் தடுக்க புதிய சட்டம்

தொல்பொருள்களைக் கொள்ளையிடுவது மற்றும் அவற்றை அழிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும் நபர்களுக்கு எதிராக புதிய சட்டங்களை உருவாக்கத் தீர்மானித்துள்ளது என தொல்பொருள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

### பேசுகிறார் துமிந்த எம்.பி.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, தற்போது வைத்தியர்களுடன் உரையாடுகிறார் என ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியர்கள் வினவும் கேள்விகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தெளிவாகப் பதிலளிக்கின்றார் என அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்ட ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் நரம்பியல் விசேட நிபுணர் வைத்தியர் மஹேமி விஜேரத்ன தெரிவித்தார்.

### காட்டுத்தீயைத் தடுக்கும் புதிய திட்டம்

மத்திய மலைநாட்டில் காடுகள் தீப்பற்றுவதைத் தடுக்கும் புதிய செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய மாகாணசபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, வனங்களைச் சூழ தீப்பற்றாத ஒரு வகை மரங்களை நட்டு, தீப் பாதுகாப்பு வலயமொன்றை அமைக்கவுள்ளதாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

### குற்றத்தடுப்புப் பிரிவு அழைப்பு

டெலிஷான் தொலைக்காட்சி நிறுவனத்தின் (ரி.என்.எல்) தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் சகோதரருமான ஷான் விக்கிரமசிங்கவை வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நேற்று குற்றத்தடுப்புப் பிரிவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொலை அச்சுறுத்தல் தொடர்பிலான முறைப்பாடு ஒன்றின் அடிப்படையிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளது. (சி)

# கிணற்றினுள் தவறி விழுந்து இளம்தாய் பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், ஒக்.28

அதிகாலை நேரம் கிணற்றில் தண்ணீர் அள்ளிய தாய் ஒருவர் கிணற்றினுள் தவறி விழுந்து பரிதாபகரமாக மரணமானார்.

இந்தச் சம்பவம் நீர்வேலி வடக்கில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த மோகனதாஸ் ஜோதிலட்சுமி (வயது - 36) என்பவரே மரணமானார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற ஓய்வு பெற்ற நீதிவான் திருநாவுக்கரசு மரண விசாரணை மேற்கொண்டார். நீதிவானின் உத்தரவுக்கு அமைய கோப்பாய்ப் பொலிஸார் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் நான்கு பிள்ளைகளின் தாய் ஆவார். (த-4)

## சேர்த்து வாசிக்கவும்

27.10.2011இல் 18 ஆம் பக்கத்தில் வெளிவந்த சின்னத்தம்பி நடராசா மரண அறிவித்தலில் திவ்யேஸ்வரிவின் அன்புக் கணவரும் எனச் சேர்த்து வாசிக்கவும்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை நடராசா
(ஓய்வுபெற்ற இலிகிதர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் மல்லாவி, வடகாட்டை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும்கொண்ட சங்கரப்பிள்ளை நடராசா 20.10.2011 வியாழக்கிழமை சென்னையில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வ.ஐ. சண்முகம் பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ராதாராணியின் பாசமிகு கணவரும், ராகவன் (ஜேர்மனி), ரஜனி (சென்னை), தாமரைச் செல்வி (கனடா), றமணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வைசாலியின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வ.ஐ.ச. ஜெயபாலன் (நோர்வே), வாணிதாசன் (ஜேர்மனி), கனகரத்தினம் (கொல்லவிளாங்குளம்), பாரதிதாசன் (ஜேர்மனி), லலிதா (லண்டன்), சந்திரவதனி (லண்டன்), ஸ்ரீறஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2011) வெள்ளிக்கிழமை சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப10 மணியளவில் சென்னை போரூர் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி தம்பிராசா
சியாமளாதேவி.

சிவமணி வாசம்,
நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு.

## திருமதி சிவசுப்பிரமணியம் - நல்லநாயகம்

அல்வாய் வட்டுவத்தையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சி.நல்லநாயகம் 24.10.2011 கனடாவில் காலமானார்.

அன்னார் சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், அல்வாய் வட்டுவத்தையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் மகளும், இதே இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்புடையாரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம், தனேஸ்வரி, மகேஸ்வரி, குணேஸ்வரி, மாணிக்கவாசகர் ஆகியோரின் சகோதரியும், கனடாவைச் சேர்ந்த பொறியியலாளர்களான சண்முகானந்தா, தயானந்தா, சித்திரானந்தா விவேகானந்தா ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2011) சனிக்கிழமை நண்பகல் யோக், ரொறன்ரோ, கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அ.நிர்மலாதேவி
(அப்புத்துரை விதானையார் மகள்)

சுழிபுரம் மத்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையில்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

வனங்களில் நாளாந்தம் கோடிக்கணக்கில் நட்டம் ஏற்படுகின்றது என்றும், முறையான நிர்வாக முறைமை இல்லாததே இதற்குப் பிரதான காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சுகளில் ஏற்படும் நட்டத்தால் அரச நிர்வாகம் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளது என்றும், இதனால் வெளிநாடுகளில் அதிக வட்டிக்குக் கடன்பெறவேண்டிய நிலை

ஏற்பட்டுள்ளது என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை அரசு 2.5 சதவீத வட்டிக்குப் பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதற்கு உலக நாடுகளிடம் 6.5 சதவீதத்திற்கு கடன் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது என ஜே.வி.பி. அண்மையில் குற்றஞ்சாட்டியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அமைச்சுகளின் வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களில் திருப்தி இல்லை என்றும், இந்த வேலைத் திட்டங்களில் சில மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்றும் தெரியவந்துள்ளது என அறிய முடிகின்றது.

அமைச்சர்களின் தகைமைகளைக் கருத்திற்கொள்ளாது அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு சில முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்டமையும் நட்டம் ஏற்படுவதற்குக் காரணம் எனக் கூறப்பட்டுள்ளது. இந்தத் திடீர் மாற்றத்துக்கு இதுவும் ஒரு பிரதான காரணம் எனத் தெரியவருகிறது .

இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தபோதிலும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இங்கு அமைச்சுகளின் எண்ணிக்கை அதிகம்.

ஒவ்வொரு துறைக்கும் அமைச்சுகள் நியமிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக தெங்கு அபிவிருத்திக்கும் அண்மையில் அமைச்சரொருவரை நியமித்தது அரசு. அதேபோன்று ஆலோசகர்கள் உட்பட முக்கியஸ்தர்களும் நியமிக்கப்பட் டுள்ளனர்.

இவ்வாறு ஒவ்வொரு துறைக்கும் பொறுப்புவாய்ந்தவர்கள் இருந்தபோதிலும் ஏன் அத்துறைகளில் தொடர் நட்டம் ஏற்படுகின்றது என எதிர்க்கட்சிகள் கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளன.

எதிர்க்கட்சிகளின் அழுத்தங்களையும் கருத்திற்கொண்டே அமைச் சரவையை மாற்றியமைக்க அரசு தீர்மானித்துள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. எது எப்படியிருப்பினும், நாடாளுமன்றில் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்த அதிரடி மாற்றங்கள் இடம்பெற்றே தீரும் என உறுதிபடத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதிஒதுக்கீட்டுச் சட்ட மூலம் அண்மையில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அடுத்த மாதம் 25ஆம் திகதி வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் அது வாதத்துக்கு விடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அமைச்சுகளின் கீழ் இயங்கும் முக்கிய நிறுவனங்களில் தலைமைப்பீடத்திலும் மாற்றம் செய்யப்படும் என அறிய முடிகின்றது.

(த-சி)

# கூட்டமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. தலைமையகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தி உள்ளார்.

அமெரிக்கத் தலைவர்களுடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அரச தரப்பும் ஏட்டிக்குப் போட்டியாக ஐ.நா. பொதுச் செயலரை சந்தித் திருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்திருக்கின்றனர்.

ஐ.நா. பொதுச் செயலரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சந்தித்துப் பேசுவது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அதனை முந்திக்கொண்டு ஜனாதிபதியின் விசேட தூதுவராக அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஐ.நா. பொதுச் செயலரை சந்தித்திருக்கிறார். இந்தச் சந்திப்பில் ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கொஹன்ன, பிரதித் தூதுவர் சவீந்திர சில்வா ஆகியோரும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புடனான அமெரிக்கத் தலைவர்களின் சந்திப்பு நேற்றுமுன்தினம் சுமார் 8 மணி நேரம் தொடர்ந்ததாக அங்கிருந்த கிடைத்த செய்திகள் தெரிவித்தன. இந்த 8 மணி நேர சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. இந்த நிலையில் சந்திப்பு நேற்றும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தில் தொடர்ந்து நடை பெற்றதாக தெரியவருகிறது.

கூட்டமைப்பினர் ஐ.நா. பொதுச் செயலரைச் சந்திக்க முன்னர் அமைச்சர் மஹிந்த சமரசிங்க முந்திவிழுந்து அவரைச் சந்தித்திருக்கும் நிலையில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரின் மூன்றாம் குழுக் கூட்டத்தில் பக்க நிலை சந்திப்பாகவே இது இடம் பெற்றதாக இலங்கை அரசு கூறியுள்ளது.

ஆயினும் 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கைக்கு அமைய, இலங்கையுடன் நடைபெறும் ஐ.நாவின் கலந்துரையாடலின் ஒரு பகுதியாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக ஐ.நா அறி வித்துள்ளது.

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக மேலதிக விளக்கங்களையும் இலங்கைத் தரப்பின் நியாயங்களையும் எடுத்துக் கூறவே, அமைச்சர் மகிந்த சமரசிங்கவை ஐ.நாவுக்கு அனுப்பியிருந்தார் ஜனாதிபதி மஹிந்த என்றும் கூறப்படுகிறது.

அவர் இலங்கைத் தரப்பு நியாயங்களை எடுத்துக் கூறியுள்ள போதும், ஐ.நா பொதுச்செயலர் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்நாட்டுப் போரில் இருந்து முற்றாக மீள்வதற்கும், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் பொறுப்புக்கூறுவது (போர்க்குற்றங்களுக்கு) முக்கியமானது என்று ஐ.நா பொதுச்செயலர், மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக ஐ.நா செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

வடக்கில் மீள்குடியமர்வு மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுடன், கௌரவமான அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தேசிய கலந்துரையாடல் நடத்தப்படுவதும் முக்கியமானது என்றும் பான் கீ மூன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை நடந்த இந்தச் சந்திப்பின் போது, எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி வெளியிடப் படவுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஒரு ஆண்டு கழித்து ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்க இலங்கை அரசின் சார்பில் மகிந்த சமரசிங்க கால அவகாசம் கோரியதாகவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக இன்னர்சிற்றி பிரஸ் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்துள்ள மகிந்த சமரசிங்க, 2012 ஒக்ரோபரில் ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவை[illegible] நல்லிணக்க ஆணைக்குழு[illegible] சமர்ப்பிக்கப்படும் என்று கூறியுள்ளார். (த)

# வடக்கு அபிவிரு...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

ருத்தித் திட்டங்கள் ஜப்பான் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ். போதனா வைத்தியசாலை புனரமைப்பு, வவுனியா - கிளிநொச்சி பரிவர்த்தனை இணைப்புகள், கண்ணிவெடி அகற்றும் பணிகள், ஜீவனோபாயத் திட்டங்கள் போன்றன ஜப்பான் அரசு முன்னெடுத்து வருகின்றது.

இதற்கிடையில், தற்போது ஒதுக்கப்பட்ட நிதி மூலம் மேலும்பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார் அவர்.இந்த ஊடகவியலாளர் மாநாட்டின்போது ஜப்பான் அரசினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஐ.ஓ.எம். நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது. (து-சி)

# மனித உரிமைப்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

யுடையதாக இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.கடந்த மாதம் ஜெனீவாவில் இடம்பெற்ற சம்பவங்கள் குறிதது அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார். தருஸ்மான் அறிக்கையை ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆவணமாக ஐரோப்பிய ஒன்றியம் கருதிச் செயற்படக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தருஸ்மான் அறிக்கையை தயாரித்தவர்கள் இலங்கை தொடர்பில் விசாரணை நடத்தும் எந்தவிதமான அதிகாரமும் கிடையாது என நிபுணர் குழுவினரே ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியம் எந்தவொரு முடிவினையும் எடுக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடுகள் விதிகளை மீறிச் செயற்படக் கூடாது எனவும் அது ஆபத்தானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# இலங்கை அரசு...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

ரையாடலின் முடிவில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொழும்பில் நடைபெறவுள்ள உலகளாவிய நடவடிக்கைகளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் மாநாட்டில் இலங்கையின் வடபகுதி நிலைமை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவே உலக நாடளுமன்ற குழுவினர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். என்றும் அவர் கூறினார்.

உலகளாவிய நடவடிக்கைகளுக்கான நாடாளுமன்ற குழு உறுப்பினர்களில் ஐவர் நேற்று வடபகுதிக்கு வந்திருந்தனர் இங்குள்ள பல்வேறு இடங்களுக்கும் சென்ற அவர்கள் நிலைமைகளை நேரில் கண்டறிந்தனர். அந்தக் குழுவில் நேற்று வருகை தந்த நாடாளும்ன்றக் குழுவில் பிரிட்டனின் லோரட்கிரோஜ், தென்னாபிரிக்காவின் பிராந்தியமான சிராலியோனின் பேனாட் டீலாகி, பங்களாதேஷின் நில்பர் சவுத்திரிமுனி, சுரிரேமின் அஷிஷ், நியூஸிலாந்தின் கஷ்ரப் சவுத்திரி ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.

''கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்தபோது இருந்த நிலைமையை விட தற்போது வித்தியாசமாக மேம்பட்டதான சூழலை உணருகின்றேன்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர் குழுவை தான் அழைத்து வரவில்லை. நானும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியிலே இங்கு வந்துள்ளேன். எவரையும் நான் அழைத்து வரவில்லை. தமிழ் மக்களுக்காக எதையாவது செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன் என்றார் நாச்சியப்பன்.

இங்குள்ள நிலைமைகளை இங்கு வந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவதானித்தால் அவர்களும் தமிழ் மக்களுக்கு ஏதாவது உதவி செய்வார்கள் என்று தான் எதிர்பார்க்கிறார் என்றும் சுதர்சன நாச்சியப்பன் கூறினார்.

இந்தியாவில் இங்குள்ள தமிழ்க் கட்சிகளை அழைத்து நடத்திய மாநாடு தொடர்பாக கேள்வியெழுப்பியதற்கு தன்னைப் பொறுத்தவரையில் அது வெற்றிகரமான மாநாடுதான் என்றார். (உ-15)

# பளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு நால்வரில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றது. இதன்போது பஸ்ஸில் பயணித்துக்கொண்டருந்த நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த ச.கருபைவரதன்(வயது -48), பளை, வண்ணாங்கேணியைச் சேர்ந்த இ.நாகராசா (வயது -76) மற்றும் வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தைச் சேர்ந்த மாத்தறை, அக்குரஸ்ஸ பகுதியில் வசிக்கும் குணதிலக கருணா சேன (வயது -30) மற்றும் சமரதுங்க இந்திக்க(வயது -20) ஆகிய நால்வரும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். இவர்களில் நாகராசா, இந்திக்க ஆகிய இருவருமே போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். விபத்தில் காயமடைந்த மற்றைய இருவரும் பளை வைத்தியசாலையில் வெளிநோயளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச்சென்றனர்.

விபத்தின் போது பயணிகள் பஸ் கடும் சேதத்துக்குள்ளாகியதாக தெரிவிக்கப்பட்டது. (த-4-207)

# உள்நாட்டிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். கூட்டமைப்பின் மேற்குலக பயணம் தொடர்பாக சிங்கள அரசியல் தலைமைகள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்புகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

கூட்டமைப்பின் எம்.பிக்கள் அமெரிக்க அரசின் அழைப்பையேற்று அங்கு சென்றுள்ளார்கள். இதை அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ மற்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினர் ஆகியோர் கடுமையாக எதிர்க்கின்றனர். அதேபோல் அரசில் இருக்கின்ற இன்னும் சில அமைச்சர்களும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

கூட்டமைப்பினர் உள்நாட்டில் பேச்சுகளை நடத்த மறுத்துவிட்டு வெளிநாடு செல்லவில்லை. அரசுடன் பல சுற்றுப்பேச்சுகளைக் கூட்டமைப்பு நடத்தியுள்ளது. ஆனால், அந்தப் பேச்சுகளுக்கு எந்தவித பலாபலனும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

அரசியல் தீர்வு ஒருபுறமிருக்க, அன்றாட பிரச்சினைகளில்கூட தீர்வு காணப்படவில்லை; நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் தடுப்புக்காவல் கைதிகளுக்கு நியாயம் கிடைக்கவில்லை; தொடர்ச்சியாக வடக்கில் தமிழ் சமுதாயத்தின் பல்வேறு தரப்பினர் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்படவில்லை; வடக்கின் குடிப்பரம்பலை மாற்றி, திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை முன்னெடுக்கும் முயற்சிகள் நிறுத்தப்படவில்லை; தமிழ்ப் பகுதிகளில் இருக்கக்கூடிய இராணுவ பிரசன்னம் குறைக்கப்படவில்லை. இப்படி எத்தனையோ சொல்லிக்கொண்டு போகலாம்.

பிரதமர் டி.எம்.ஜயரட்னவோ, வெளிநாடு சென்று பேசத் தேவையில்லை. உள்நாட்டில் ஆறுமாதத்திலே பேசித் தீர்ப்போம் என வாக்குறுதி அளித்துள்ளார். யுத்தம் முடிந்து தீர்வு தருகின்றோம் என்று சொல்லி இன்று பல ஆறுமாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் எத்தனை ஆறுமாதங்கள் காத்திருக்க வேண்டும் என்பதையும் பிரதமர் தெளிவுப்படுத்த வேண்டும்.

கூட்டமைப்புடன் பேச்சுகள் நடத்துகின்ற அமெரிக்க மற்றும் இந்திய அரசுகள்தான் இலங்கையின் போர் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியவர்களாகும். எனவே, அரசியல் தீர்வைப் பெற்றுத்தர வேண்டிய கடப்பாடு இந்நாடுகளுக்கு இருக்கின்றது. இதுவும் கூட்டமைப்பினரின் வெளிநாடு பயணத்திற்கு வழியேற்படுத்தியுள்ள அடிப்படைக் காரணமாகும். இதை இலங்கை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

- இவ்வாறு மனோ கணேசன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துக்கு இடையூறாக வாகனம் ஓட்டியவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.28

போக்குவரத்துக்கு இடையூறாகவும் அபாயகரமாகவும் வாகனம் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக இரண்டுபேர் யாழ்.நீதிமன்றில் 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

யாழ். பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு வாகனம் செலுதிச் சென்றபோதே இவர்கள் மீது யாழ். பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு இவர்கள் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

அதன்போது அரியாலைப் பகுதியில் இவ்வாறு வாகனம் செலுத்திச் சென்ற மன்னார் பள்ளிக்குடாவைச் சேர்ந்த நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அபாயகரமாக வாகனம் செலுத்தியதற்காக ஆயிரத்து 500 ரூபாவும், பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச் செயற்பட்ட குற்றத்துக்காக ஆயிரம் ரூபாவும் அபாராதம் செலுத்தினார்.

யாழ். ஸ்ரான்லி வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாக அபாயகரமாக வாகனம் செலுத்திய குற்றத்துக்காக யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவான் ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார். (து-4)

# நல்லூர் கந்தசஷ்டி திருவிழாவுக்காக வாகனங்களுக்கு மாற்றுப்பாதை

யாழ்ப்பாணம், ஒக்.28

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இடம்பெறும் கந்தசஷ்டி திருவிழாவுக்கு ஏதுவாக நேற்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை வரை பருத்தித்துறை வீதியூடாக விசேட போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை நேற்று அறிவித்துள்ளது.

உற்சவ காலத்தில் மாலை 4 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் பயணிப்பதற்கு சைக்கிள்கள் உட்பட அனைத்து வாகனங்களும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் - பதிலாக யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை வீதியூடாகச் செல்லும் அனைத்து வாகனங்களும் ஆனைப்பந்திச் சந்தியில் இருந்து நாவலர் வீதி, நல்லூர் 2 ஆம் குறுக்கு வீதி ஊடாக பயணிக்க வேண்டும் என்றும் -

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் வாகனங்கள் நல்லூர் 2 ஆம் குறுக்கு வீதியூடாகப் பயணிக்க வேண்டும் எனவும் யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது. (த-10)

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவையில் யாழ். நகரின் மையத்தில்
புதிய பொருளியல் கல்லூரி
எனும் புதிய உதயம்
கலை, வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம்:- 29.10.2011 சனி காலை 8.00 மணி
புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

தீபாவளி Special Offer!!!

| SAMSUNG | IBM | OPTIMA |
|---|---|---|
| 2.4 PGA Processor | 2.6PGA Processor | 3.2 LGA Processor |
| SAMSUNG Board | IBM Board | ASUS DDR 2 Board |
| 512 MB DDR Ram | 1 GB DDR 1 Ram | 1 GB Ram |
| 80 GB Hard Disk | 40 GB Hard Disk | 160 GB Hard Disk |
| DVD Combo Drive | DVD Combo Drive | DVD Combo Drive |
| ATX Tower Casing | ATX Tower Casing | ATX Tower Casing |
| Keyboard | Keyboard | Keyboard |
| Mouse | Mouse | Mouse |
| 9,750/= | 11,500/= | 15,500/= |

| | |
|---|---|
| Computer Table | 2650/= |
| LGA / PGA Board | 2500/= |
| 512 MB DDR 1 Ram | 1250/= |
| 256 MB SD Ram | 600/= |

PC MATE
Computer Sales & Repair
174/16, Temple Road, Jaffna.
021 222 4691
077 968 9043
077 053 0566

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
25% கட்டணக் கழிவு

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

அனைத்துப் பிரிவுகளுக்கும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 13A, Annai Teresa Lane, (Near Rambaikulam Girls Convent) Rambaikulam, Vavuniya. Tel: 024 [illegible]

# உயர் பதவிகளில் 297 வெற்றிடங்கள் வடக்கு மாகாண சபையில் இந்த நிலை

## பணிகளை முன்னெடுக்க முடியாமல் திணறும் திணைக்களங்கள்

அச்சுவேலி, ஒக். 28

வடக்கு மாகாணத்தில் எட்டு சேவை தர நிலையில் உள்ள உயர் பதவிகளிலும் 297 வெற்றிடங்கள் உரியமுறையில் பூர்த்தி செய்யப்படாமல் வெற்றிடமாக இருக்கின்றன. இந்த நிலையில் சகல திணைக்களங்களிலும் அமைச்சுக்களில் உரியமுறையில் செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் இலங்கை நிர்வாக சேவையில் 54 வெற்றிடங்களும், இலங்கை கணக்காளர் சேவையில் 35 வெற்றிடங்களும், இலங்கை பொறியியலாளர் சேவையில் 17 வெற்றிடங்களும், இலங்கை திட்டமிடல் சேவையில் 6 வெற்றிடங்களும், இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 156 வெற்றிடங்களும், இலங்கை விவசாய சேவையில் 13 வெற்றிடங்களும், இலங்கைக் கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் 15 வெற்றிடங்களும் இலங்கை கட்டடக் கலைஞர் சேவையில் ஒரு வெற்றிடமும் ஆக மொத்தம் எட்டு சேவை தர நிலையிலும் 297 பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் காலியாக இருந்து வருகின்றன.

இந்த பதவி வெற்றிடங்கள் அனைத்தும் நாடளாவிய சேவையை சேர்ந்தவையாக இருப்பதால் இதனைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மாகாண நிர்வாகம் மேற்கொள்ளமுடியாது. மத்திய அரசே இதனை மேற்கொள்ளவேண்டும். அந்த வகையில் இந்தப் பதவி வெற்றிடங்களுக்கான தெரிவுகளை இலங்கை பொதுச் சேவைகள் ஆணைக் குழுவும் சம்பந்தப்பட்ட அமைச்சுமே மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யுத்த சூழ்நிலை காணப்பட்டமையினால் வடக்கு மாகாணத்தில் காலியாகிவந்த பதவி வெற்றிடங்கள் உரிய முறையில் நிரப்பப்படாமல் இருந்துவந்ததாகக் கூறப்பட்டபோதும் யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் நிறைவடையப் போகின்ற நிலையிலும் அவற்றை உரிய முறையில் நிவர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

சேவைத்தர நிலையில் உள்ள எட்டு சேவைகளையும் சேர்ந்த பதவியில் பெருமளவு பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதால் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அமைச்சுக்களின் செயற்பாடுகளை உரிய முறையில் நிறைவு செய்வதில் தடங்கல்கள் தாமதங்கள் ஏற்படுவதோடு இந்த பதவிகளுக்கு உயர்வு பெறுவதற்குத் தகுதியான பலர் பதவி உயர்வுக்காக காத்திருப்பதோடு; உரிய வேளையில் பதவி உயர்வு கிடைக்காமையால் 60 வயது வந்தவுடன் பதவி உயர்வு இன்றியே ஓய்வு பெற்றுச் செல்வதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (த-11)

# யாழ். ஆஸ்பத்திரி கன்ரீனில் காலாவதியான பால் பைக்கற்றுகள்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ். போதனா வைத்திய சாலையில் இயங்கும் சிற்றுண்டிச்சாலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான பெருந்தொகை 'கொத் மலே' பால் பைக்கற்றுக்கள் நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன.

வைத்தியசாலைப் பொது சுகாதார பரிசோதகருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது இந்தப் பைக்கற்றுக்கள் கண்டுபிடிக்க பட்டு அழிக்கப்பட்டன. சுமார் 45 இற்கும் மேற்பட்ட காலாவதியான பைக்கற்றுக்கள் இவ்வாறு அழிக்கப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (த-4)

# லிபிய இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சட்டத்தரணி பார்ஸ்டன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அவர், லிபியாவில் புரட்சிப் படையினர் ஆரம்பத்தில் இருந்தே போர்க் குற்றங்களை புரிந்து வந்துள்ளனர். போர்க்குற்றறத்தை மீறி ஏராளமான இராணுவத்தினரையும் அப்பாவிகளையும் கொன்று குவித்துள்ளனர்.

கடாபி மற்றும் அவரது மகன் கொல்லப்பட்டதும் போர் விதிமுறைகளுக்கு எதிரானதாகும். எனவே, இதுதொடர்பாக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர இருக்கிறோம்.

இடைக்கால அரசுக்கு லிபியாவை ஆளுவதற்கு எந்த உரிமையும் கிடையாது. அவர்கள் ஆட்சியை கடாபியின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (த-சி)

கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு
உயர்தர தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட ஒருநாள்/ஒரு கிழமை/இரண்டு கிழமை ஊர்க்கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. விலை ரூ-75/= இலிருந்து
தொடர்புகளுக்கு: 021 7200616

வான் சாரதி தேவை
50 வயதுக்கு மேற்பட்டவர் மட்டும் தொடர்புகொள்க.
0718474325

தமிழ்
A.K.கீர்த்திராஜன் B.A (Hons)
A/L 2012 (வினா விடை வகுப்பு)
A/L 2013 (ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.)
சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் வகுப்புக்கள் நடைபெறும் நேர அட்டவணை அலுவலகத்தில் பெறவும்
புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

LOGIC - P.கமல்

| A/L 2012 sat, sun - 8am | A/L 2013 sat, sun - 9am |
|---|---|
| விஞ்ஞான முறைகள் | அனுமானம் |

NEW ECONOMIC COLLEGE
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

வரலாற்றில் புதியதோர் வரலாறு படைப்போம்
A/L வரலாறு
R.R.ஆனந்தன்
A/L 2012(வினாவிடை வகுப்பு)
A/L 2013(ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்)
சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் வகுப்புக்கள் நடைபெறும்
நேர அட்டவணை அலுவலகத்தில் பெறவும்.
புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

பதவி வெற்றிடம்
யாழ்.நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகைமை யுள்ள 25 க்கும் 40வயதுக்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.
★க.பொ.த.உயர்தரச் சித்தி
★பூரணத்துவமான கணினி அறிவு
★வாடிக்கையாளர்களுடன் நல்லுறவைப் பேணும் ஆற்றல்/ நிதி அனுபவம்.
மேற்படி தகைமையுடையவர்கள் தொலை பேசி இலக்கத்துடன் கூடிய சுயவிவரக் கோவையினை 05.11.2011 க்கு முன் கிடைக்கக் கூடியவாறு
K.K. பிள்ளை எரிபொருள் நிரப்பு நிலையம்,
இல: 207,K.K.S வீதி.
என்னும் முகவரிக்கு
அனுப்பிவைக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.